இரத்தாம்பரசாயம் irattāmpara-cāyam, *n.* <இரத்தாம்பரம்+. Red dye; சிவப்புச்சாயம். *Pond.*

இரத்தாம்பரம் irattāmparam, *n.* <*rakta*+. A tree; மரவகை. *Pond.*

இரத்திரி irattiri, *n.* cf. இரத்தி. Fig tree; இத்தி. (W.)

இரத்தினசிரசு irattiṉa-ciracu, *n.* <*ratna-śīrṣa*. Temple with 393 towers and 50 storeys; 393 சிகரங்களையும் 50 மேனிலைக் கட்டுக்களையு முடைய கோயில். (சுக்கிரநீதி, 230.)

இரத்தினம் irattinam, *n.* Galangal; அரத்தை. (சங். அக.)

இரத்தினி irattiṉi, *n.* <*ratni*. (W.) 1. Cubit measured with closed hand; பிடிமுழம். 2. Ulna; முன்கைப் பேரெலும்பு.

இரதம்[1] iratam, *n.* <*ratha*. (நாநார்த்த.) 1. Leg; கால். 2. Body; உடல். 3. *Vañci* tree; வஞ்சிமரம். 4. Vehicle; வாகனம்.

இரதம்[2] iratam, *n.* <*rada*. Writing; எழுதுகை. (நாநார்த்த.)

இரதம்[3] iratam, *n.* <*rasa*. 1. Desire, affection; அனுராகம். (நாநார்த்த.) 2. Water; நீர். (நாநார்த்த.) 3. Chyle, a constituent element in the human body, one of *catta-tātu*, q. v.; சத்ததாதுக்களுளொன்று. (சூடா.) 4. Strength; வலி. (நாநார்த்த.) 5. Poison; விஷம். (நாநார்த்த.)

இரதம்[4] iratam, *n.* cf. இரத்தி. Jointed ovate-leaved fig; இத்தி. (வை. மூ.)

இரதரேணு irata-rēṇu, *n.* <id.+. A measure of four atoms; பரமாணு நான்கு கொண்ட நீட்டலளவை. (சிற்பசாத். 18.)

இரதன் iratan, *n.* (அக. நி.) 1. Eye; கண். 2. Parrot; கிளி.

இரதனை iratanai, *n.* cf. *rasanā.* 1. Galangal; அரத்தை. 2. Tongue; நா.

இரதாங்கம் iratāṅkam, *n.* <*rathāṅga.* (நாநார்த்த.) 1. Chariot-wheel; தேர்க்கால். 2. Cakra bird; சக்கரவாகப்புள்.

இரந்திரம் irantiram, *n.* <*randhra.* Subterraneous passage; சுருங்கை. (நாநார்த்த.)

இரம்பிகம் irampikam, *n.* cf. இரம்பிலம். Pepper; மிளகு. (சங். அக.)

இரம்மியம் irammiyam, *n.* <*ramya.* (நாநார்த்த.) 1. That which is lovable, desirable; விரும்பத்தக்கது. 2. That which is beautiful; அழகிது.

இரவணம் iravaṇam, *n.* <*ravaṇa.* (நாநார்த்த.) 1. Braying of a donkey; கழுதை கத்துகை. 2. Beetle; வண்டு.

இரவிகாந்தாக்கினி iravi-kāntākkiṉi, *n.* <*ravi*+. A kind of fire, one of *pañcākkiṉi*, q.v.; பஞ்சாக்கினியு ளொன்று. (சங். அக.)

இரவிபீஜம் iravi-pījam, *n.* <id.+. Camphor; தூடம். (சங். அக.)

இரவிபுடபுத்தி iravi-puṭa-putti, *n.* <id. +. True diurnal motion of the sun in his orbit; சூரியனது உத்தமபுடம். (W.)

இரவிமத்திமபுத்தி iravi-mattima-putti, *n.* <id.+*மத்திமம்*+. The mean daily motion of the sun in his orbit; சூரியனது மத்திமபுடம். (W.)

இரவு[1] ravu, *n.* perh. இரங்கு-. Mercy, compassion; இரக்கம். (அக. நி.)

இரவு[2] iravu, *n.* Tube-in-tube wood; பன்றிவாகை. (L.)

இரவுச்சோறு iravu-c-cōṟu, *n.* <*இரவு*+. Supply of food at night, to government menial servants; அரசாங்கக் கீழ்த்தரப் பணியாளர்க்கு இராக்காலத்திலிடும் அன்னம். (T. A. S. ii, 65.)

இரவேசு iravēcu, *n.* <U. *rawis.* Fine, tender betel; தளிர் வெற்றிலை. *Madr.*

இரவைக்கு iravaikku, *adv.* <*இரவு*. To-night; for the night; இராப்பொழுதுக்கு. **இரவைக்குப் புழுக்குக் கறியமுது** (S. I. I. vii, 267).

இரவ்தாளிக்கரும்பு irastāḷi-k-karumpu, *n.* <*இரசதாளி*+. A species of sugarcane; செங்கரும்புவகை.

இரவ்து[1] irastu, *n.* <Persn. *rasad.* Stores, provisions for army; சேனைக்குரிய உணவுப் பொருள். (W.)

இரவ்து[2] irastu, *n.* cf. *ரஸ்தாளி.* A kind of plantain; வாழைவகை. (வை. மூ.)

இரக்ஷணியம் irakṣaṇiyam, *n.* <*rakṣaṇya.* Salvation; மோட்சம். பூவலயத்துக் கிரக்ஷணியம் பொலியவரு புண்ணியப் பகலே (இரக்ஷணிய. பக். 62).

இரக்ஷணை irakṣaṇai, *n.* <*rakṣaṇā.* Salvation; மோட்சம். முதிதராதலத் திரக்ஷணை சமைத்திடு முறைமை (இரக்ஷணிய. பக். 65).

இராக்கதம் irākkatam, *n.* <*rākṣasa.* 1. A lineal measure of ten *tālam;* பத்துத்தாலங் கொண்ட ஒரு நீட்டலளவை. (சுக்கிரநீதி, 232.) 2. (Śaiva.) A mythical world of the Rudras; உருத்திர புவனங்களுள் ஒன்று. (சி. போ. 2, 3, பக். 214.)

இராக்கதி irākkati, *n.* <*rākṣasī.* A kind of long zedoary; சன்னக்கசீசோலம். (நாநார்த்த.)

இராகவம் irākavam, *n.* A large fish, capable of devouring *timiṅkilakilam;* திமிங்கில கிலத்தை விழுங்கவல்ல பெரியமீன். (சுக்கிரநீதி, 146.)

இராகாதனம் irākātaṉam, *n.* <*rāga*+*āsana.* (Yōga.) A kind of yōgic posture; யோகாசனவகை. இராகாதனமாவது பிடரியி லேறிட்டகால் முன்தொங்கக் கையிரண்டும் முன்னேயூன்றியிருக்கை (தத்துவப். 108, உரை).

இராகினி irākiṉi, *n.* prob. *rāgiṇī.* Betel leaf; வெற்றிலை. (T. C. M. ii, 2, 429.)

இராச்சியக்கலக்கம் irācciya-k-kalakkam, *n.* <*இராச்சியம்*+. Cataclysm; anarchy; அராசகம். *Pond.*

இராச்சியப்புரட்டு irācciya-p-puraṭṭu, *n.* <id.+. See இராச்சியக்கலக்கம். *Pond.*

இராச்சியவலங்கோலை irācciya-v-alaṅkōlai, *n.* <id.+. See இராச்சியக்கலக்கம். *Pond.*

இராசகம்பீரன் irāca-kampīraṉ, *n.* <*rāja-gambhīra.* A title of Vīrarājendra Cōḷa; வீரராசேந்திர சோழனது பட்டப்பெயர்களு ளொன்று. இராசகம்பீரனை வாழ்த்தினவே (தக்கயாகப். 774).

இராசகரம் irāca-karam, *n.* <*rāja-kara.* Government; அரசாங்கம். (S. I. I. v, 512.)

இராசகேசரி irāca-kēcari, *n.* <*rajakēsari*. A title assumed by certain Cōḷa kings; சோழமன்னர்களிற் சிலர் தரித்துவந்த பட்டப்பெயர். (கலிங. 178.)

இராசசக்கரம் irāca-cakkaram, *n.* <*rājan* +. King's command; அரசாணை. (தக்கயாகப். 2, உரை.)

இராசதம் irācatam, *n.* <*rājatva*. Kingly state; அரசபதவி. ஏடே விராசதத்தினைப் பணித்ததும் (திருப்பு. 1132).

இராசதானம் irāca-tāṉam, *n.* <*rājasthāna*. Capital city; தலைநகர். *Pond.*

இராசபத்திரம் irāca-pattiram, *n.* <*rājan* +. Royal edict; அரசனுடைய உத்தரவு. (W.)

இராசபாதை irāca-pātai, *n.* <id. +. King's highway, public road; பொதுச்சாலை. (W.)

இராசபுத்தி irāca-putti, *n.* <id. +. Special wisdom, peculiar knowledge; விசேடித்த அறிவு. (W.)

இராசபோகம் irāca-pōkam, *n.* <id. +. Taxes levied for protecting property; அரசரீக்குரிய பாதுகாவல்வரி. (T. A. S. iv, 8.)

இராசமணி irāca-maṇi, *n.* <id. +. A kind of paddy; நெல்வகை. (A.)

இராசரிகப்புரட்சி irācarika-p-puraṭci, *n.* <இராசரிகம் +. Anarchy; அராசகம். *Colloq.*

இராசருகம் irācarukam, *n.* 1. Eagle wood; அகில். 2. White dead nettle; வெள்ளாத்தும்பை. (T. C. M. ii, 2, 429.)

இராசவத்தனம் irācavattaṉam, *n.* <*rāja-vartana*. A kind of precious stone; வைடூரியவகை. (யாழ். அக.)

இராசவாசல்முதலியார் irāca-vācal-mutaliyār, *n.* <இராசவாசல் +. A title conferred by Ceylon Government; இலங்கையரசாங்கத்தாரளிக்கும் பட்டப்பெயர்களுள் ஒன்று. ஸ்ரீ சிற்கைலாச பிள்ளை இராசவாசல்முதலியார் அவர்களுக்கும் (மாலுமி. முகவுரை, 2).

இராசவாழை irāca-vāḻai, *n.* <*rājan* +. A kind of plantain that yields 1000 fruits to a bunch; குலையொன்றுக்கு 1000 காய்கள் காய்க்கும் வாழைவகை.

இராசவிசுவாசம் irāca-vicuvācam, *n.* <id. +. Loyalty; அரசபக்தி. *Mod.*

இராசவிபாடன் irāca-vipāṭaṉ, *n.* <id. +. A title of the Vijayanagara kings; விஜயநகரத்தரசர் பட்டங்களுள் ஒன்று. (S. I. I. iv, 96.)

இராசன் irācaṉ, *n.* <*rājan*. (நாநார்த்த.) 1. Indra; இந்திரன். 2. Yakṣa; இயக்கன்.

இராசாதனம் irācātaṉam, *n.* <*rājādana*. (நாநார்த்த.) 1. Palas tree; முருக்கு. 2. A shell-fish; முரள். 3. Throne; royal seat; சிங்காதனம். 4. *Kiṅkiṇi-p-pālai*, a tree; கிங்கிணிப்பாலை.

இராசாவர்த்தம் irācā-varttam, *n.* <*rāja-vartana*. See இராசவத்தனம். (W.)

இராசாளி irācāḷi, *n.* Winged serpent; பறவைமாநாகம். (நாமதீப. 261.)

இராசிகுணகாரம் irāci-kuṇākāram, *n.* (Astrol.) A mode of calculation; சோதிட கணனவகை. (சோதிட. சிங். 228.)

இராசிகை irācikai, *n.* <*rājikā*. (நாநார்த்த.) 1. Field, land; வயல். 2. Line, as in the palm; ரேகை. 3. Orderliness; order; ஒழுங்கு. 4. Ragi; கேழ்வரகு.

இராசிப்பொன் irāci-p-poṉ, *n.* <இராசி +. Pure gold; கலப்பற்ற பொன். ஒடுக்கின இராசிப்பொன் (S. I. I. iv, 133).

இராசியாளயம்புள்ளிப்பணம் irāci-pāḷayam-puḷḷi-p-paṇam, *n.* A coin; நாணயவகை. (M. E. R. 185 of 1927.)

இராசியக்காரன் irāciya-k-kāraṉ, *n.* prob. இராயசம் +. Writer; இராயசக்காரன். (சீதக். 123.)

இராசியெழுத்து irāci-y-eḻuttu, *n.* <*rāśi* +. A kind of symbolic letter; குறியீட்டெழுத்துவகை. (யாப். வி. 536.)

இராசீவம் irācīvam, *n.* <*rājīva*. (நாநார்த்த.) 1. Carp; வரைக்கெண்டை. 2. A kind of deer; மான்வகை.

இராசை irācai, *n.* Šaṅkaranayiṉārkoil in the Tinnevelley District; திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சங்கரநயினார்கோயில் என்னுந் தலம். (பெருக் தொ. 938.)

இராட்டிரம் irāṭṭiram, *n.* <*rāṣṭra*. (நாநார்த்த.) 1. Country; தேசம். 2. Townsfolk; citizens; நகரிலிலுள்ள சனம். 3. Portent; உற்பாதம்.

இராத்திரிவேதம் irāttirivētam, *n.* <*rātri-vēda*. Cock; சேவல். (சித். அக.)

இராதாரி irātāri, *n.* <*rahadārī*. Customs permit; சுங்கத்தின் அனுமதிச் சீட்டு. *Loc.*

இராதினி irātiṉi, *n.* <*hrādinī*. (நாநார்த்த.) 1. A tree; சல்லகிமரம். 2. A river; ஒரு நதி. 3. Indra's thunderbolt; வச்சிராயுதம். 4. Lightning; மின்னல். 5. Thunder; இடி.

இராதை irātai, *n.* <*rādhā.* (நாநார்த்த.) 1. The 16th *nakṣatra;* விசாகம். 2. A medicinal plant; விஷ்ணுக்கிராந்தி. 3. Emblic myrobalan; நெல்லி. 4. Lightning; மின்னல். 5. Fostermother of Karṇa; கர்ணனது செவிலித்தாய்.

இராப்பண் irā-p-paṇ, *n.* <இரா+. Melodies to be sung at night; இராக்காலத்திற் பாடுதற்குரிய பண்கள்.

இராப்பிரமாணம் irā-p-piramāṇam, *n.* <id.+. (Astrol.) Duration of time between the setting and the rising of a planet; கிரகத்தின் அஸ்தமனத்திலிருந்து உதயம்வரையுள்ள பொழுதின் அளவு. (W.)

இராமக்கோழி irāma-k-kōḷi, *n.* prob. ராமம்+. Water fowl; நீர்க்கோழி. *Loc.*

இராமகலி irāma-kali, *n.* prob. *rāma*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

இராமடாணி irāmaṭāṇi, *n.* prob. id. A gold coin; பொன்னாணயவகை. (தக்கி. இங். சரித். பக். 436.)

இராமநாதன்சம்பா irāmanātaṉ-campā, *n.* A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (விவசாய. 2.)

இராமப்பிரியம் irāma-p-piriyam, *n.* <*ramā*+. Lotus; தாமரை. (வை. மூ.)

இராமபாரதி irāma-pārati, *n.* The author of Āṭṭicūṭi-veṇpā, 18th cent.; பதினெட்டாம் நூற்றண்டில் ஆத்திசூடிவெண்பாப் பாடிய புலவர். (பெருந்தொ. 1775-6.)

இராமம் irāmam, *n.* <*rāma.* (நாநார்த்த.) 1. White deer; வெண்மான். 2. Whiteness; வெண்மை. 3. Blackness; கருமை.

இராமானம் irā-māṉam, *n.* <இரா+. 1. (Astron.) Duration of the night; தினநீதோறுமுள்ள இரவின் அளவு. (W.) 2. Night; இரவு. இராமானமே வந்துவிட்டான். *Tinn.*

இராமானுசன் irāmāṉucaṉ, *n.* <*Rāmānuja.* Lakṣmaṇa, brother of Rāma; இலக்குமணன்.

இராமேசுரம்வேர் irāmēcuram-vēr, *n.* <இராமேசுரம்+. Chay-root; சாயவேர். (M. M. 160.)

இராமை irāmai, *n.* <*rāmā.* (நாநார்த்த.) 1. Woman who is an expert in erotics; மன்மதநூல் கற்றவள். 2. A kind of brinjal; சிறுவழுதலை.

இராமையன்வெட்டு irāmaiyaṉ-veṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பண விடு. 135.)

இராயசம் irāyacam, *n.* <T. *vrāyasamu.* Written order; ஆவணப்பத்திரம். நரசிங்க ராஜ உடையர் கட்டளை பணணி இராயசமும் கொடுக்கையில் (S. I. I. iv, 83).

இராயசவர்த்தனை irāyaca-varttaṉai, *n.* <இராயசம்+. A tax; வரிவகை. (S. I. I. viii, 188.)

இராயணி irāyaṇi, *n.* prob. இராணி. Queen; அரசி. (W.)

இராயப்பர் irāyappar, *n.* <இராயன்+அப்பர். St. Peter; பேதுரு என்ற கிறிஸ்தவப் பேரியார். *Chr.*

இராயன் irāyaṉ, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 57.)

இராவணன்முழி irāvaṇaṉ-muḷi, *n.* <இராவணன்+விழி. Small lime stones resembling eye-balls, available near Rāmēšvaram; இராமேசுரப் பக்கத்தில் அகப்படுங் கண்விழிகள் போன்ற சிறுசோழிவகை.

இராவணன்மீசாய்ப்புல் irāvaṇaṉ-mīcāy-p-pul, *n.* <id.+. Water pink; இராவணன்புல். (காழிக்கல்.)

இராவுத்தராயன் irāvutta-rāyaṉ, *n.* <இராவுத்தன்+. Leader of horsemen; குதிரைச்சேவகரின் தலைவன். (திருவாலவா. 28, 83.)

இராஜாகரங்காணிக்கை irājā-karaṅ-kāṇikkai, *n.* <இராஜா+கரம்+. A tax; வரிவகை. (I. M. P. Sm. 5.)

இரிகம் irikam, *n.* (W.) 1. Heart; இருதயம். 2. Mind; மனம்.

இரிட்டம் iriṭṭam, *n.* <*riṣṭa.* (நாநார்த்த.) 1. Good; சுபம். 2. Sword; வாள். 3. Inauspiciousness; அசுபம். 4. End; destruction; விநாசம். 5. Sin; பாவம்.

இரீதி irīti, *n.* <*rīti.* Brass; பித்தளை. (W.)

இருக்கணை irukkaṇai, *n.* Crenulate leaved spindle tree, l. tr., *Euonymus Crenulatus;* சித்திரவேலக்குதவும் மரவகை. (Nels.)

இருக்கம் irukkam, *n.* <*ṛkṣa.* (நாநார்த்த.) 1. *Nakṣatra;* நட்சத்திரம். 2. Bear; கரடி. 3. Zodiacal sign; இராசி.

இருக்கமாலி irukkamāli, *n.* <*ṛkṣamālī.* Temple of the width of 766 hands and of the same height, with 766 towers and 96 storeys; 766 முழ அகலமும் உயரமுமுள்ளதாய் 766 சிகரங்க

ளோடு 96 மேனிலைக்கட்டுக்கள் கொண்ட கோயில். (சுக்கிரநீதி, 229.)

இருக்குக்குறள் irukku-k-kuraḷ, *n.* prob. *ṛk*+. A kind of short verse; சிறிய பாவகை. ஏகபாதந் தமிழிருக்குக்குறள் சாத்தி (பெரியபு. திருஞான. 276).

இருசாதி iru-cāti, *n.* <இரண்டு+. Hybrid; mixed caste; கலப்புச்சாதி. இருசாதிமாடு.

இருசிர்ப்பாணி iru-cīr-p-pāṇi, *n.* <id.+சீர்+. (Mus.) A kind of *tāḷam;* இரட்டைத் தாளம். (பொருந. 71.)

இருசுகந்தப்பூண்டு iru-cukanta-p-pūṇṭu, *n.* prob. இரு-மை+சுகந்தம்+. Southern-wood; மருக்கொழுந்து. *Pond.*

இருட்கண்டம் iruṭ-kaṇṭam, *n.* <இருள்+. A necklace; கழுத்தணிவகை. பிறங்கிருட்கண்டமும் (S. I. I. viii, 39).

இருட்கண்டர் iruṭ-kaṇṭar, *n.* <id.+. Śiva, as having a blue throat; சிவபெருமான். கூர்ந்த விருட்கண்டர் (பெரியபு. திருமுறை. 12).

இருடி iruṭi, *n.* <*ṛṣi.* The vēda; வேதம். (நாநார்த்த.)

இருடிகம் iruṭikam, *n.* See இருடீகம். பதினெரிருடிகமுமடைய முடியுமடியிருடியார் (தேசிகப். 6, 19).

இருடீகம் iruṭīkam, *n.* <*hṛṣīka.* Sensory organ; இந்திரியம். இருடீகங்க ளீரைந்துஞ் சரங்களாக (தேசிகப். 2, 41).

இருண்டசெவலை iruṇṭa-cevalai, *n.* <இருள்-+. Dark brown colour of cattle; கருமை கலந்த மங்கல்நிறமான மாட்டுநிறவகை. (பெரியமாட். 13.)

இருண்மாயபூமி iruṇ-maya-pūmi, *n.* <இருள்+மயம்+. The dark region round the *cakravāḷa-kiri,* where the ghosts of suicides are made to suffer; சக்கரவாளகிரியைச் சூழ்ந்து இருண்டுகிடப்பதும் தற்கொலைபுரிந்தோர் பேய்வடிவுடன் துன்புறுவதுமான பூமி. (சி. போ. பா. 2, 3.)

இருணி iruṇi, *n.* cf. இருளி. Hog; பன்றி. இருணியா யெழுந்த சோதி யிரணியாக் கனேததான் கொல்ல (வாத. பாகவத. நாரசிங்க. 5).

இருத்தி irutti, *n.* <*ṛddhi.* Interest; வட்டி. (T. A. S. viii, 15.)

இருத்து iruttu, *n.* <இருத்து-. 1. That which is firm, permanent; நிலையானபொருள். என்னெஞ்சத்து இருத்தாக விருத்தினேன் (திவ். திருவாய். 9, 4, 6). 2. Pressure; அழுக்குகை. அவனை ஓர் இருத்து இருத்தினேன். *Colloq.*

இருதலைஞாங்கர் iru-talai-ñāṅkar, *n.* <இரண்டு+தலை+. Double-headed lance; இருதலையுங் கூருள்ள குமரன்வேல். (யாழ். அக.)

இருதலைப்பகரங்கள் iru-talai-p-pakaraṅkaḷ, *n.* <id.+id.+. Square brackets; எழுத்துக்களை உள்ளடக்கி நிற்கும் [ ] என்ற குறியீடுகள். *Mod.*

இருதலைப்பாம்பு iru-talai-p-pāmpu, *n.* <id.+id.+. 1. Semi-nocturnal sand-snake; இருதலைமணியன். *Pond.* 2. Blind snake with very short head and tail; இருதலைப்புடையன். *Loc.* 3. Earth-worm; மண்ணுளிப்பாம்பு.

இருதலைமூரி iru-talai-mūri, *n.* <id.+id.+. See இருதலைப்பாம்பு, 3. *Loc.*

இருதாரைக்கத்தி iru-tārai-k-katti, *n.* <id.+தாரை+. Double-edged sword or knife; இருபக்கழங் கூர்மையுள்ள கத்தி. (W.)

இருந்துபோ-தல் iruntu-pō-, *v. tr.* <இரு-+போ. 1. To be stupefied; to be paralysed; செயலறுதல். அந்தத் துக்கத்தைக் கேட்டதும் அவன் இருந்துபோனான். 2. To sink; கீழே அழுந்துதல். அஸ்திவாரம் இருந்துபோயிற்று. 3. To remain unsold, as goods: விலைப்போகாது தங்குதல். இருந்துபோன சாமான்.

இருநிறமணிக்கல் iru-niṟa-maṇi-k-kal, *n.* <இரண்டு+நிறம்+மணி+. A kind of precious stone; இரத்தினவகை. *Pond.*

இருப்புக்கட்டி iruppukkaṭṭi, *n.* A tax; வரிவகை. (S. I. I. iv, 79.)

இருப்புக்கட்டை iruppu-k-kaṭṭai, *n.* <இரும்பு+. Hammer; சுத்தியல். *Pond.*

இருப்புக்கம்பை iruppu-k-kampai, *n.* <இரு-+. Driver's seat, at the front of the cart; வண்டி ஓட்டுபவனுக்குமுன் வண்டியில் அமைக்கப்பட்ட ஆசனம். *Colloq.*

இருப்புக்காய்வேலை iruppu-k-kāyvēḷai, *n.* A plant; இரும்புக்காய்வேலை. (W.)

இருப்புக்குழல் iruppu-k-kuḻal, *n.* <இரும்பு+. A kind of rocket; விருசுவகை. (T. C. M. ii, 2, 593.)

இருப்புச்சிட்டம் iruppu-c-ciṭṭam, *n.* <id.+. Oxide of iron; இருப்புக்கிட்டம். (W.)

இருப்புத்தொட்டிப்பாஷாணம் iruppu-t-toṭṭi-p-pāṣāṇam, *n.* <id.+தொட்டி+. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (சங். அக.)

இருப்புநகம் iruppu-nakam, *n.* <id.+. Betel clipper; வெற்றிலைகிள்ளும் ஆயுதம். *Loc.*

இருப்புப்பாளம் iruppu-p-pāḷam, *n.* <id.+. Pig iron; இரும்புக்கட்டி. (W.)

இருபிறப்பாளன் iru-pirappāḷaṉ, *n.* <இரண்டு+பிறப்பு+ஆள். (நாநார்த்த.) 1. The moon; சந்திரன். 2. Cukkiraṉ, as twice-born; சுக்கிரன்.

இரும்பாலை irum-pālai, *n.* <இரு-மை+. Blue-dyeing Rosebay, l. tr., *Wrightia tinctoria;* பாலைமரவகை. (L.)

இரும்பு irumpu, *n.* 1. Gold; பொன். (அக. நி.) 2. Red species of Malabar Glory-lily; செங்காந்தள். (L.)

இரும்புப்பெட்டி irumpu-p-peṭṭi, *n.* <இரும்பு+. Cash chest, iron safe; உருக்கால் அமைந்த பேழை. *Mod.*

இருமனப்பெண்டிர் iru-maṉa-p-peṇṭir, *n.* <இரண்டு+மனம்+. Prostitute; பரத்தையர். இருமனப்பெண்டிருங் கள்ளும் (குறள், 920).

இருமிமலைத்தகி irumimalaittaki, *n.* <U. *rūmimastaki.* Mastic-tree; பூனைக்கண் தங்கிலியம். (சு. வை. ரத். 543.)

இருமுறி iru-muṟi, *n.* prob. இரும்பு+. Silvery-leaved indigo; இருப்புமுறி என்னுஞ் செடி. *Pond.*

இருலிங்கவட்டி iruliṅkavaṭṭi, *n.* Vermilion; சாதிலிங்கம். (வை. மூ.)

இருவருந்தபுநிலை iruvar-un-tapu-nilai, *n.* <இருவர்+தபு-+. (Puṟap.) Theme describing the death of both the besieged and the besieging kings; எயிலின் அகத்தும் புறத்தும் நின்ற வேந்தரிருவரும் போரது வீழ்நிதமை கூறும் புறத்துறை. (தொல். பொ. 68.)

இருவிள iruviḷa, *n.* 1. Palmyra leaf; பனையோலை. (தொல். எழுத். 216, உரை.) 2. A town in Vēṇāṭu; வேணாட்டகத்து ஓர் ஊர். 3. A *cēri* in Karuvūr; கருவூரினகத்து ஒரு சேரி.

இருவீடு iruvīṭu, *n.* A tree; ஒருவகைமரம். (நாநார்த்த.)

இருள்பாலை iruḷ-pālai, *n.* perh. இருள்+. Seven-leaved poon tree, m. tr., *Alstonia scholaris;* ஏழிலம்பாலை. (Nels.)

இருள்வாசி iruḷvāci, *n.* Tuscan jasmine; இருவாட்சி. (தமிழ்விடு. முகவுரை, பக். 4.)

இருளி iruḷi, *n.* Shame; வெட்கம். (யாழ். அக.)

இரேகாம்சம் irēkāmcam, *n.* <*rēkhā*+. (Astron.) Terrestrial longitude; பூமியை வடக்குத் தெற்காக 360 சமபங்குகளாய்ப் பிரிக்கப்பட்டவற்றுள் ஒரு பாகம்.

இரேகி-த்தல் irēki-, *11 v. tr.* <*rēkhā.* To draw; to write; எழுதுதல். இரேகித்த சித்திரம். *Pond.*

இரேகுத்தி irēkutti, *n.* cf. U. *rēkhtī.* (Mus.) A specific melody-type; ஓர் ராகம். (W.)

இரேகை irēkai, *n.* <*rēkhā.* (நாநார்த்த.) 1. Unbroken series; இடையற வொழுங்கு. 2. Deceit; wile; வஞ்சம்.

இரேசனி irēcaṉi, *n.* <*rēcanī.* (நாநார்த்த.) 1. Indian jalap; சிவதை. 2. Orange cup-calyxed brasiletto; ஓமலி. 3. Croton seed; நேர்வாளவிதை. 4. Realgar; மனோசிலை.

இரேணு irēṇu, *n.* <*rēṇu.* Fever plant; பற்படகப்புல். (நாநார்த்த.)

இரேணுகை irēṇukai, *n.* <*rēṇukā.* (நாநார்த்த.) 1. Bran; தவிடு. 2. Cubeb; தக்கோலம்.

இரேபன் irēpaṉ, *n.* <*rēpa.* (நாநார்த்த.) 1. Cruel man; கொடியன். 2. Contemptible man; நீசத்தன்மைக்கத்தக்கவன்.

இரேவடம் irēvaṭam, *n.* <*rēvaṭa.* (நாநார்த்த.) 1. Whirlwind; சூறைக்காற்று. 2. Conch with right spirals; வலம்புரிச்சங்கு. 3. Bamboo; மூங்கில்.

இரேவதர் irēvatar, *n.* <*Rēvata.* A Buddha; புத்தர்களுள் ஒருவர். (மணி. பக். 369.)

இரேவை irēvai, *n.* <*rēvā.* Indigo; அவுரி. (நாநார்த்த.)

இரை irai, *n.* <*irā.* (நாநார்த்த.) 1. Earth; பூமி. 2. Water; நீர். 3. Toddy; கள். 4. Speech; வாக்கு.

இரைப்பு[1] iraippu, *n.* <இரை-. Infatuation; மோகம். புதுப்பிணைத் திரைப்புமிக்கு (தக்கயாகப். 129).

இரைப்பு[2] iraippu, *n.* Cockroach; கரப்புப் பூச்சி. *Loc.*

இரைப்பெட்டி irai-p-peṭṭi, *n.* <இரை+. Begging bowl; பிச்சைவாங்கும் பெட்டி. *Tinn.*

இரௌத்திரி irauttiri, *n.* <*Raudrī.* A Śakti of Śiva; ஒரு சிவசத்தி. (சைவபூ. சங். 219.)

இல்லவன் illavaṉ, *n.* <இன்-மை. Poor man; தரித்திரன். இல்லவ ரொழுக்கம்போல் (கலித். 148).

இல்லாக்காட்டில் illā-k-kāṭṭil, *adv.* <இல்லா-மை+. If not, otherwise; இல்லாவிட்டால். *Pond.*

இல்லாக்குற்றம் illā-k-kuṟṟam, *n.* <id. +. 1. Poverty; தரித்திரம். *Loc.* 2. Calumny; அபாண்டம். *Pond.*

இல்லாங்காட்டி illāṅ-kāṭṭi, *adv.* <id.+. See இல்லாக்காட்டில். *Loc.*

இல்லாவாட்டி illā-v-āṭṭi, *n.* <id.+ ஆள்-. Destitute woman; வறியவள். *Tinn.*

இல்லுனர் illuṉar, *n.* cf. ஒல்லுநர். Friends; நண்பர். (W.)

இலக்கட்சரம் ilakkaṭcaram, *n.* prob. இலக்கு+அட்சரம். Secret code; மறைபொருட் சொல். *Pond.*

இலக்கை ilakkai, *n.* <*rakṣā*. Protection; பாதுகாவல். இலக்கை யற்றதவ் விலஙகைக்கு மிரா வணன் றனக்கும் (கம்பரா. கும்பகரு. 339).

இலகல் ilakal, *n.* (அக. நி.) 1. cf. *lēkha*. Letter, character; எழுத்து. 2. cf. *laghu*. Eagle-wood; அகில். 3. cf. *lēśa*. Lightness; நோய்மை.

இலகு-தல் ilaku-, 5 *v. intr.* To increase; மிகுதல். (சங்கற்பநி. சங்கிராந்த. 96.)

இலகுநட்சத்திரம் ilaku-naṭcattiram, *n.* <*laghu*+. Small star; நுட்பமான நட்சத்திரம். (W.)

இலகோட்டா ilakōṭṭā, *n.* <Chi. *luh wat.* Loquat, m. tr., *Eriobotrya japonica;* மரவகை. (L.)

இலங்கனம் ilaṅkaṉam, *n.* <*laṅghana*. Transgression; கடக்கை. (நாநார்த்த.)

இலங்கிகன் ilaṅkikaṉ, *n.* <இலிங்கி. Ascetic; துறவி. (அக. நி.)

இலங்கு ilaṅku, *n.* Tank; குளம். (W.)

இலங்கோடு ilaṅkōṭu, *n.* <Hind. *laṅgōṭa*. Strip of cloth fitted to the loins; சல்லடம். மிக்கதா மிலங்கோடு கௌபீனமே (அலங்காரச்சிந்து. 16).

இலச்சி-த்தல் ilacci-, 11 *v. intr.* <*lajjā*. To be bashful, coy, shy; நாணுதல். திருவான தேவி இலச்சிப்ப (தக்கயாகப். 34, உரை).

இலச்சைக்கேடு ilaccai-k-kēṭu, *n.* <இலச்சை+. Shamelessness; வெட்கக்கேடு. (W.)

இலஞ்சி[1] ilañci, *n.* Mango tree; மாமரம். (அக. நி.)

இலஞ்சி[2] ilañci, *n.* cf. இலேஞ்சி. A towel; சவுக்கம். *Colloq.*

இலஞ்சிலி ilañcili, *n.* cf. இலாஞ்சி. Cardamom plant; ஏலம். (சித். வை.)

இலட்சுமிவண்டு ilaṭcumi-vaṇṭu, *n.* <*lakṣmī*+. Cockroach, as a harbinger of prosperity; கரப்புப்பூச்சி. *Colloq.*

இலட்டை ilaṭṭai, *n.* prob. *laḍḍu*. Round cake of rice flour and sugar; அப்பம். (அக. நி.)

இலடு ilaṭu, *n.* Horse; குதிரை. (அக. நி.)

இலபனம் ilapaṉam, *n.* <*lapana*. (Anat.) Mouth; வாய். (W.)

இலம்பம் ilampam, *n.* <*lamba*. (நாநார்த்த.) 1. Height; உயர்வு. 2. Expanse; width; விசாலம்.

இலம்பாடு ilampāṭu, *n.* <இலம்பாடு-. Sorrow, grief; துக்கம். (அக. நி.)

இலம்பிதசாடயம் ilampita-cāpalam, *n.* <*lambita*+. (Astron.) An equation from the table of the moon's parallax; மந்தசாபலம். (சூடா. உள். 433.)

இலம்பிதம் ilampitam, *n.* <*lambita*. (Astron.) Parallax of moon's longitude; மந்தசா. (சூடா. உள். 433.)

இலயசக்தி ilaya-cakti, *n.* <*laya*+. (Śaiva.) Śakti of Ilaya-Civaṉ; இலயசிவனின் சக்தி. (சி. சி. 2, 75, மறைஞா.)

இலயதத்துவம் ilaya-tattuvam, *n.* <id. +. (Śaiva.) State of the Supreme Being during the *makā-caṅkāram;* மகாசங்கார காலத்துத் தன் காரியங்களெல்லா மொடுங்கிக் காரணமாத்திரையாய் நிற்கும் இறைவனிலை. (சி. சி. 6, 6, ஞானப்.)

இலயமுத்தி ilaya-mutti, *n.* <id.+. Salvation through absorption into Godhead; பரம்பொருளோடு இரண்டறக் கலக்கையாகிய முக்தி. (யாழ். அக.)

இலலிதபஞ்சமி ilalita-pañcami, *n.* <*lalita*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

இலவடி-த்தல் ilavaṭi-, *v. intr.* To thresh out sheaves of corn; நெற்கதிரடித்தல். *Colloq.*

இலவம்[1] ilavam, *n.* <*lava*. 1. (Jaina.) A measure of time; ஒரு கால அளவு. தோவமில வமே நாள் (மேருமந். 94). 2. Wool; ஆடு முதலிய வற்றின் மயிர். (நாநார்த்த.)

இலவம்[2] ilavam, *n.* perh. *iḍā.* Worship; பூசை. (*அக. நி.*)

இலளிதம் ilaḷitam, *n.* <*lalita.* (*நாநார்த்த.*) 1. Longing, wish; இச்சை. 2. Lucidity of expression; பொருளின் தெளிவு.

இலளிதை ilaḷitai, *n.* <*lalitā.* A kind of pearl necklace; ஒருவகை முத்தாரம். (*நாநார்த்த.*)

இலாக்கை ilākkai, *n.* <*lākṣā.* (*நாநார்த்த.*) 1. Red cotton; செம்பஞ்சு. 2. Shell-lac; அரக்கு.

இலாகன் ilākaṉ, *n.* A kind of fish; மீன் வகை. (W.)

இலாங்கலம் ilāṅkalam, *n.* <*lāṅgala.* (*நாநார்த்த.*) 1. A kind of flower; பூவகை. 2. Palmyra; பனை. 3. Plough; கலப்பை. 4. Curved cornice; கொடுங்கை.

இலாங்கூலம் ilāṅkūlam, *n.* <*lāṅgūla.* Membrum virile; ஆண்குறி. (*நாநார்த்த.*)

இலாஞ்சலி ilāñcali, *n.* cf. இலாஞ்சி. Cardamom plant; ஏலம். (*பச். மூ.*)

இலாடம்[1] ilāṭam, *n.* <*lāṭa.* Saree; சேலை. (*நாநார்த்த.*)

இலாடம்[2] ilāṭam, *n.* (Astron.) The day in which the sun's position is in a specified relation to the constellation *mūlam;* மூலநட்சத்திரத்திற்குஞ் சூரியனுக்கு முள்ள தூரத்தை யோட்டி நிர்ணயிக்கும் நாள். (*பஞ்.*)

இலாபாந்தராயம் ilāpāntarāyam, *n.* <*lābha*+*antarāya.* (Jaina.) An impediment to the attainment of one's object, caused by karma; தூறித்த பேற்றை இடைநின்று விலக்குங் கருமத்தடை. (*சீவக.* 3081, *உரை.*)

இலிங்கம் iliṅkam, *n.* <*liṅga.* (Phil.) Prakṛti; பிரகிருதி. (*நாநார்த்த.*)

இலிங்கமுத்திரை iliṅka-muttirai, *n.* <id.+. A kind of hand-pose, in worship; பூசைசெய்யும்போது காட்டும் முத்திரைவகை. (*செந்.* x, 426.)

இலீலை ilīlai, *n.* <*līlā.* Playfulness; பரிகாசம். (*நாநார்த்த.*)

இலீனம் ilīṉam, *n.* <*līna.* 1. Dissolution; அழிவு. 2. Involution; அடக்கம். *அப்படிப்போலப் பிரகிருதியில் ஜீவர்கள் இலீனமாயிருக்கிறார்கள்* (*வாசதேவமனனம், பக்.* 3).

இலேகனம் ilēkaṉam, *n.* <*lēkhana.* (*நாநார்த்த.*) 1. Bark of paper tree; பூர்ச்சமரத்தின் மேலுரி. 2. Cutting; வெட்டுகை.

இலேகை ilēkai, *n.* <*lēkhā.* 1. Letter; எழுத்து. *இலேகை யக்கரப்பெயர்* (*பேரகத்.* 4). 2. Earth; பூமி. (*நாநார்த்த.*) 3. Cicatrice; தழும்பு. *தூதிமருப் பிலேகை தூண்ணிது தோன்ற* (*பெருங். வத்தவ.* 7, 184).

இலேபம் ilēpam, *n.* <*lēpa.* (*நாநார்த்த.*) 1. Food; போசனம். 2. Paste; சாந்து.

இலைக்கடுக்காய் ilai-k-kaṭukkāy, *n.* <இலை+. (L.) 1. Paniculate winged myrobalan; வெண்மருது. 2. Flowering mardah; பூமருது.

இலைக்கூலம் ilai-k-kūlam, *n.* <id.+ prob. கூலி. A tax; வரிவகை. (S. I. I. iii, 411.)

இலைச்சுமடன் ilai-c-cumaṭaṉ, *n.* <id.+. (*யாழ். வி. பக்.* 512.) 1. Seller of betel leaves; வெற்றிலை விற்போன். 2. Fool, idiot; மூடன்.

இலைச்செப்பு ilai-c-ceppu, *n.* <id.+. An utensil of worship; பூசைப்பாத்திரவகை. (S. I. I. ii, 5.)

இலைசாடு-தல் ilai-cāṭu-, *v. intr.* <id.+. To grow too luxuriantly to be productive, as plants; செடிகொடிகள் மதர்த்தல். *Tinn.*

இலைத்தட்டு ilai-t-taṭṭu, *n.* <id.+. A kind of plate used in worship; பூசைத்தட்டுவகை. (S. I. I. ii, 6.)

இலைத்தொடை ilai-t-toṭai, *n.* <id.+. Decorative hangings, as garlands; அலங்காரத் தொங்கல். *சாத்தின இலைத்தொடை யாதலாம்* (*திவ். பெரியாழ்.* 3, 4, 1, *வ்யா. பக்.* 592).

இலையம் ilaiyam, *n.* <*laya.* A dance; கூத்தின் விகற்பம். (*அக. நி.*)

இலைவாழை ilai-vāḻai, *n.* <இலை+. *Loc.* 1. A kind of plantain that does not yield fruits; மலட்டுவாழைவகை. 2. A kind of plantain yielding stony fruit; கோட்டைவாழை.

இலௌகிகசாத்திரம் ilaukika-cāttiram, *n.* <*laukika*+. Treatise dealing with perceptible results, dist. fr. *vaitika-cāttiram;* கண்கூடாகப் பலனளிப்பவற்றைக் கூறுஞ் சாத்திரம். (*விவேகசிந்.* 13.)

இவேசித்தொகைபேடு ivēci-t-tokai-y-ēṭu, *n.* prob. U. *iwāz*+. A statement showing the amount of collection and balance in money or in kind; வசூலித்த பணம் தானிய முதலியவற்றின் கணக்கைக் காட்டும் விவரக்குறிப்பு. (R. T.)

இழந்தநாக்கடி-த்தல் iḻanta-nākkaṭi-, *v. intr.* prob. இழ-+நாக்கு+. cf. இளநாக்கடி-. 1. To promise or consent lightly without due consideration; முன்பின் யோசியாது உறுதியின்றி வாக்களித்தல். *Tinn.* 2. To commisserate; இரக்கப்படுதல். *Loc.*

இழவு iḻavu, *n.* <id. Bereavement, one of six *karuvuḷ-amaippu*, q. v.; கருவுளமைப்பு ஆறனுள் ஒன்றன பந்துநஷ்டம். (பிங்.)

இழவுடுப்பு iḻavuṭuppu, *n.* <இழவு+. Mourning dress; துக்கக்குறியான உடை. *Pond.*

இழித்துரை iḻitturai, *n.* <இழி-+. Word of contempt; improper language; இழிவாகக் கூறுஞ் சொல். இங்குச்சொன்ன உபசாரம் இழித்துரை (தக்கயாகப். 402, உரை).

இழிநீர் iḻinīr, *n.* <இழி-+. Outflow; வடியுநீர். கட்கடற்கு எறுநீர் இழிநீருளவோ என்னில் (தக்கயாகப். 122, உரை).

இழுக்கு-தல் iḻukku-, *5 v. intr.* To die; சாதல். முள்ளி னெய்தெற விழுக்கிய கானவர் (மலை படி. 301, உரை).

இழுக்குப்பொடுக்கெனல் iḻukku-p-poṭukkeṉal, *n.* Expr. of warning; எச்சரிக்கைக் குறிப்பு. (J.)

இழுத்துப்பேசு-தல் iḻuttu-p-pēcu-, *v. tr.* <இழு-+. (W.) 1. To speak slowly, in a measured manner; நிறுத்தி மெள்ளப்பேசுதல். 2. To speak evasively; நழுவவிட்டுப் பேசுதல்.

இழுது iḻutu, *n.* Sweetness; தித்திப்பு. (நாநார்த்த.)

இழுப்பாசாமி iḻuppācāmi, *n.* <இழுப்பு+ஆசாமி. Immoral person; ஒழுங்கற்ற நடத்தையுள்ளவன்-ள்.

இழுப்புத்தேர் iḻuppu-t-tēr, *n.* <id.+. Temple car to be dragged, dist. fr. *eṭuppu-t-tēr;* இழுத்துச்செல்லும் இரதம். (W.)

இழுப்புப்பறிப்பு iḻuppu-p-paṟippu, *n.* <id.+. *Colloq.* 1. Immorality; ஒழுங்கீனமான நடக்கை. அவனுக்கு இழுப்புப்பறிப்புண்டு. 2. Debt; கடன்.

இழுப்புவலை iḻuppu-valai, *n.* <id.+. A kind of fishing net; மீன்பிடிக்கும் வலைவகை. *Pond.*

இழுபறி iḻu-paṟi, *n.* <இழு-+. See இழுவை, 1, 2. *Colloq.*

இழுவல்நழுவல் iḻuval-naḻuval, *n.* <id.+. Uncertainty; நிச்சயமின்மை. (பாவலர்சரித். 11.)

இழுவை iḻuvai, *n.* <id. 1. Procrastination, dilatoriness; காரியத் தாமதம். *Loc.* 2. Inextricable difficulty; இடைஞ்சல். நற் குடிக்குத் தன்பமடா காளும்பல விழுவை (பஞ்ச. திருமுக. 768). 3. A thorny shrub; ஓர் முட்செடி. (W.)

இழை[1] iḻai, *n.* <இழை-. Cloth; துகில். நுண்ணிழையணையென (கலித். 56).

இழை[2]**-தல்** iḻai-, *12 v. intr.* To become emaciated, reduced; மெலிதல். குழந்தை நூலாய் இழைந்துவிட்டது.

இழைப்பு[1] iḻaippu, *n.* <இழை-. Work; செய்தொழில். உழைக்கல மகளிரு மிழைப்பிரிந் தாற்றவும் (பெருங். உஞ்சைக். 46, 334).

இழைப்பு[2] iḻaippu, *n.* cf. இழுப்பு. Asthma; காசநோய். *Loc.*

இளகல் iḷakal, *n.* <இளகு-. Love; அன்பு. (அக. நி.)

இளகிப்படி-த்தல் iḷaki-p-paṭi-, *v. tr.* <id.+. To be nicely set; அழகாகப்பதித்தல். (திவ், அமலனா. 3, வ்யா. பக். 48.)

இளங்காலி iḷaṅ-kāli, *n.* <இள-மை+. Calf; மாட்டுக்கன்று. (திவ். பெரியாழ். 3, 3, 1, வ்யா. பக். 560.)

இளங்கிடை iḷaṅkiṭai, *n.* <id.+. Open place where the cattle of the village gather together before being driven to the pasture; ஊர்மாடுகளெல்லாம் வரும்வரை மேய்ப்போன் மாடுகளை நிறுத்திவைக்கும் வெளியிடம். *Nān.*

இளங்கூறு iḷaṅ-kūṟu, *n.* <id.+. Crown prince; இளவரசன். வேணாட்டு இளங்கூறு வாழு மவற்கு (T. A. S. ii, 64).

இளங்கோவேள் iḷaṅ-kō-vēḷ, *n.* <இளங்கோ+. Prince of Vēḷ family; வேள் குலத்து இளவரசன். (சைவசிகா. 36.)

இளஞ்சாமை iḷañ-cāmai, *n.* prob. இளமை+. A kind of millet; சாமைவகை. (விவசா. 4.)

இளஞ்சூரியர் iḷañ-cūriyar, *n.* <id.+. The younger of the twin poets *iraṭṭaiyar;* இரட்டையருள் இளையவர். (தமிழ்நா. 103, தலைப்பு.)

இளநாக்கடி-த்தல் iḷanākkaṭi-, *v. intr.* <இளநாக்கு+. See இழந்தநாக்கடி-.

இளநீர்த்தா-தல் iḷanīrttā-, *v. intr.* <இளநீர்+. To grow lean; to be worn out and become thin; தேய்ந்துமெலிதல். (நன். 431, மயிலை.)

இளநேரம் iḷa-nēram, *n.* <இள-மை+. Evening; மாலை. இளநேரம் வீதியிலே வந்துநில்லு (தெய்வச். விறலிவிடு. 337).

இளப்பம் iḷappam, *n.* <இளை-. Disgrace; அவமானம். *அவனுக்கு இது பெரிய இளப்பம். Colloq.*

இளம்பயிர் iḷam-payir, *n.* <இள-மை+. Seedlings that have been recently transplanted; நாறுபிடுங்கி நட்டுச் சிலநாளான பயிர். *Loc.*

இளம்பாக்கு iḷam-pākku, *n.* <id.+. A kind of areca nut; பாக்குவகை. (விறலிவிடு.)

இளம்பாலாசிரியன் iḷampāl-āciriyaṉ, *n.* <id.+ *bāla*+. Teacher of children, dist. fr. *pālāciriyaṉ;* இளம்பாலர்க்குக் கற்பிக்கும் ஆசிரியன். (அக நா. 102.)

இளம்பிடி iḷam-piṭi, *n.* <id.+. Beautiful woman; அழகிய பெண். *இளம்பிடி யிவளுக்கென் னினைந்திருந்தாய்* (திவ். பெரியதி. 2, 7, 2). (அக. நி.)

இளம்பிராயம் iḷam-pirāyam, *n.* <id.+. Youth; இளவயது. (R.)

இளமணல் iḷa-maṇal, *n.* <id.+. Quick sand; தருத்துமணல். *தேரோ டிளமண லுட்பட லோம்பு* (கலித். 98).

இளமணற்பாய்-தல் iḷamaṇaṟ-pāy-, *v. intr.* <இளமணல்+. To be caught, as the feet in quick-sand; இளமணலிற் காலழுந்துதற்போல அகப்படுதல். *திருச்சோலையின் போக்யதையிலே இள மணற் பாய்ந்து கால்வாங்கமாட்டாதே நிற்கும்* (திவ். அமலனா. 6, வ்யா. பக். 77).

இளமுறை iḷa-muṟai, *n.* <இள-மை+. Heir; பின் வாரிசு. *Loc.*

இளமை iḷamai, *n.* Madness; உன்மத்தம். (நாநார்த்த.)

இளவழிபாடு iḷa-vaḻipāṭu, *n.* <இள-மை+. Child education; சிறுபிள்ளைக் கல்வி. (யாழ். அக.)

இளவுறை iḷa-v-uṟai, *n.* <id.+. Milk not fully formed into curds; நன்றாகத் தோயாத தயிர். (யாழ். அக.)

இளிச்சகண்ணி iḷicca-kaṇṇi, *n.* <இளிச்சல்+. Woman who habitually leers; காமக் குறிப்போடு பிறரை நோக்குந் தன்மை யுடையவள். *இளிச்சகண்ணிக்குப் புளிச்சகண்ணி தேவலை.*

இளை[1]**-த்தல்** iḷai-, *11 v. intr.* To get slack; நெகிழநிற்றல். *தானே யிளைக்கிற் பார்கீழ் மேலாம்* (திவ். இயற். பெரியதிருவந். 24).

இளை[2] iḷai, *n.* (அக. நி.) 1. cf. மளை. Ditch, moat; கிடங்கு. 2. Indian black bear; கரடி.

இளை[3] iḷai, *n.* <இளை-மை. Younger brother; தம்பி. *இளைபுரிந் தளித்தன்மே லிவர்ந்த காதலன்* (கம்பரா. கவந்த. 27).

இளையநயினார் iḷaiya-nayiṉār, *n.* <id.+. Skanda; முருகக்கடவுள். (M. E. R. 507 of 1929-30.)

இளையமரக்கால் iḷaiya-marakkāl, *n.* <id.+. A small *marakkāl;* சிறு மரக்கால். *கலத்துவாய் தூணி இளையமரக்காலால் வரிசையிட்ட படி* (S. I. I. iv, 30).

இளையவாசவன் iḷaiya-vācavaṉ, *n.* <id.+. Upēndra; உபேந்திரன். *இளையவாசவன் விசும்பினின்றும் விழ* (தக்கயாகப். 651).

இளையார் iḷaiyār, *n.* <id. Husband's younger brothers; கொழுந்தர். *Loc.*

இளையோன் iḷaiyōṉ, *n.* <id. Skanda; முருகக்கடவுள். (தக்கயாகப். 5, உரை.)

இறக்கம்[1] iṟakkam, *n.* <இற-. Death; சாவு. *இறக்கமுற்றனென வேக்கமெய்திஞன்* (கம்ப ரா. சடாயுகாண். 19).

இறக்கம்[2] iṟakkam, *n.* <இறங்கு-. Swallowing, as of food; உணவு முதலியன உட்செல் லுகை. *சோற்றிறக்கமு மறந்தான்* (குருகூர்ப்.).

இறக்கு-தல் iṟakku-, *5 v. tr.* To compel payment; பணத்தை நிர்ப்பந்தித்து வசூலித்தல். *Colloq.*

இறக்கை iṟakkai, *n.* <T. *rekka.* Wing-wall; கண்ணுற்றின் இருபுறங்களிலுமுள்ள துணைச் சுவர். (கட்டட. நாமா.)

இறகுக்கூடு iṟaku-k-kūṭu, *n.* <இறகு+. Pen rack; பேனை வைக்குங் கூடு. *Pond.*

இறங்கல்மீட்டான் iṟaṅkal-mīṭṭāṉ, *n.* <id.+. cf. இறங்கமாட்டான். A kind of paddy; ஒருவகை நெல். *போரிறங்கல்மீட்டான் புழுதிபுரட்டி* (நெல்விடுதூது. 189).

இறங்கு-தல் iṟaṅku-, *5 v. intr.* To leave, abandon; விட்டுநீங்குதல். *அருணேக்க மிறங்காத தாமரைக்க ணெம்பெருமான்* (கம்பரா. விராதன். 50). *2.* To commence, begin to act; தொடங்குதல். *தருமவழியில் இறங்கியுள்ளான்.*

இறங்குகிணறு iṟaṅku-kiṇaṟu, *n.* <இறங்கு-+. Well with steps leading down to the water; உள்ளிறங்கிச் செல்வதற்குப் படிவரிசையுள்ள கிணறு. *Loc.*

இறங்குசட்டம் iṟaṅku-caṭṭam, *n.* <id.+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 18.)

இறங்குசாத்து iṟaṅku-cāttu, *n.* <id.+ A sect of the Chetṭi caste; செட்டிகளுள் ஒரு சாரார். (S. I. I. viii, 232.)

இறங்குநாகம் iṟaṅku-nākam, *n.* <id.+. A kind of curl-mark in cattle; மாட்டுச்சுழிவகை. (பெரியமாட். 21.)

இறவு iṟavu, *n.* <இற-. (யாழ். அக.) 1. Sloping roof; வீட்டிறப்பு. 2. Boundary; எல்லை.

இறவுள் iṟavuḷ, *n.* Hilly tract; குறிஞ்சி நிலம். (யாழ். அக.)

இறலிப்பை iṟali-p-pai, *n.* perh. இறலி+. Cocoon of the silk-worm; பட்டுப்பூச்சிக் கூடு. *Pond.*

இறாகு iṟāku, *n.* <Arab. *Irāq.* Arabia; அரபியாதேசம். இறாகுதேசத்தில் (அசுவசா. 1).

இறாட்டாணியம் iṟāṭṭāṇiyam, *n.* Distress; trouble; இடுக்கண். (யாழ். அக.)

இறு-த்தல் iṟu-, *11 v. tr.* 1. To express; சொல்லுதல். (நாகார்த்த.) 2. To stop; நிறுத்துதல். வலஞ்செயவிடா விறுத்தனவேறு (கலித். 104).

இறுக்கநெருக்கம் iṟukka-nerukkam, *n.* <இறுக்கம்+. Interval; இடைவெளி. தமது உத்யோகக் கடமைகளுக்கு அடுத்த இறுக்கநெருக்கங்களில் (மாலுமி. முக. 1).

இறுகரை iṟu-karai, *n.* <இறு-+. Eroded bank, as of a river; இடிக்கரை. (அக. நி.)

இறுதிநிலை iṟuti-nilai, *n.* <இறுதி+. 1. That which occurs in the end; ending; இறுதியில் நிற்பது. (கலித். 124, உரை, பக். 778.) 2. (Gram.) Termination, ending of a word; விகுதி. (நன். 134, சங்கர.)

இறுதியினற்கதி iṟutiyiṉaṟkati, *n.* <id.+. Final emancipation; நிருவாணம். இறுதியினற்கதி செல்லும் பெருவழி (மணி. 12, 59).

இறுபு iṟupu, *n.* <இறு-. Death; இறப்பு. இறுபும் புலம்பும் (பெருங். இலாவாண. 13, 12).

இறும்பு iṟumpu, *n.* 1. cf. இறும்பூது. Bee; வண்டு. (யாழ். அக.) 2. Worm; புழு. (சங்கற்பநி. 9, 15.) 3. Nature, quality; இயல்பு. (அக. நி.)

இறும்புளி iṟumpuḷi, *n.* Pulney Rowan, *Photinia notoniana,* a Kodaikanal tree; மர வகை. (Kodai.)

இறும்பூது iṟumpūtu, *n.* cf. சுரும்பு. (அக. நி.) 1. Bee; வண்டு. 2. Malabar glory lily; காந்தள்.

இறுவரையம் iṟu-varaiyam, *n.* <இறு-+வரை. (யாழ். அக.) 1. Limit; எல்லை. 2. Present moment; தற்சமயம்.

இறை iṟai, *n.* <id. 1. Debt; கடன். (அக. நி.) 2. cf. உறை. Sheath of a sword; வாளின் உறை. வாய்ந்த விறைவிட்டால் மருவலர்கள் மார்புறையாப் பாய்ந்து (கூளப்ப. 45). 3. Crowd; கூட்டம். (தக்கயாகப். 638, உரை.)

இறைக்கட்டு iṟai-k-kaṭṭu, *n.* <இறை+. Taxation; வரி. இறைக்கட்டும் தவிர்த்து (S. I. I. vii, 414).

இறைக்காசான் iṟai-k-k-ācāṉ, *n.* <இறை+. Skanda, as the Guru of Śiva; முருகக் கடவுள். இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை (பெருந்தொ. 102).

இறைகுத்து-தல் iṟai-kuttu-, *v. tr.* prob. இறை+. To estimate; மதிப்பிடுதல். (யாழ். அக.)

இறைச்சோறு iṟai-c-cōṟu, *n.* cf. எற் சோறு. A tax; வரிவகை. (S. I. I. viii, 87.)

இறைப்புணைப்படு-தல் iṟai-p-puṇai-p-paṭu-, *v. intr.* <id.+புணை+. To stand security for the payment of tax by a person; ஒருவன் இறுக்கவேண்டும் வரிக்குப் புணை கொடுத்தல். (S. I. I. v, 376.)

இறைப்பெட்டி iṟai-p-peṭṭi, *n.* <இறை-+. Ola basket for baling water; தண்ணீர் இறைக்க உதவும் ஓலைப்பெட்டி. *Tinn.*

இறைமகள் iṟai-makaḷ, *n.* <இறை+. Durgā; துர்க்காதேவி. இறைமக ளமுதுசெய்ய (தக்கயாகப். 751).

இறைமலை iṟai-malai, *n.* <id.+. Mt. Mēru; மேருமலை. இறைமலை வில்லி (தக்கயாகப். 170).

இறைமொழி iṟai-moḻi, *n.* <id.+. The Āgamas; இறைவனருளிய ஆகமம். இறை மொழிக் கல்லது மறுதர வோதி (சிலப். 10, 206).

இறையிறுக்குங்கோல் iṟai-y-iṟukkuṅ-kōl, *n.* <id.+இறு-+. Rod for measuring land for the purpose of fixing the tax; வரியிடுவதற்காக நிலத்தை அளக்க உபயோகிக்கும் அளவு கோல். இவ்வூரில் இறையிறுக்குங கோலால் இந்நிலம் ஏழுமாவரை (S. I. I. v, 107).

இறைவனூல் iṟaivaṉūl, *n.* <இறைவன்+. The Āgamas; கடவுளருளிய ஆகமம். இறைவனூலையும் அவனருள்வழிப்பட்டுத் தத்தமாபின்வரும் குரவர் பலர்நூலையும் (நன். 7, சங்கர.).

இறைவைமரம் iṟaivai-maram, *n.* <இறைவை+. A boat-like wooden trough used for baling water; தண்ணீர் இறைக்க மரத்தாற் செய்த ஓடம்போன்ற கருவி. *Loc.*

இன்பசாகரமடல் inpa-cākara-maṭal, *n.* <இன்பம் + சாகரம் +. A treatise on erotics; ஒரு காமநூல். (தத்துவப். 155, உரை.)

இன்பி-த்தல் inpi-, *11 v. tr.* <இன்பு. To cause to be happy; இன்ப முட்டுதல். என்னையுருக்கி யின்பித்தவடி (பாடு. திருவருட்.).

இன்மணியாரம் in-maṇi-y-āram, *n.* <இனி-மை + மணி +. An ancient musical treatise; இறந்துபட்டதோர் இசைநூல். (யாப். வி. 540.)

இன்றி inṟi, *adv.* <இன்-மை. Without; இல்லாமல். தனக்கொரு பயனின்றியிருக்க (கலித். 96, 30, உரை).

இன்று inṟu, <id. *part.* No; இல்லை.—*adv.* See இன்றி. உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே (நன். 172, மயிலை.).

இன்னு inṉā, *int.* cf. இந்தா. Here; இதோ. *Tinn.*

இன்னுவிசை inṉā-v-icai, *n.* <இன்னு +. (Pros.) One of the defects in the composition of verses; செய்யுட்குற்றம் இருபத்தேழனு ளொன்று. (யாப். வி. 525.)

இன்னிசைமாலை inṉicai-mālai, *n.* <இன்னிசை +. A treatise on *akapporuḷ;* அகப்பொருள் பற்றிய ஒரு நூல். (கள. கா. 24.)

இன்னியம் in-ṉ-iyam, *n.* <இனி-மை +. Musical instruments; வாச்சியங்கள். (பெருங். வத்தவ. 2, 30.)

இன்னியர் inṉiyar, *n.* <இன்னியம். Bards, singers; பாணர். (அக. நி.)

இனம் inam, *n.* Comparison; உபமானம். இனனுணர் முழுநலம் (திவ். திருவாய். 1, 1, 2).

இனவரி ina-vari, *n.* <இனம் +. An ancient tax in cash; பழைய காசாயவரிவகை. (S. I. I. 1, 89.)

இனவெழுத்துப்பாட்டு ina-v-eḻuttu-p-pāṭṭu, *n.* <id. +. (Pros.) A kind of *citṟira-kavi;* வல்லின முதலிய முவினங்களுள் ஓரினத்தெழுத்துக் களேவரப் பாடுஞ் சித்திரகவிவகை. (யாப். வி. 503.)

இனன் inaṉ, *n.* <id. 1. Kinsman; உறவினன். இன்னு தினனில் னூர் வாழ்தல் (குறள், 1158). 2. Equal; சமானன். (திவ். திருவாய். 1, 1, 2.) 3. Teacher; உபாத்தியாயர். (யாழ். அக.)

இனம்நாட்கள் inām-nāṭkaḷ, *n.* <இனம் +. Lay days; சரக்கேற்றற்காவது இறக்கற்காவது விடப்படும் நாட்கள். (M. Navi. 122.)

இனிப்புச்சேவு inippu-c-cēvu, *n.* <இனிப்பு +. A kind of confectionery; சீனிப் புச் சேர்ந்த சேவுப்பணியாரம். *Tinn.*

இனியபிரிவு iniya-pirivu, *n.* <இனி-மை + பிரிவு. Concubine's house; வைப்பாட்டி வீடு. சம் பிருதியெல்லா மினியபிரிவுக் களந்தரென்றும் (சர வண. பணவிடு. 182).

இனுக்காவலை inukkā-valai, *n.* A kind of net, used in fishing at sea; கடலில் வேலிபோற் கட்டி மீன் பிடிக்கவுதவும் வலை. *Loc.*

இஜதாசார் ijatācār, *n.* <U. *izzat-āsār* <Arab. *izzat-āthār.* Mark of respect; மரியாதை யின் அடையாளம். (P. T. L.)

இஷ்டப்பிரசாதம் iṣṭa-p-piracātam, *n.* <இஷ்டம் + (R.) 1. Gift of grace; கைம்மாறு வேண்டாக் கொடை. 2. Grace of God; தேவ கிருபை. 3. Boiled rice offered to the idols; தேவப்பிரசாதம். 4. Eucharist; தேவ அப்பம்.

இஷீகாஸ்திரம் iṣīkāstiram, *n.* <*iṣī-kāstra.* A kind of missile; அஸ்திரவகை. (கம்பரா. நிகும். 132, உரை.)

இஸ்கார் iskār, *n.* Ratlines; கப்பலில் லவு ராவுக்குக் குறுக்கே ஏணிப்படிபோல இடப்பட்டிருக் குஞ் சிறு குறுக்குக்கயிறுகள். (M. Navi. 85.)

இஸ்திபா istipā, *n.* <Arab. *isti'fa.* Deed of relinquishment; விடுதலைப்பத்திரம். (R. T.)

இஸ்தீங்கி istīṅki, *n.* Brails; கப்பம்பாயை ஏற்ற இறக்க உதவுங் கயிறுகள். (M. Navi. 86.)

இஸ்பேட் ispēṭ, *n.* <E. *spade.* Spades, in a pack of playing cards; விளையாட்டுச் சீட்டில் ஒரு சாதி. *Colloq.*

இஸ்பேட்ராஜா ispēṭ-rājā, *n.* <இஸ்பேட் +. Figure-head; அதிகாரமற்ற தலைவன். *Colloq.*

இஸாபா īsāpā, *n.* <Arab. *izāfah.* Additional charge imposed; அதிகவரி. (R. T.)

ஈ

ஈ-தல் ī-, *4 v. aux.* An auxiliary verb; ஒரு துணைவினை. தேறீயல்வேண்டும் (கலித். 98, 2).

ஈகு-தல் īku-, *5 v. intr.* cf. இறுகு-. To solidify; கட்டியாதல். திரட்டுப்பாலும் ஈனெநெய்யும் கட்டித்தயிரும் (திவ். பெரியாழ். 3, 2, 6, வ்யா. பக். 545).

ஈகை īkai, *n.* (அக. நி.) 1. Want; இல் லாமை. 2. Wind; காற்று.

ஈங்கு īṅku, *n.* Sandalwood; சந்தனம். (சங். அக.)

ஈச்சை īccai, *n.* <ஈந்த. Date-palm; ஈந்து. *Colloq.*

ஈச்சோப்பி ī-c-cōppi, *n.* <ஈ + சோப்பு-. Spider சிலந்தி. (யாழ். அக.)

ஈசதத்துவம் īca-tattuvam, *n.* <*īśa* +. (Śaiva.) One of five *cutta-tattuvam*, q. v.; சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒன்று. (சிவப். கட்.)

ஈசமனோகரி īca-maṉōkari, *n.* <id. + *manōharī*. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

ஈசன் īcaṉ, *n.* <*īśa*. (அக. நி.) 1. Brahmā; பிரமன். 2. Father; தகப்பன்.

ஈசனாள் īcaṉāḷ, *n.* <ஈசன் + நாள். The *nakṣatra tiruvātirai*; திருவாதிரை. (W.)

ஈசுரதத்துவம் īcura-tattuvam, *n.* <*īśvara* +. (Śaiva.) See ஈசதத்துவம். (சி. சி. 1, 65.)

ஈசுரமருந்து īcura-maruntu, *n.* <ஈசுவரன் +. cf. ஈசுரமூலி. Indian birth-wort; ஈசுரமூலி. *Pond.*

ஈசுவரக்கோவை īcuvara-k-kōvai *n.* <id. +. A kind of paddy, maturing in six months; ஆறுமாதத்திற் பயிராதும் நெல்வகை. (விவசா. 2.)

ஈசுவரிவிந்து īcuvari-vintu, *n.* <ஈசுவரி +. Sulphur; கந்தகம். (சங். அக.)

ஈசை īcai, *n.* <*īṣā*. Pole or shaft of a plough; ஏர்க்கால். (W.)

ஈட்டிப்பிடங்கு īṭṭi-p-piṭaṅku, *n.* <ஈட்டி +. Spear-head; ஈட்டியின் முனையுள்ள பாகம். (W.)

ஈட்டிராவுத்தன் īṭṭi-rāvuttaṉ, *n.* <id+. Lancer; ஈட்டிப்படைவீரன். *Pond.*

ஈடணம் īṭaṇam, *n.* <*īḍaṇa*. Fame; புகழ். (யாழ். அக.)

ஈடணை īṭaṇai, *n.* prob. *īṣaṇā*. Distress, affliction; துன்பம். என்னை வேரறுக்கி யிந்த வீடணையில் விட்டதுவும் முன்னைவினைதானே (பதசாகித்தியம்).

ஈடத்து īṭattu, *n.* <*īṣat*. A little; சிறிது. (சங். அக.)

ஈடழி-த்தல் īṭaḻi-, *v. tr.* <ஈடு +. To quell one's power; வலி கெடுத்தல். இராவணனை யீடழித்த (தேவா. 350, 8).

ஈடிகை īṭikai, *n.* <*iṣikā*. Painter's pencil; எழுதுகோல். (யாழ். அக.)

ஈடு īṭu, *n.* <இடு-. 1. Fit or proper subject; ஏற்ற பொருள். நின்சோதனைக்கு நான் ஈடா (சர்வசமய. பக். 126). 2. Turn; தடவை. இத்தத் தென்னை ஒரு ஈட்டுக்கு முப்பதுகாய் காய்க்கும்.

ஈடுகட்டு-தல் īṭu-kaṭṭu-, *v. intr.* <ஈடு +. To be durable, as a piece of cloth for wear; வஸ்திரம் முதலான பொருள்கள் பலநாள் உபயோகப்பட்டும் வன்மைகெடாது இருத்தல். *Loc.*

ஈடுசெய்-தல் īṭu-cey-, *v. tr.* <id. +. *Loc.* 1. To compensate; பிரதியாகச்செய்தல். 2. To adjust, balance; சரிக்கட்டுதல்.

ஈடுசோடு īṭu-cōṭu, *n.* <id. +. Equal; சமானம். ஈடுசோடற்ற சிற்சததியாம் (மஸ்தான். 92).

ஈடை īṭai, *n.* <*iṣā*. See ஈசை. (W.)

ஈணி īṇi, *n.* cf. அகணி. Fibre of palm; பனை நார். (யாழ். அக.)

ஈது īṭu, *n.* <Arab. *Īd*. 1. The festival of Īd; முகம்மதியத் திருநாட்களு ளொன்று. *Muham.* 2. The festival of Bakr-īd; பக்ரீத் திருநாள். *Muham.*

ஈதுலல்ஹா īṭul-alhā, *n.* <Arab. *Īd-ul-aḍhā*. See ஈது, 2.

ஈந்து īntu, *n.* Poison; நஞ்சு. (சங். அக.)

ஈப்பி īppi, *n.* <ஈர்ப்பி. Nit; பேன்முட்டை. (யாழ். அக.)

ஈயச்செடி īya-c-ceṭi, *n.* <ஈசை +. Tiger-stopper; இண்டு. (மூ. அ.)

ஈயசிந்தூரம் īya-cintūram, *n.* <ஈயம் + Red lead; சிந்தூரவகை.

ஈயத்தண்டு īya-t-taṇṭu, *n.* <ஈசை + Tiger-stopper; இண்டு. (மூ. அ.)

ஈயத்தின்பிள்ளை īyattiṉ-piḷḷai, *n.* <ஈயம் +. cf. ஈயக்குழவி. *Nīla-pāṣāṇam*, a prepared arsenic; நீலபாஷாணம். (யாழ். அக.)

ஈயலி īyali, *n.* cf. ஈயன்மூதாய். Cochineal, scarlet moth; தம்பலப்பூச்சி. (வை. மூ.)

ஈயாப்பத்தன் īyā-p-pattaṉ, *n.* <ஈ- + ஆ neg. +. Miser; உலோபி. (மதி. களஞ். i, 88.)

ஈயுவன் īyuvaṉ, *n.* prob. ஈழம். Rāvaṇa; இராவணன். (அக. நி.)

ஈர்[1]-த்தல் īr-, *11 v. tr.* To saw, split; அறுத்தல். ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேபகடித மானாற்போல பொருந்திப் போரவும் ப்ராப்தம் (ரஹஸ்ய. 609).

ஈர்[2] īr, *n.* prob. எயிறு. Cheek; கதுப்பு. (அக. நி.)

ஈர்க்கு īrkku, *n.* <ஈர். Feather; இறகு. மஞ்ஞை யீர்க்கு.

ஈர்பட்டு īrpaṭṭu, *n.* See ஈர்வெட்டு. (யாழ். அக.)

ஈர்மணி īrmaṇi, *n.* <ஈர்+. The hell, *irattiṉa-p-pirapai;* இரத்தினப்பிரபை என்னும் நரகம். (ஏலா. 67.)

ஈர்வாள் īr-vāḷ, *n.* <id.+. Sickle; அரிவாள். (அக. நி.)

ஈர்வெட்டு īr-veṭṭu, *n.* <ஈர்+. cf. ஈர்வாணி. Rope made of ribs of palmyra leaf; பனையீர்க்குக்கயிறு. (யாழ். அக.)

ஈரக்கையாலேதடவு-தல் īra-k-kaiyālē-taṭavu-, *v. tr.* <ஈரம்+. To console; to caress lovingly; அன்புகாட்டித் தேற்றுதல். நாட்டை ஈரக்கையாலேதடவி கம்ஸன்காலத்திற்பட்ட நோவுதீர ரசுவித்து (திவ். இயற். திருகுறுந், 1, வ்யா.).

ஈரங்கை īraṅ-kai, *n.* prob. ஈறு+. Curved cornice or projection; corbel; கோடுங்கை. (அக. நி.)

ஈரடி[1] īr-aṭi, *n.* <இரண்டு+. Second crop; இரண்டாம் போகம். (R. T.)

ஈரடி[2] īraṭi, *n.* See ஈராடி, 1. *Loc.*

ஈரடிப்பெட்டி īraṭi-p-peṭṭi, *n.* <ஈரடி+. Box which opens on both sides; இரண்டு பக்கமுந் திறத்தற்குரிய பெட்டி. *Pond.*

ஈரணம் īraṇam, *n.* Spurge; கள்ளி. (சங். அக.)

ஈரம் īram, *n.* prob. ஈர்-. 1. Part; பகுதி. (அக. நி.) 2. Saffron powder; குங்குமம். (சங். அக.)

ஈரமானி īra-māṉi, *n.* <ஈரம்+மானம். Hygrometer; காற்றிலுள்ள ஈரத்தையளக்குங் கருவி. *Mod.*

ஈரலுளர்த்தி īral-ulartti, *n.* <ஈரல்+உளர்-. A disease of the spleen, in cattle; மாட்டுநோய் வகை. (மாட்டுவை. சி. 41.)

ஈரற்கருகு-தல் īraṟ-karuku-, *v. intr* <id.+. To be very much afraid; மிகவும் பயப்படுதல். (யாழ். அக.)

ஈரற்கல் īraṟ-kal, *n.* prob. id.+. A medicinal stone; மருந்தாகுஞ்சிலை. (யாழ். அக.)

ஈரற்றீ-தல் īraṟṟī-, *v intr.* <id.+. See ஈரற்கருது-. (யாழ். அக.)

ஈராட்டி ir-āṭṭi, *n.* See ஈராடி. (யாழ். அக.)

ஈராடி īr-āṭi, *n.* <ஈரம்+. (யாழ். அக.) 1. Wet; dampness; ஈரம். 2. Cloudiness; மழைக்குணம்.

ஈராதிகாரணப்போதகம் īr-āṭi-kāraṇa-p-pōtakam, *n.* prob. இரு-மை+ஆதி+. Dualism; இருபொருண்மை. *Pond.*

ஈரிலை īrilai, *n.* Sun; சூரியன். (அக. நி.)

ஈரிறை īr-iṟai, *n.* <இரண்டு+. 1. Dyarchy; ஈரரசு. 2. Double taxation; இரண்டுமுறை பெறும் வரி. நானும் பிறந்து அவர்களும் பிறக்க வேணுமோ? ஈரிறையுண்டோ? (சூடி, 1, 3, ப்ர.).

ஈலி īli, *n.* prob. ஈர்-. Knife; கத்தி. (J.)

ஈவிழுங்கி īviḻuṅki, *n.* <ஈ+விழுங்கு-. *Pond.* 1. Fly-catcher; ஈயை விழுங்கும் பறவை. 2. Fly-catching lizard; ஈத் தின்னும் பல்லி. 3. Fly-trap; ஈயுண்ணுஞ் செடி. 4. Simpleton who believes in everything; எதையும் நம்பு முடன்.

ஈவுசோய்வு īvu-cōyvu, *n.* <ஈவு+சோர்-. Gift out of sympathy; மனம் இளகிக் கொடுக்குங் கொடை. (யாழ். அக.)

ஈழக்கருங்காசு īḻa-k-karuṅ-kācu, *n.* <ஈழம்+கரு-மை+. An old coin; பழையநாணயவகை. (M. E. R. 47 of 1925.)

ஈழம்புஞ்சை īḻam-puñcai, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. iv, 122.)

ஈழற்கடிவரி īḻaṟkaṭi-vari, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 24.)

ஈழைக்கொல்லி īḻai-k-kolli, *n.* <ஈளை+கொல்-. Yellow orpiment; அரிதாரம். (சங. அக.)

ஈளம் iḷam, *n.* Yellow-flowered fragrant trumpet-flower tree; பாதிரி. (சங். அக.)

ஈற்றுத்தாய் īṟṟu-t-tāy, *n.* <ஈற்று+. One's own mother, dist. fr. *māṟṟu-t-tāy;* பெற்ற தாய். (திவ். பெரியாழ். 3, 9, 4.)

ஈறு īṟu, *n.* <இறு-. Result; பயன். (அக. நி.)

ஈறுகடை īṟu-kaṭai, *n.* <ஈறு+. Final end; இறுதிமுடிவு. (யாழ். அக.)

ஈன் īṉ, *n.* 1. Ainee wood; மரவகை. *Loc.* 2. Sal; ஆச்சா. (சித். அக.)

ஈனசாமந்தன் īṉa-cāmantaṉ, *n.* <*hīna* +. A class of *cāmantar;* சாமந்தரிவகையினர். (சுக்கிரநீதி, 26.)

ஈனம்[1] īṉam, *n.* <*hīna.* Inclination, slope; சரிவு. (அக. நி.)

ஈனம்[2] īṉam, *n.* Hare; முயல். (அக. நி.)

உ

உ u, *n.* (Astrol.) Letter representing crow, in *pañca-paṭci;* பஞ்சபட்சிகளுள் காகங் குறிக்கும் எழுத்து. (பிங்.)

உக்கம்[1] ukkam, *n.* <*ugra.* Severity; உக்கிரம். உக்கதவர் திக்கதவர் (மேருமந். 1097).

உக்கம்[2] ukkam, *n.* <*ukṣan.* (அக. நி.) 1. Cow; பசு. 2. Fowl; கோழி.

உக்கரைத்தட்டு ukkarai-t-taṭṭu, *n.* <உள் + கரை +. The part just above the middle of the *valantarai* of a *mirutaṅkam;* மிருதங்க வலந்தலையின் நடுப்பாகத்துக்கு மேலுள்ள பாகம். (கலை மகள், xii, 400.)

உக்கா ukkā, *n.* Toddy; கள். (யாழ். அக.)

உக்காக்கம் ukkākkam, *n.* <உக்கம் +. Waist cord; அரைஞாண். (யாழ். அக.)

உக்கிட்டு ukkiṭṭu, *n.* <உள் + கட்டு. A kind of necklace; உட்கட்டு. *Loc.*

உக்கிரகந்தை ukkirakantai, *n.* <*ugra-gandhā.* 1. Sweet flag; வசம்பு. (சித். அக.) 2. Bishop's weed; ஓமம். (காசுரத்த.)

உக்கிரநாள் ukkira-nāḷ, *n.* <உக்கிரம் +. The five *nakṣatras, paraṇi, maṟam, pūram, pūrāṭam, pūraṭṭāti;* பரணி மகம் பூரம் பூராடம் பூரட்டாதி ஆகிய ஐந்து நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 36.)

உக்கிரமம் ukkiramam, *n.* <*ugra.* Blaze, glow; கூவாலை. *Pond.*

உக்கிரன் ukkiraṉ, *n.* <*ugra.* A manifestation of Śiva; சிவமூர்த்தங்களுள் ஒன்று. (காஞ்சிப்பு. சிவபுண். 15.)

உக்கு ukku, *n.* Clove; இலவங்கம். (சங். அக.)

உக்கும் ukkum, *n.* <U. *hukm.* Permission, order; உத்தரவு. (P. T. L.)

உக்கும்நாமா ukkum-nāmā, *n.* <U. *hukm-nāmā.* Written order; எழுத்து மூலமான உத்தரவு. (P. T. L.)

உக்குமத்து ukkumattu, *n.* <U. *hūkamat.* 1. Influence; செல்வாக்கு. *Loc.* 2. Arrogance; செருக்கு. *Tinn.* 3. Complicity; உடந்தை. *Tj.*

உக்குரோட்டு ukkurōṭṭu, *n.* prob. *krōṣṭu.* Jackal; நரி. (காமதீப.)

உக்குறள் u-k-kuṟaḷ, *n.* <உ +. The shortened *u;* குற்றியலுகரம். உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும் (நன். 164).

உக்கூம் ukkūm, *n.* See உக்கும். (P. T. L.)

உகந்துடைமை ukantuṭaimai, *n.* <உக- + உடை-மை. Right of a married woman to a share of her husband's property; கணவனுடைய சொத்தில் மனைவிக்குரிய பாகவுரிமை. *Nāñ.*

உகப்பார்பொன் ukappār-poṉ, *n.* perh. id. +. A tax; வரிவகை. (S. I. I. iii, 110.)

உகம் ukam, *n.* <*yuga.* Day; நாள். (அக. நி.)

உகவை ukavai, *n.* <உக-. 1. Favour; அநுகூலம். உள்குவார்கட்குகவைகள் பலவுஞ் செய்து (தேவா. 1146, 5). 2. See உகவைப்பொன். (S. I. I. iii, 38.)

உகவைப்பொன் ukavai-p-poṉ, *n.* <உகவை +. A tax in money; காசாயவகை. (S. I. I. vii, 290.)

உகளம் ukaḷam, *n.* <உகளி-. Delight; இஷ்டம். (அக. நி.)

உகளி ukaḷi, *n.* Gum; பிசின். (காமதீப.)

உகளு-தல் ukaḷu-, 5 *v. intr.* To turn upside down; பிறழ்தல். பொருகய லுகளிப் பாய (சீவக.1854).

உகிர்ப்புறவன் ukir-p-puṟavaṉ, *n.* <உகிர் + புறம். A jewel for nails; நகத்தின்மேல் அணியும் அணிவகை. (S. I. I. ii, 16.)

உகுனை ukuṉai, *n.* perh. உகு- + நோய். A disease affecting paddy; நெற்பயிருக்குரிய நோய் வகை. (நீலகேசி, 366, உரை.)

உச்சட்டம் uccaṭṭam, *n.* prob. *ucca.* (W.) 1. Straightness; நேர்மை. 2. Mark, butt; இலக்கு.

உச்சடை uccaṭai, *n.* <*uccaṭā.* (காசுரத்த.) 1. Foppishness; இடம்பாசாரம். 2. Garlic; வெள்ளுள்ளி. 3. A kind of grass; வட்டக்கோரை.

உச்சதரு ucca-taru, *n.* <*ucca* +. Cocoanut tree; தென்னை. (பச். மூ.)

உச்சநிலைநாள் ucca-nilai-nāḷ, *n.* <id. + நிலை +. The three *nakṣatras, mirukaciram, cittirai, aviṭṭam;* மிருகசிரம் சித்திரை அவிட்டம் என்ற மூன்று நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 36.)

உச்சம் uccam, *n.* <*ucca.* 1. One of eight *pāṭaṟ-payaṉ,* q.v.; எண்வகைப் பாடற்பயன்களுள் ஒன்று. (சிலப். 3, 16, உரை.) 2. (Erot.) A mode

of sexual union; புணர்ச்சிவகையுள் ஒன்று. (கொக்கோ. 3, 5.)

உச்சலம் uccalam, *n.* <*uccala.* Mind; மனம். (W.)

உச்சன் uccaṉ, *n.* <உச்சம். (Astrol.) Planet in its exalted sign of the zodiac; இராசி சக்கரத்தில் தன் உச்சநீலையில் நிற்குங் கிரகம். (பஞ்.)

உச்சாயம் uccāyam, *n.* prob. *ut-sāha.* Energy; உற்சாகம். *Pond.*

உச்சாரம் uccāram, *n.* <*ucchrāya.* Height; உயர்ச்சி. (யாழ். அக.)

உச்சிசந்தி ucci-canti, *n.* <உச்சி+. Noon service in the temple; உச்சிக்கால பூசை. (Insc.)

உச்சிமோடு ucci-mōṭu, *n.* <id.+மேடு. Ridge of a roof; கூரையின் இருபக்கமுஞ் சேருகின்ற மேலிடம். *Colloq.*

உச்சியணி ucci-y-aṇi, *n.* <id.+. Pendant of a head-gear; தலைச்சீராவில் உள்ள அலங்காரத்தொங்கல். *Pond.*

உச்சிரேகை ucci-rēkai, *n.* <id.+. (Astron.) The great circle passing through a celestial body and the zenith; வானவளவைக்குரிய பெரிய ரேகை.

உச்சினி ucciṉi, *n.* The second month; இரண்டாம் மாதம். (பொதி. நி.)

உச்சுவலம் uccuvalam, *n.* <*ujjvala.* (யாழ். அக.) 1. Desire; ஆசை. 2. Gold; பொன்.

உச்சேதம் uccētam, *n.* <*uc-chēda.* Desolation; நாசம். (நீலகேசி, 657.)

உசகம் ucakam, *n.* Castor-plant; ஆமணக்கு. (சங். அக.)

உசரம் ucaram, *adv.* cf. ஓசரம். [T. *kosara.*] For the sake of, on account of; பொருட்டு. உனக்குசரம் வந்தேன். *Loc.*

உசல் ucal, *n.* <*uṣas.* Dawn; விடியல். (நாமதீப.)

உசற்காலம் ucaṟkālam, *n.* <உசல்+. Dawn; விடியற்காலம். (யாழ். அக.)

சுவடு cuvaṭu, *n.* Dirt, mud; அசுத்தம். பசுக்களுக்குச் சுவடுபடாத புல்லும் தண்ணீரு முண்டாம்படியாக (திவ். பெரியாழ். 3, 5, 6, வ்யா. பக். 645).

சுவத்திகம் cuvattikam, *n.* <*svastika.* Temple with 201 towers and 25 storeys; 201 சிகரங்களையும் 25 மேனிலைக்கட்டுக்களையு முடைய கோயில். (சுக்கிரநீதி, 230.)

சுவர்க்கவேதி cuvarkkavēti, *n.* cf. சுவர்க்கம். Breast; தயம். (தக்கயாகப். 593, உரை.)

சுவர்க்காவதரணம் cuvarkkāvataraṇam, *n.* <*svarga*+*avataraṇa.* (Jaina.) One of *pañca-kalyāṇam;* பஞ்சகலியாணங்களு ளொன்று. (திருநூற். 4, உரை.)

சுவர்ச்சிலவணம் cuvarcci-lavaṇam, *n.* <*svarci*+. Saltpetre; வெடியுப்பு. (சுக்கிரநீதி, 329.)

சுவர்ணாங்கி cuvarṇāṅki, *n.* <*svarṇāṅgī.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

சுவர்த்திகாதனம் cuvarttikātaṉam, *n.* (Šaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 107, உரை.)

சுவர்ப்பிதுக்கம் cuvar-p-pitukkam, *n.* <சுவர்+. (Arch.) Offset in a building; பத்திரிப்பு. *Madr.*

சுவரணை cuvaraṇai, *n.* <*smaraṇā.* See சுயபோதம். *Pond.*

சுவரிலுப்பு cuvaril-uppu, *n.* <சுவர்+. Salt prepared from saline earth; உவர் மண்ணினின்றுங் காய்ச்சியெடுக்கு முப்பு. (சங். அக.)

சுவல்வரி cuval-vari, *n.* <சுவல்+. Squirrel; அணில். (யாழ். அக.)

சுவாக்கீரை cuvākkīrai, *n.* A shrub; பூடு வகை. (யாழ் அக.)

சுவாகை cuvākai, *n.* <*svāhā.* Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 22.)

சுவாசக்கண்ணறை cuvāca-k-kaṇṇaṟai, *n.* <சுவாசம்+. Air-cell of the lungs; சுவாசப் பையிலுள்ள கண்ணறை. (இங். வை.)

சுவாசகந்தி cuvācakanti, *n.* cf. சுவி. White fig; இத்தி. (யாழ். அக.)

சுவாத்தியாயம் cuvāttiyāyam, *n.* <*svaadhyāya.* Studying without the help of a teacher; voluntary study; சுயமாகக் கற்ற கல்வி. (R.)

சுவாதுமூலம் cuvātu-mūlam, *n.* <*svādu* +. Carrot; கிழங்குவகை. *Pond.*

சுவாந்தம் cuvāntam, *n.* <*svānta.* Mind; மனம். (W.)

சுவாமிக்கடா cuvāmi-k-kaṭā, *n.* <சுவாமி +. Ram dedicated to a temple; கோயிற்குப் பிரார்த்தனையாக விடப்படும் ஆட்டுக்கடா. *Loc.*

சுவாரி cuvāri, *n.* Back riggings of a ship; கப்பலின் பின்னணியம். (யாழ். அக.)

சுவாலினி cuvāliṉi, *n.* <*jvālinī.* (Šaiva.) A supernal world under the regency of Kālāk-

kiṇi; காலாக்கினியுலகங்களுள் ஒன்று. (சைவபூ. சங். 57.)

சுவீயை cuvīyai, *n.* <*svīyā*. See சுவகீயை. (சுக்கிரநீதி, 212.)

சுவைப்பாடு cuvai-p-pāṭu, *n.* <சுவை+. Taste; ருசி. இனிமையால் நினைக்கிறதுசுவைப் பாட்டை (திவ். பெரியதி. 1, 2, 10, வ்யா. பக். 91).

சுழங்கு-தல் culaṅku-, *5 v. intr.* prob. சுழல்-. To whirl; to be tossed about; உழலுதல். நெஞ்சகஞ் சுழங்குற (காஞ்சிப்பு. பன்னிரு. 276). (W.)

சுழல்நாற்காலி culal-nāṟkāli, *n.* <id. +. Revolving chair; சுற்றுங் கதிரைவகை. (மதி. க. ii, 190.)

சுழற்றி culaṟṟi, *n.* <சுழற்று-. Fan; விசிறி. அங்கைச் சுழற்றிகொண் டெழுப்பில் (ஞானபூசா. 25).

சுழிப்பு culippu, *n.* <சுழி-. Agitation; கலக்கம். மின்னினுடைய சுழிப்பையு முடைத்தாய் (திவ். பெரியாழ். 3, 5, 4, வ்யா. பக். 639).

சுழிமழை culi-maḻai, *n.* <id.+. Raining in patches; தீக்குத்தீக்காய்ப் பெய்யுமழை. (யாழ். அக.)

சுழிமுல்லாவெட்டு culimullāveṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 133.)

சுழியாறுபடு-தல் culi-y-āṟu-paṭu-, *v. intr.* <சுழி+ஆறு+. To be in floods, with whirlpools; சுழித்துச் செல்லும் பூர்ணப் பிரவாக மாதல். அழகாலும் சீலத்தாலும் காஞ்சிபுரநித்தனையும் நிரம்பிச் சுழியாறுபடும்படி திருவூரகத்திலே நின்றருளினவனே (திவ். திருநெடுந். 8, வ்யா. பக். 66).

சுழியோடி culi-y-ōṭi, *n.* <சுழியோடு-. Diver for pearls; முக்குளிப்பவன். (J.)

சுள்ளக்கன் cuḷḷakkaṉ, *n.* <சுள். (W.) 1. Angry person; கோபக்காரன். 2. Spirited horse or bull; அடங்காத குதிரை அல்லது மாடு.

சுள்ளெனல் cuḷḷeṉal, *n.* Expr. of sternness, severity or pungency; கடுமையா யிருத்தற் குறிக்குஞ் சொல். வெயில் சுள்ளென்றது (நேமிநா. 66, உரை).

சுளகம் cuḷakam, *n.* cf. *ślōka*. Terse saying; நன்மொழி. சுத்தருரைத்த சுளகமறிந்தவத் தாயவரே (தேசிகப். 1, 29).

சுளாவு-தல் cuḷāvu-, *5 v. tr.* <சுலாவு-. To whirl; சுழலச்செய்தல். (யாழ். அக.)

சுளுக்குப்பாரை cuḷuku-p-pārai, *n.* Shovel; மண்வாருங் கருவிவகை. *Loc.*

சுளுவு cuḷuvu, *n.* <*sulabha*. Alleviation; mitigation; மட்டுப்படுகை. (யாழ். அக.)

சுற்றலங்காரம் cuṟṟalaṅkāram, *n.* <சுற்று +. External decorations; வெளிபக்கத்திற் செய்யுஞ் சிங்காரிப்பு. *Pond.*

சுற்று-தல் cuṟṟu-, *5 v. tr.* To think, consider; to meditate; சிந்தித்தல். (திவ். திருச் சந்த. 52, வ்யா. பக். 151.)

சுற்றுக்கல்லூரி cuṟṟu-k-kallūri, *n.* <சுற்று-+. A portion of a building; கட்டடத்தி லோர் பகுதி. (S. I. I. ii, 107.)

சுற்றுப்பிரயாணம் cuṟṟu-p-piṟayāṇam, *n.* <id.+. Tour; பலவூர்கட்குஞ் சென்றுவருகை. *Mod.*

சுற்றுவசனம் cuṟṟu-vacaṉam, *n.* <id.+. Circumlocution; நேரேபன்றி சுற்றலாகப் பேசுகை. *Pond.*

சுன் cuṉ, *n.* (யாழ். அக.) 1. cf. *šūnya*. Emptiness; வெறுமை. 2. Whiteness; வெண்மை. 3. Semen; விந்து.

சுன்னைமுக்கி cuṉṉā-mukki, *n.* Indian senna; நில ஆவிரை. (இங். வை.)

சுஜாவந்தி cujāvanti, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 104.)

சுஸ்தி custi, *n.* <Persn. *susti*. Non-existence; இன்மை. தஸ்திக்கு எற்பாடு சுஸ்தியாய்ப் போச்சு (தாசில்தார்நா. பக். 28).

சூ

சூக்குமதாரி cūkkuma-tāri, *n.* <சூக்குமம் +. Deceitful person; வஞ்சகன். (யாழ். அக.)

சூகை cūkai, *n.* perh. *šuṣka*. That which is withered or shrunken; வற்றியுலர்ந்தது. சூகை முலை.

சூசககுரு cūcaka-kuru, *n.* <*sūcaka*+. Preceptor who instructs his pupil in the virtues of *camam, tamam* etc.; சமம் தமம் முதலியவற்றை உபதேசிக்குங் குரு. (விவேகசிந். பக். 28.)

சூசிகன் cūcikaṉ, *n.* <*sūcika*. Tailor; தையற்காரன். (யாழ். அக.)

சூசிகாபரணம் cūcikāparaṇam, *n.* A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 68.)

சூசிகாபைசாசி cūcikā-paicāci, *n.* A variety of the Prākṛt language; பாகதமொழி வகை. (சி. சி. பாயி. மறைஞா. பக். 6.)

சூசிவியூகம் cūci-viyūkam, *n.* <*sūci*+. A kind of battle-array; சூசிகாவியூகம். (சுக்கிரநீதி, 338.)

சூசு cūcu, *n.* <E. Shoes; பாதரட்சை. காலிலே சூசுகள் போடலாமா (கட்டபொம்மு. பக். 51).

சூட்சம் cūṭcam, *n.* prob. சூட்சுமம். Deceit; வஞ்சம். *Pond.*

சூட்சமகந்தம் cūṭcama-kantam, *n.* <*sūkṣma*+. Electricity; மின்சாரம். *Pond.*

சூட்சவண்டி cūṭca-vaṇṭi, *n.* <சூட்சம்+. Bicycle; மிதிவண்டி. *Loc.*

சூட்டு cūṭṭu, *n.* <சூடு-. Capital of a pillar; தூணின் தலைக்கல். *Loc.*

சூடடி-த்தல் cūṭaṭi-, *v. tr.* <சூடு+. See சூடுபோடு-. *Tinn.*

சூடாலம் cūṭālam, *n.* <*cūḍā*. Head; தலை. (யாழ். அக.)

சூடிகை cūṭikai, *n.* <*cūḍikā*. Fabulous gem on a cobra's hood; நாகத்தினுடைய படத்திலுள்ளதாகக் கருதப்படும் அரதனமணி. பட்டத்தெடுத்த சூடிகை பறித்தமே (தக்கயாகப். 362).

சூடுபோடு-தல் cūṭu-pōṭu-, *v. tr.* <சூடு+. To brand, as animals; மாடு முதலிய பிராணிகளுக்குக் குறிசுடுதல்.

சூடுவளர்தல் cūṭu-vaḷartal, *n.* <id.+. Granular ophthalmia; கண்ணோய்வகை. (M. L.)

சூத்திரவுருவம் cūttira-v-uruvam, *n.* <சூத்திரம்+. Puppet in *pommal-āṭṭam;* பொம்மலாட்டத்தில் ஆடும் பதுமை. (யாழ். அக.)

சூத்திரன் cūttiraṉ, *n.* <*sūtra*. One who wears the triple cord or the sacred thread; முப்புரிநூல் அணிந்தோன். (யாழ். அக.)

சூதகபாத்தியம் cūtaka-pāttiyam, *n.* <சூதகம்+. Nearness of relationship entailing observance of pollution on occasions of birth and death; தீட்டுக் கொண்டாடும்படியான நெருங்கிய பந்துத்துவம். (மதி. க. ii, 79.)

சூதடி-த்தல் cūṭaṭi-, *v. tr.* <சூது+. To cheat, deceive; ஏமாற்றுதல். வீட்டிற் சூதடித்தசாமிருக்கிற்போமோ (குருகூர்ப்.).

சூதமணி cūta-maṇi, *n.* perh. சூதம்+. A medicinal preparation; ஒருவகைக் கட்டுமருந்து. (தஞ். சர. iii, 76.)

சூதராட்சசன் cūta-rāṭcacaṉ, *n.* <*sūta*+. A kind of amber; பொன்னம்பர். (யாழ். அக.)

சூதவைரி cūta-vairi, *n.* perh. சூதம்+. Tender leaf of bael tree; வில்வத்தளிர். (யாழ். அக.)

சூதானு cūṭāṉu, *n.* prob. *sāvadhāna.* cf. சூதானம். 1. Repair; பழதுபார்க்கை. (கோயிலொ. 36.) 2. Care, circumspection; முன்சாக்கிரதை. *Loc.* 3. Safety; சேமம். *Loc.*

சூதி cūti, *n.* <*sūti*. Childbirth; பிள்ளைப்பேறு. *Pond.*

சூதிமம் cūtimam, *n.* perh. *sūci.* Stitching; தைக்கை. (யாழ். அக.)

சூந்து cūntu, *n.* perh. சுளுந்து. Straw effigy; கொடும்பாவி. *Tinn.*

சூப்பியறுத்தல் cūppi-y-aṟuttal, *n.* <சூப்பி+. Circumcision; சுன்னத்துக்கலியாணம். *Pond.*

சூபி cūpi, *n.* <Arab *sūfi*. Pious man; devotee; பக்தன். *Muham.*

சூர்ப்பகர்ணன் cūrppa-karṇaṉ, *n.* <*Śūrpa-karṇa.* God Gaṇēša; விநாயகக்கடவுள். (சர. பேந்திர. குற. 8, 3.)

சூர்ப்பகன்னம் cūrppa-kaṉṉam, *n.* <*śūrpa-karṇa.* Elephant; யானை. (யாழ். அக.)

சூரியகபாலம் cūriya-kapālam, *n.* <*sūrya*+. Headache which lasts from sunrise to sunset; எழுஞாயிறு நோய். (பராசர. i, 24.)

சூரியகாந்தம் cūriya-kāntam, *n.* <id.+. Mus. A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சங். 17.)

சூரியகாந்தாரி cūriya-kāntāri, *n.* <id.+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

சூரியமணி cūriya-maṇi, *n.* <id.+. A kind of shoe-flower, *Hibiscus phoeniceus;* செம்பரத்தைவகை. *Pond.*

சூரியவாஸ்து cūriya-vāstu, *n.* <id.+. House whose measurement east to west is longer than that of south to north; கிழக்கு மேற்காக நீண்டிருக்கும் வீடு. (சிற்பரத். 16.)

சூலதீபம் cūla-tīpam, *n.* <*śūla*+. A kind of temple lamp; கோயில் தீபவகை. (பரத. ஒழிவி. 41-43.)

சூலினி cūliṉi, *n.* A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சங். 47.)

சூலைக்குச்சம் cūlai-k-kuccam, *n.* <சூலை+. A kind of disease; நோய்வகை. (கடம்ப. இலீலா. 110.)

சூற்பிபாசம் cūṟ-pipācam, *n.* prob. சூல்+. A hell; நரகவகை. (சி. போ. பா. 2, 3, பக். 204.)

சூழ்வளிக்கிணறு cūḻāvaḷi-k-kiṇaṟu, *n.* <சூழ்வளி+. Under-well inside a well; உள்ளுறைக் கிணறு. *Loc.*

சூனியார்க்கம் cūṉiyārkkam, *n.* <*śūnya*+. (Astrol.) Predicting the period when the prices of commodities will rise; அகவிலை ஏறுங் காலத்தைக் கணிக்கை. (சங். அக.)

சூனியோபாதானம் cūṉiyōpātāṉam, *n.* <id.+*upādhāna*. State of void, as the principle from which the visible universe came into existence; உலகம் உண்டாவதற்குக் காரண மான சூனியநிலை. (W.)

சூனை cūṉai, <*sūnā*. Slaughter-house; வதைசெய்யப்படும் இடம். சொன்ன சூனைத் துறந்த வற்றட்டன (நீலகேசி, 314).

சூஸ்திரம் cūstiram, *n.* Corr. of ஸூத்திரம். Machine, engine; இயந்திரம். *Colloq.*

செ

செ-த்தல் ce-, *11 v. tr.* To intend; to purpose; to design; கருதுதல். வெப்புடை யாழுஎச் செத்தனென் (பதிற்றுப். 86).

செக்குக்கிழி-த்தல் cekku-k-kiḻi-, *v. intr.* <E. *cheque*+. To issue cheque; உண்டியல் எழுதுதல். *Mod.*

செக்குமன்றாடி cekku-maṉṟāṭi, *n.* prob. செக்கு+. A tax; வரிவகை. (M. E. R. 134 of 1924.)

செக்குவெட்டு-தல் cekku-veṭṭu-, *v. intr.* <E. *cheque*+. See செக்குக்கிழி-. *Mod.*

செகண்டிமுத்திரை cekaṇṭi-muttirai, *n.* perh. செகண்டி+. (Śaiva.) A hand-pose; முத்திரை வகை. (சைவாத. 19.)

செகண்டை cekaṇṭai, *n.* cf. செகண்டி. Gong; செகண்டி. தண்ணுமை செகண்டை (மேருமந். 1030).

செகதம் cekatam, *n.* Eating; பட்சிக்கை. (யாழ். அக.)

செகதம்பிகை cekat-ampikai, *n.* <*Jagad-ambikā*. See செகன்மாதா.

செகதி cekati, *n.* perh. செய்தி. Indication, hint; இங்கிதம். (யாழ். அக.)

செகன்மாதா cekaṉ-mātā, *n.* <*Jagan-mātā*. Pārvatī, as Mother of the World; பார்வதி. வேதாகம மேலுறையுஞ் செகன்மாதாவும் கீயாதலினால் (பேரின்பக்கீர்த். பக். 67).

செங்கண்ணான் ceṅ-kaṇṇaṉ, *n.* prob. செம்-மை+கண். A kind of fish; மீன்வகை. குமிளா மாசினி செங்கண்ணான் (பரூஉ. பள்ளு. 74).

செங்கழுநரை ceṅkaḻaṉārai, *n.* <id.+கழல்+. Pelican ibis; செங்காநாரை. (யாழ். அக.)

செங்கழுநீர்க்கல் ceṅ-kaḻunīr-k-kal, *n.* <செங்கழுநீர்+. Red ochre; reddle; காவிக்கல் வகை. (W.)

செங்கலை ceṅkaḻai, *n.* <செம்-மை+கழை. Red sugarcane; செங்கருப்பு. (யாழ். அக.)

செங்கற்சீரை ceṅkaṟ-cīrai, *n.* <செங்கல்+. Ochre-colored cloth; காவித்துணி. கையில் அர்த்தமுண்டான காலம் பார்யையைச் செங்கற்சீரை கட்டிக் கூப்பிட்டுத் திரியவிடுமவன் (திவ். பெரியதிரு. 1, 1, 4, வ்யா. பக். 34).

செங்கற்றாழை ceṅ-kaṟṟāḻai, *n.* <செம்-மை+. A species of aloes; கற்றாழை வகை. (சித். அக.)

செங்கறுப்பிறுங்கு ceṅ-kaṟuppiṟuṅku, *n.* <id.+கறுப்பு+. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

செங்கனிறமணி ceṅkaṉiṟa-maṇi, *n.* <செங்கல்+நிறம்+. A kind of precious stone; கோவாங்கப்பதுமராகம். (யாழ். அக.)

செங்காரை ceṅ-kārai, *n.* <செம்-மை+. Spurious honey-thorn; காரை. (L.)

செங்குட்டம் ceṅ-kuṭṭam, *n.* <id.+. A disease; நோய்வகை. தணிந்திடச் செய்யா திடர் செய்யுஞ் செங்குட்டரோகர் (கடம்ப. பு. இலீலா. 124).

செங்குறுவை ceṅ-kuṟuvai, *n.* <id.+. A kind of paddy; ஒருவகைநெல். கோடைக்குறுவை குளவாழை செங்குறுவை (நெல்விடு. 179).

செங்கொடிக்காணம் ceṅ-koṭi-k-kāṇam, *n.* <id.+. An ancient tax; பழையவரிவகை. (S. I. I. ii, 352.)

செஞ்சாமிருதம் ceñcāmirutam, *n.* Corr. of செஞ்சாமாருதம். Show or display of skill; செஞ்சாமாருதம். *Loc.*

செஞ்சிலுவைச்சங்கம் ceñ-ciluvai-c-caṅkam, *n.* <செம்-மை+சிலுவை+. Red-cross society; யுத்தகாலத்தில் உதவிசெய்யும் ஒரு கூட்டத்தார். *Mod.*

செஞ்சிற்றகத்தி ceñ-ciṟ-ṟ-akatti, *n.* <id.+. A variety of common sesban; மர வகை. (சித். அக.)

செஞ்சுருட்டை ceñ-curuṭṭai, *n.* <id.+. A species of ragi; வரகுவகை. (விவசா. 3.)

செஞ்சொட்டி ceñ-coṭṭi, *n.* <id.+. A plant; பூடுவகை. செஞ்சொட்டி யடிபொட்டி (குரு கூர்ப். 45).

செட்டுக்காரர் ceṭṭu-k-kārar, *n.* <செட்டு +. Dēvāṅgas of Coimbatore; கோயம்புத்தூரில் வாழும் தேவாங்க சாதியார். (E. T. ii, 155.)

செடம் ceṭam, *n.* <*śaṭha.* Evil humour of the body destroying the innate intelligence of the soul at birth; பிறக்கும்போது ஆன்மாவின் நல்லறிவைக் கெடுக்கும் வாயு. செடநீறெழ வெரிக்குங் க்ருபாகர (நூற்றெட்டுத். திருப்புகழ். 15).

செண் ceṇ, *n.* <செண்ணு-. Tresses done into a knot; மகளிர் கொண்டை. செண்ணியற் சிறுபுறம் (அகநா. 59).

செண்பகக்குளிகை ceṇpaka-k-kuḷikai, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (Pudu. Insc. 261.)

செணம் ceṇam, *n.* <*kṣaṇa.* Moment; க்ஷணம். (யாழ். அக.)

செத்தல் cettal, *n.* <சா-. Chaff, withered or blighted grain; பதர். (S. I. I. v, 84.)

செத்தலை cettalai, *n.* perh. செய்+தலை. Cultivation accounts; உழவுக் கணக்கு. செத்தலையிலே புள்ளித்தரவு எழுதவும்.

செத்து cettu, *n.* prob. செ-. Doubt; சந்தேகம். (யாழ். அக.)

செத்துவம் cettuvam, *n.* <*satva.* Evil spirit; பிசாசம். செத்துவங்க டாக்கி (லீலகேசி, 112).

செந்தலி-த்தல் centali-, *11 v. intr.* To be fresh and attractive; செவ்வியுறுதல். நம்முகம் பண்டுபோலே செந்தலித்திருக்க நாம் காண்பதெப்போதோ? (திவ். திருநெடுந். 12, வ்யா. பக். 107).

செந்தாரை cen-tārai, *n.* <செம்-மை+. Pale redness; வெண்மைகலந்த சிவப்பு. *Loc.*

செந்தாழம்பழம் cen-tāḻam-paḻam, *n.* <id.+. Pine-apple fruit; அன்னாசிப்பழம். (மூ. அ.)

செந்தாழை cen-tāḻai, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (குருகூர்ப். 58.)

செந்திருக்கை cen-tirukkai, *n.* <id.+. A kind of *tirukkai* fish; திருக்கைமீன்வகை. (D.)

செந்திலகம் cen-tilakam, *n.* <id.+. A kind of plant; செடிவகை. (புட்ப. 29.)

செந்தீம் centīm, *n.* <Fr. *centime.* Centime, one hundredth part of a franc; பிரெஞ்சுக் காசின் நூற்றிலொரு பங்கு. *Pond.*

செந்துநாசனம் centu-nācaṇam, *n.* <செந்து+. Asafoetida; பெருங்காயம். (யாழ். அக.)

செந்துரிப்போ-தல் centuri-p-pō-, *v. intr.* perh. சிந்தூரி-+. To stop the holes in an earthen vessel with lac; மண் பாண்டத்தின் ஓட்டைபை அரக்காலடைத்தல். *Tinn.*

செந்துருக்கம் centurukkam, *n.* <சந்திரகம். Ola leaf wound round an ola letter; எழுதிய ஓலையின்மேற் சுற்றும் ஓலைச்சுருள். (யாழ். அக.)

செந்துறைச்செந்துறை centuṟai-c-centuṟai, *n.* <செம்-மை+. A kind of musical composition; இசைப்பாட்டுவகை. (யாப். வி. 537.)

செந்துறைமார்க்கம் centuṟai-mārkkam, *n.* <id.+. Musical composition which could be sung in any of the four major *paṇ* and of the 21 *tiraṇ;* நாற்பெரும் பண்ணிலும் இருபத்தொரு திறனிலும் பாடக்கூடிய இசைப்பாடல். (யாப். வி. 537.)

செந்தூக்கு cen-tūkku, *n.* <id.+. Weight which can be easily lifted by a person; கையால் இலேசாய்த் தூக்குங் கனமுள்ளது. (யாழ். அக.)

செந்தூட்படுத்து-தல் centūṭ-paṭuttu-, *v. intr.* <செந்தூள்+. To reduce to dust; நாசஞ் செய்தல். வழக்கையெல்லாம் செந்தூட்படுத்தி (பெரின் பக்கீர்த். பக். 103).

செந்தூரி-த்தல் centūri-, *11 v. intr.* <செந்தூரம். To calcine; சிந்தூரமாக்குதல். (யாழ். அக.)

செந்நெய்தல் cen-neytal, *n.* <செம்-மை+. A kind of water-lily; அல்லிக்கோடிவகை. (புட்ப. 4.)

செந்நென்முத்து cennen-muttu, *n.* <செந்நெல்+. Pearl believed to be formed in *cennel* paddy; செந்நெலில் உண்டாவதாகக் கருதப்படும் முத்து. (யாழ் அக.)

செப்பவாய் ceppavāy, *n.* Waist; இடை. (யாழ். அக.)

செப்பாடல் ceppāṭal, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவி. 139.)

செப்பாடு cep-pāṭu, *n.* prob. செப்பம்+. Straightness, justness; நேர்மை. செப்பாடுடைய திருமாலவன் (திவ். பெரியாழ். 3, 5, 6).

செப்புநிறம் ceppu-niṟam, *n.* <செம்பு+. Dark-red colour; கருஞ்சிவப்பு. (யாழ். அக.)

செப்புப்பத்திரம் ceppu-p-pattiram, *n.* <id.+. Copper-plate grant; செப்புப்பட்டயம். விடுபேரூகச் செப்புப் பத்திரஞ்செய் தட்டிக் கொடுத் தேன் (T. A. S. ii, 68).

செப்புமலை ceppu-malai, *n.* <id.+. Ochre-coloured cloth; காஷாயவுடை. (யாழ். அக.)

செபக்கூடம் cepa-k-kūṭam, *n.* <செபம்+. Chapel; கிறிஸ்தவர் செபஞ்செய்யு மிடம். *Chr.*

செபத்திட்டப்புஸ்தகம் cepa-t-tiṭṭa-p-pustakam, *n.* <id.+திட்டம்+. Directory for worship at the church; கிறிஸ்தவர்கள் செபங்கள் செய்யவேண்டிய காலம் முதலியவற்றைக் குறிக்குஞ் சுவடி. *Pond.*

செம்பஞ்சுநிறமணி cem-pañcu-niṟa-maṇi, *n.* <செம்-மை+பஞ்சு+. A kind of precious stone; சௌகந்திகப்பதுமராகம். (யாழ். அக.)

செம்பட்டலரி cem-paṭṭalari, *n.* <செம்-மை+. A kind of oleander; அலரிவகை. (புட்ப. 29.)

செம்பட்டை cem-paṭṭai, *n.* <id.+. A kind of musical instrument; ஒருவகை வாத்தியம். குடமொடு பாணி யிடக்கை செம்பட்டை (வள்ளி. கதை. Ms.).

செம்படம் cem-paṭam, *n.* <id.+. See செப்புமலை. (நீலகேசி, 244, உரை.)

செம்படர் cem-paṭar, *n.* <id.+படம். Buddhists, as wearing red-coloured cloth; பௌத்தர்கள். இது செம்படர்க ளிறைவ னுறையு மிடம் (நீலகேசி, 464).

செம்பன் cempaṉ, *n.* <செம்பு. Brown-coloured cow or bull; சிவலை. (யாழ். அக.)

செம்பாந்தள் cem-pāntaḷ, *n.* <id.+. Moon's descending node; கேது. (சாதகசிந். 7.)

செம்பால்மூடாங்கி cempālmuṭāṅki, *n.* A shrub; பூவகை. (யாழ். அக.)

செம்பிறை cem-piṟai, *n.* <செம்-மை+. 1. A kind of metallic ore; கானற்கல். (யாழ். அக.) 2. See செம்பொடி, 1. (யாழ். அக.)

செம்பினிறம் cempiṉiṟam, *n.* <செம்பு+நிறம். A kind of precious stone; மாந்தளிர்க் கல். (யாழ். அக.)

செம்பு cempu, *n.* A blemish in coin; நாணயக்குற்றவகை. (சரவண. பணவிடு. 66.)

செம்பை cempai, *n.* A disease affecting paddy crop; நெற்பயிரின் நோய்வகை. (நீலகேசி, 366, உரை.)

செம்பொடி cem-pōṭi, *n.* <செம்-மை+. 1. Blue stone; நீலக்கல். (யாழ். அக.) 2. Red oxide of mercury; சிந்தூரம். செம்பொடிப் புரத்திக் கயங்களே (தக்கயாகப். 496).

செம்போத்து cempōttu, *n.* Champak tree; சேண்பகம். (யாழ். அக.)

செம்போத்துக்காரி cempōttu-k-kāri, *n.* <செம்போத்து+. Bull partly grey and partly black in colour; சில இடங்கள் வெளுத்தும் சில இடங்கள் கறுத்து முள்ள எருது. *Loc.*

செம்மண் cem-maṇ, *n.* <செம்-மை+. A flaw in rubies, one of *māṇikka-k-kuṟṟam;* மாணிக்கக்குற்றங்களு ளொன்று. (திருவாலவா. 25, 14.)

செம்மணிச்சை cem-maṇiccai, *n.* <id.+ prob. மணிச்சிகை. A tree; மரவகை. (S. I. I. iii, 408.)

செய்காடு cey-kāṭu, *n.* <செய்-+. Thicket; குறுங்காடு. (திருக்கோ. 148, உரை.)

செய்காரியவட்டவணை cey-kāriya-aṭṭavaṇai, *n.* <id.+காரியம்+. Index of items of work to be done in temple service; கோயிலில் நடக்க வேண்டிய காரியங்களைக் காட்டும் பட்டி. *Loc.*

செய்கால் cey-kāl, *n.* <id.+. Labour necessary for the cultivation of lands; நிலச் சாதுபடி செய்தற்கு வேண்டும் உழைப்பு. *Tj.*

செய்கைக்காரன் ceykai-k-kāraṉ, *n.* <செய்கை+. Servant; வேலைக்காரன். (யாழ். அக.)

செய்கைத்தரை ceykai-t-tarai, *n.* <செய்கை+. Field prepared for sowing; பண்படுத்தின நிலம். (யாழ். அக.)

செய்திப்பிழை ceyti-p-piḻai, *n.* <செய்தி+. Unconscious mistake; slip; அறியாது செய்த தவறு. எப்பொழுதுந் தன் மனத்துக்கேற்க நடப்பார்க் கொரு செய்திப்பிழை வாராதோ தினகரா (தினகர வெண்பா, 85).

செய்துகோள் ceytu-kōḷ, *n.* <செய்-+. Artificiality; தானே உண்டாகாது செய்துகொள் ளப்பட்டது. (நம்பியகப். 1, பக். 36.)

செய்நீர் cey-nīr, *n.* <id.+. Tincture; மருந்துச் சரக்கினின்று இறக்கப்படுஞ் சத்துநீர். *Loc.*

செய்ம்மெழுகு cey-m-meḻuku, *n.* <id+. Lac; அரக்கு. *Loc.*

செய்யுட்டாரணை ceyyuṭ-ṭāraṇai, *n.* <செய்யுள்+தாரணை. One of *navatāraṇai,* q.v.; நவதாரணையுள் ஒன்று. (W.)

செய்யோன் ceyyōṉ, *n.* <செம்-மை. Sun; சூரியன். (சீவக. 2322, உரை.)

செயங்கொண்டான் ceyaṅ-koṇṭāṉ, *n.* <செயம்+. A kind of paddy; ஒருவகை நெல். *சித்திரக்காலிவாலன் செயங்கொண்டான் மணல்வாரி* (முக்கூடற். 97).

செயபரி ceya-pari, *n.* <id.+. State horse; பட்டத்துக் குதிரை. (யாழ். அக.)

செயவானை ceya-v-āṉai, *n.* <id.+. State elephant; பட்டத்து யானை. (யாழ். அக.)

செயினட்டிகை ceyiṉ-aṭṭikai, *n.* <E. *chain*+. A necklet in the pattern of a watch chain to which a pendant is attached; கடிகாரச் சங்கிலிபோலச்செய்த அட்டிகைவகை. *Mod.*

செருவாடி ceruvāṭi, *n.* <சிறுவாடு. Petty savings in money; சிறுவாடு. *செருவாடி போகம் கொண்டு* (S. I. I. v, 285).

செல்லாமை cellāmai, *n.* <செல்-+ஆ neg.+. Powerlessness to control oneself; ஆற்றமை. *பெரிய திருவடியுடைய செல்லாமையாலும் தன் செல்லாமையாலும் நித்யஸூரிகளை அனுபவிப்பிக்கைக் காகவும் அழகு சென்டேறக் கடவதாயிறே யிருப்பது* (திவ். திருநெடுந். 6, வ்யா. பக். 50).

செல்லுஞ்செலவுக்கு celluñ-celavukku, *adv.* <id.+. Sufficiently for actual or necessary expenses; அவசியமான செலவுக்குப் போதியதாக. *Loc.*

செல்லெழுத்து cel-l-eḻuttu, *n.* <செல்+. (Legal.) Endorsement of payment, as on bonds; உண்டியல் பத்திரம் முதலியவற்றில் வரவு வைத்திடுங் கையொப்பம். *Loc.*

செல்லெழுது-தல் cel-eḻutu-, *v. intr.* <id.+. To cancel, as a bond, by superscription; பத்திரத்திற் கடன் தீர்ந்ததாக எழுதி ரத்து செய்தல். *Loc.*

செல்லொப்பம் cel-l-oppam, *n.* <id+. (Legal.) Counter-signature; பத்திரம் முதலியவைகளில் இடப்பெறும் மேல் ஒப்பம். (J.)

செல்வக்கடி celva-k-kaṭi, *n.* <செல்வம்+. Biting, in playfulness; பருங்கடி. (யாழ். அக.)

செல்வர் celvar, *n.* <id. *Śrī-pali* in Viṣṇu temples; திருமால் கோயிலிலுள்ள ஸ்ரீபலிஹரித்தி. *Loc.*

செலு celu, *n.* prob. செதில். Splinter; சிலாம்பு. *பௌவமுற்றுமோர் செலுவுட்சென்று* (பாக வத. 8, 8, 17).

செலை celai, *n.* <சிலை. Fragrant sirissa; சிலை. (G. Tj. D. I, 115.)

செவ்வண் cevvaṇ, *n.* prob. செம்-மை. Steepness; செங்குத்து. (யாழ். அக.)

செவ்வாக்கு cev-vākku, *n.* <id.+. Long curve; நீண்ட வளைவு. (யாழ். அக.)

செவ்வாய் cev-vāy, *n.* <id.+. Festival in a Piṭāri temple; பிடாரிகோயில் திருவிழா. *Cetti.*

செவ்வியம் cevviyam, *n.* Cinnabar; பவளமஞ்சிலை. *Pond.*

செவ்வெள்ளையிறுங்கு ce-v-veḷḷai-y-iṟuṅku, *n.* <செம்-மை+. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

செவணை cevaṇai, *n.* perh. செவி+அணை-. Deafness; செவிடு. *Loc.*

செவிக்காயம் cevi-k-kāyam, *n.* <id.+. Earwax; காதுக்குறும்பி. *Loc.*

செவிப்படு-தல் cevi-p-paṭu-, *v. intr.* <id.+. To be heard; கேட்கப்படுதல். *ஆபரண வொலி செவிப்படா நின்றது* (ஈடு, 10, 6, 6, வ்யா. பக். 200).

செவிப்பாம்பு cevi-p-pāmpu, *n.* <id.+. A blemish in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரிய மாட். 20.)

செவிமலர் cevi-malar, *n.* <id.+. Inner ear; உட்செவி. *Tinn.*

செவியம் ceviyam, *n.* Ear; செவி. (திவ். கண்ணிநுண். 10, வ்யா. பக். 82.)

செழுகாதனம் celukātaṉam, *n.* (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

செழுவர் celuvar, *n.* A sub-division of the Palḷar caste; பள்ளர்வகையினர். *Tp.*

செறி-த்தல் ceṟi-, *11 v. tr.* To close, shut, as eyes; மூடுதல். *கண்ணையும் செறித்து* (திவ். திருப்பல். 3, வ்யா. பக். 40).

செறுப்புநோய் ceṟuppu-nōy, *n.* perh. செறு-+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 111.)

சென்னபட்டணத்தான் ceṉṉapaṭṭaṇattāṉ, *n.* <சென்னபட்டணம். An ancient coin; பழையநாணய வகை. (பணவிடு. 117.)

சென்னசிறை ceṉṉaciṟai, *n.* A plant; பூடுவகை. (T. C. M. ii, 2, 649.)

சென்னம் ceṉṉam, *n.* perh. சின்னம். Shape; வடிவு. (யாழ். அக.)

சென்னீர்வெட்டி cennīr-veṭṭi, *n.* <id.+ id.+. A tax; வரிவகை. (S. I. I. iii, 300.)

சென்னீரமஞ்சி cennīramañci, *n.* <செல்-+நீர்+. A tax; வரிவகை. (S. I. I. vi, 155.)

சே

சேக்பறுவான் cēkparuvāṉ, *n.* Cross-jack yard; களமிமரத்தின் அடிக்கட்டைக்குக் குறுக்கே போடப்படும் பறுவான். (M. Navi. 82.)

சேகரம் cēkaram, *n.* Horse-radish tree; முருங்கை. (பரி. அக.)

சேகரி-த்தல் cēkari-, *11 v. intr.* <*šēkhara.* To excel; சிறந்திருத்தல். அவர்களுக்குச் சிகாமணி போலே சேகரிக்குமவராய் (திவ். பெருமாள். தனியன், வ்யா. பக். 6).

சேகாரம் cēkāram, *n.* <சேகரி-. That which is gathered together; சேகரித்த பொருள். *Pond.*

சேகு cēku, *n.* cf. சேக்கை. Scar; தழும்பு. (யாழ். அக.)

சேசுரவாதி cēcura-vāti, *n.* <*sēšvara-vādin.* Theist; கடவுளுண்மையை ஒப்புக்கொள்வோன். (விவேகசிந். பக். 20.)

சேடவட்டில் cēṭa-vaṭṭil, *n.* <சேடம்+. Plate for food; உண்கலம். (யாழ். அக.)

சேடா cēṭā, *n.* *Caṭai-p-pūrāṉ,* centipede; சடைப்பூரான். *Tinn.*

சேடித்துவம் cēṭi-t-tuvam, *n.* <*šēṣi-tva.* State of being the master; ஆளுந்தன்மை. சேடித்துவப்பரெவர் (நூற்றெட்டுத். திருப்புகழ். 62).

சேத்துமம் cēttumam, *n.* <*šlēṣma.* Phlegm; சிலேட்டுமம். திருவிரல் மூன்றிலோடில் சேத்தும நாடியாமே (தஞ். சர. ii, 307).

சேதனத்துவம் cētaṉa-t-tuvam, *n.* <*cētana-tva.* State of being a *cētaṉaṉ;* சைதன்னியநிலை. (வேதாந்தசாரம். பக். 59.)

சேதிமரம் cēti-maram, *n.* <*caitya*+. Sacred tree in a Jaina temple; சைத்தியவிருக்ஷம். சேதிமரங்க ளெட்டு (மேருமந். 1063).

சேந்துகிணறு cēntu-kiṇaṟu, *n.* <சேந்து-+. Draw-well; இறைகிணறு. *Loc.*

சேப்பு cēppu, *n.* prob. *šiphā.* Root of the lotus; தாமரைக்கிழங்கு. பாசடைச் சேப்பிளுள் (கலித். 74).

சேபம் cēpam, *n.* <*šēpha.* Membrum virile; ஆண்குறி. (யாழ். அக.)

சேமண்டன் cēmaṇṭaṉ, *n.* <*cēmaṇḍa.* One who has lost his father; தந்தையிலி.

சேமனவம் cē-maṉavam, *n.* prob. சே+மனவு. Red stone, ruby; சிவந்த மணி. (யாழ். அக.)

சேர்-தல் cēr-, *4 v. tr.* To cut; சேதித்தல். வாழ்மரஞ் சேர்ந்தவை (நீலகேசி, 369).

சேர்சவாய் cērcavāy, *n.* Stay-sail; கப்பலின் சவாய்களில் விரிக்கப்படும் முக்கோணப்பாய். (M. Navi. 82.)

சேர்ந்தணையாக cērntaṇai-y-āka, *adv.* <சேர்-+. Continuously, without break; சேரிடையாக. *Loc.*

சேர்ப்பு cērppu, *n.* <id. Wharf; கப்பலினின்று சரக்கிறக்கும் பாலம். *Pond.*

சேர்மானம் cēr-māṉam, *n.* <id.+. Partiality; பட்சபாதம். (யாழ். அக.)

சேர்வை cērvai, *n.* <id. Poultice; பற்று. *Pond.*

சேர்வைக்களி cērvai-k-kaḷi, *n.* prob. சேர்வை+. A defect in coins; நாணயக் குற்ற வகை. கள்ளனென்றுஞ் சேர்வைக்களி யென்றும் (நெல்விடு. 345).

சேரிமொழி cēri-moḻi, *n.* <சேரி+. Colloquialism; வழக்குச்சொல். சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து (தொல். பொ. 553).

சேலஞ்சர்க்கரை cēlañ-carkkarai, *n.* <சேலம்+. See சேலஞ்சீனி. *Loc.*

சேலஞ்சினி cēlañ-cīṇi, *n.* <id.+. Country sugar, after Salem where it was originally manufactured; பழப்புச் சர்க்கரை. *Loc.*

சேவகக்காசு cēvaka-k-kācu, *n.* <சேவகம்+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. v, 365).

சேவகப்பதம் cēvaka-p-patam, *n.* perh. id.+. Rice not fully boiled; அரிசிப்பதம். (W.)

சேவற்கட்டு cēvaṟ-kaṭṭu, *n.* <சேவல்+. Cock-fight; கோழிப்போர். (எங்களூர். 10.)

சேவனம் cēvaṉam, *n.* <*sēvana.* Stitching; தைக்கை. (யாழ். அக.)

சேழகாரன் cēḻa-kāraṉ, *n.* <*šēṣa*+. Nephew; மருமகன். (T. A. S. iii, 229.)

சேற்றுப்பலகை cēṟṟu-p-palakai, *n.* <சேறு+. Wooden lintel; மண்தாங்கிப்பலகை. *Madr.*

சேறை ceṟai, *n.* <K. *sēra.* Handful, as of rice; உள்ளங்கை கொண்டது. *Colloq.*

சேனாபதி cēṉāpati, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

சேனாபதியாழ்வார் cēṉāpati-y-āḻvār, *n.* <*senāpati*+. *Viṣvaksēna*, the chief of Viṣṇu's host; சேனைமுதலியார். (M. E. R. 514 of 1917.)

சேனைநாதன் cēṉai-nātaṉ, *n.* <சேனை+. See சேனாபதியாழ்வார். நாதமுனிசடகோபன் சேனை நாதன் (ரஹஸ்ய. 51).

சேனைபோகம் cēṉai-pōkam, *n.* <id.+. An office in the military service; படைக்குரிய உத்தியோகங்களு ளொன்று. (S. I. I. iv, 134.)

சேனையங்காடிகள் cēṉai-y-aṅkāṭikaḷ, *n.* perh. சேலை+. A sect of cloth merchants; அறுவைவாணிகரு ளொருவகையினர். (S. I. I. vii, 430.)

சேஷ்பம் cēṣpam, *n.* <சிலேஷ்பம். Phlegm; சிலேஷ்மம். (வேதாந்தசாரம், பக். 7.)

சேஷச்சினையெண் cēṣa-c-ciṉai-y-eṇ, *n.* <சேஷம்+சினை+. Aliquant; வகுத்தலிற் சரியாயடங்காத எண். *Mod.*

சை

சைத்தியம் caittiyam, *n.* <*caitya.* Stone epitaph; இறப்புக் கல்வெட்டு. (யாழ். அக.)

சைத்தியவிருட்சம் caittiya-viruṭcam, *n.* <id.+. See சேதிமரம். (மேருமந். 625, உரை.)

சைதிகம் caitikam, *n.* <*chaidika.* Cane; பிரம்பு. (யாழ். அக.)

சையல் caiyal, *n.* cf. சாயல். Exact likeness; சாயல். சாமிநடையைப்போல . . . சையலிலே நான் காணேன் (கட்டபொம்மு. பக். 57).

சைவகலாலயசக்கரவர்த்தி caiva-kalā-laya-cakkaravartti, *n.* <*šaiva*+*kalā*+*ā-laya*+. A title of the learned Šivācāryas; கல்வி கேள்விகளில் வல்ல சிவாசாரியரது பட்டங்களு ளொன்று. சைவகலாலயசக்கரவர்த்தி உள்ளிட்டோரும் (S. I. I. v, 98).

சைவசக்கரவர்த்தி caiva-cakkaravartti, *n.* <id.+. A title of Šivācāryas; சிவாசாரியரது பட்டங்களு ளொன்று. பாண்டியன் தனஞ்செயன் சைவேசரமுடையான் சைவசக்கரவர்த்தி உள்ளிட்டோரும் (S. I. I. v, 98).

சைவசூளாமணி caiva-cūḷāmaṇi, *n.* <id.+. A title of Šivācāryas; சிவாசாரியரது பட்டங்களு ளொன்று. பாண்டியன் கந்தனை சைவசூளாமணி பிரமாதராயனேன் (S. I. I. v, 101).

சைவநூல் caiva-nūl, *n.* <id.+. The Šaiva Āgamas; சைவாகமம். (சி. சி. 8, 15.)

சைவபஞ்சதபனம் caiva-pañca-tapaṇam, *n.* <id.+*pañca.* The five Upaniṣads of Šaivism, viz., *kālākkiṇiruttiram, cuvētāccuvataram, kaivalliyam, atarvacikai, atarvaciracu;* காலாக்கினிருத்திரம் சுவேதாசுவதரம் கைவல்லியம் அதர்வசிகை அதர்வசிரசு என்னுஞ் சைவசமயத்துக்குரிய உபநிஷதங்கள். (சைவபூ. சந். 24.)

சைவாத்திரம் caivāttiram, *n.* <id.+*astra. Pācupatāttiram,* an arrow which has Šiva as its presiding deity; பாசுபதாத்திரம். தவம்புரியச் சைவாத்திரங் கொடுக்கவாங்கி (கடம்பர். உலா. 34).

சைனர் caiṉar, *n.* <E. *China.* Chinamen; சீனதேசத்தார். (யாழ். அக.)

சைனப்பெட்டி caiṉā-p-peṭṭi, *n.* <id.+. A kind of fireworks; சீனப்பெட்டி. *Madr.*

சொ

சொக்கன் cokkaṉ, *n.* perh. சொக்கு-. Simpleton; முடன். சொக்கனுக்குச் சட்டியளவு.

சொக்கன்சம்பா cokkaṉ-campā, *n.* சொக்கன்+. A kind of *campā* paddy; சம்பாநெல் வகை. நேர்பெருகு சொக்கன்சம்பா நெல்லென்றும் (நெல்விடு. 189).

சொக்காரி cokkāri, *n.* Fem. of சொக்காரன். Female agnate; தாயாதிக்காரி. *Loc.*

சொகுரு cokuru, *n.* <*sva*+*guru.* One's own teacher; தன்னுடைய ஆசாரியன். (சிவஞாபோ. பிர. உரை.)

சொச்சொரூபம் co-c-corūpam, *n.* <id.+*svarūpa.* Inherent nature; தன்னியல்பு. (சொரூப சா. சொரூபஸ்வீக்கம்.)

சொடக்கு coṭakku, *n.* Wind instrument; துளைக்கருவி. *Pond.*

சொண்டாங்கலயம் coṇṭāṅ-kalayam, *n.* <சுண்டு+. A small, round, earthen vessel; சிறு மட்பாண்டம். *Tinn.*

சொண்டுமிளகாய் coṇṭu-miḷakāy, *n.* <சொண்டு+. Blighted pod of chilly; விதையில்லாத சொத்தை மிளகாய்த்தோல். *Tinn.*

சொர்க்கப்படம் corkka-p-paṭam, *n.* <*svarga*+. Board for a kind of back gammon; கட்டங்களிற் காய்கள் வைத்தாடும் ஒருவகைப் படம். *Mod.*

சொர்க்கஸ்தரா-தல் corkkastar-ā-, *v. intr.* <சொர்க்கம்+. To die; இறத்தல். *பரமேசுர போத்தரப் சொர்க்கஸ்தராவது* (S. I. I. iv, 10).

சொர்ணம் corṇam, *n.* Excess; மிகுதி. (திருவாவடுதுறைக். கோ. தூலாராய்ச்சி. பக். 21.)

சொரிநெல் cori-nel, *n.* <சொரி-+. Paddy heaped up; குவித்திருக்கும் நெல். (W.)

சொருகுமுந்தானை coruku-muntāṉai, *n.* <சொருகு-+. The end of a *saree* which is tucked in; புடைவையின் சொருகு தலைப்பு. (W.)

சொருவம் coruvam, *n.* prob. சொரூபம். Estate of Nambudri Brahmins, royal personages, etc.; நம்பூதிரி முதலியோரின் மனை முதலிய ஸ்தாவர சொத்து. *நம்மிட சொருவத்திக்குள்ள* (T. A. S. iii, 216).

சொருவா coruvā, *n.* Gruel; கஞ்சி. (அக. நி.)

சொரூபவித்து corūpa-vittu, *n.* <*svarūpa-vid.* One who has attained self-realisation; தன்னியல்பினை யுணர்ந்தவன். *சொரூபவித்தான மேலோர் சுபாவமே யாகுமன்றே* (விவேகசூடா. 43).

சொல்லழிம்பு col-l-aḻimpu, *n.* <சொல்+. Obscene word; இடக்கர்ச்சொல். *அவன் சொல்லழிம்பு மகாமோசம். Colloq.*

சொல்லறிபுள் col-l-aṟi-puḷ, *n.* <id.+ அறி-+. 1. Parrot; கிளி. (யாழ். அக.) 2. Myna; பூவை. (சங். அக.)

சொல்லாடு-தல் col-l-āṭu-, *v. intr.* <id.+. To be current in colloquial usage; பேச்சில் வழங்குதல். *இப்படி ஒன்று சொல்லாடுகின்றது. Tj.*

சொல்லெடுப்பு col-l-eṭuppu, *n.* <id.+. Emphasis; அழுத்தமாகச் சொல்லுகை. *Pond.*

சொல்வல்லபம் col-vallapam, *n.* <id.+. Power of speech, eloquence; பேச்சுவன்மை. (W.)

சொல்வார்த்தை col-vārttai, *n.* <id.+. (W.) 1. Admonition; புத்திமதி. 2. False accusation; பொய்ச்சாற்று.

சொலிதை colitai, *n.* <*jvalitā.* Brilliance; பிரகாசம். *சொலிதை யுற்றிடும் விவேகர்* (பாடு. 28, அடியவர்).

சொலிப்பு colippu, *n.* <சொலி-. Shining, glittering; பிரகாசம். (W.)

சொற்கட்டு cor-kaṭṭu, *n.* <சொல்+. Falsehood; fib; பொய். *Loc.*

சொற்கலகம் cor-kalakam, *n.* <id.+. Controversy; வாக்குவாதம். (W.)

சொற்செல்(லு)-தல் cor-cel-, *v. intr.* <id.+. To command obedience; அதிகார முடையவனுதல். *எனக்கு அடைத்த விஷயத்தில் சொற்செல்லாதாகி லன்றே எனக்குக் குறையாவது* (சூடி, 10, 2, 1).

சொற்சேர்க்கை cor-cērkkai, *n.* <id.+. Dictionary; அகராதி. *Pond.*

சொற்பாடு cor-pāṭu, *n.* <id.+படு-. Fame; புகழ். *சூலத்தனிலிட்ட சொற்பாடும்* (சொக்க. உலா, 259).

சொன்மலைவு con-malaivu, *n.* <id.+. Self-contradictory statement; முன்பின் விரோதமாகக் கூறுகை. *சொல்லலன் யானெனச் சொல்லுவையாயினுஞ் சொன்மலைவாம்* (நீலகேசி, 384).

சொஸ்தி costi, *n.* <Persn. *susti.* Nothing; வேறுமை. *சொத்தையெல்லாம் சொஸ்தியாக்கி விட்டான்.*

சோ

சோக்கதார் cōkka-tār, *n.* <Hind. *caukī*+. Chowkidar; சௌக்கிதார். *சோக்கதார் கடிகை மின்ன* (பிரதாப. விலா. 2).

சோகசாவேரி cōka-cāvēri, *n.* perh. சோகம்+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 55.)

சோகிதன் cōkitaṉ, *n.* <*śōkita.* One who is sorrowful; துக்கமுற்றவன். (பாரதவெண். 28, உரை.)

சோசியார்திருவடி cōciyār-tiruvaṭi, *n.* An officer of the king; அரசாங்க உத்தியோகஸ்தருளொருவகையான். (S. I. I. v, 339.)

சோட்டா cōṭṭā, *adj.* <Hind. *chōṭā. Colloq.* 1. Light; இலேசான. 2. Little, small; சிறிய.

சோட்டாப்பையன் cōṭṭā-p-paiyaṉ, *n.* <சோட்டா+. Boy-attender; வழியச் சிறுவன். *Mod.*

சோட்டாஹஸ்ரி cōṭṭā-hasri, *n.* <id.+ Arab. *hāzirī.* Light refreshment; chota hazari; சிற்றுணவு. *Mod.*

சோட்டையன் cōṭṭaiyaṉ, *n.* perh. சொத்தை. Useless fellow; பயனற்ற ஆள். *Tinn.*

சோடசகர்மம் cōṭaca-karmam, *n.* <*ṣoḍaša*+. The sixteen essential ceremonials in the life of a person, *karuppātāṉam, puñcavaṉam, cīmantam, uṉṉayaṉam, cātakaṉmam, nāmakaraṇam, upaniṣkiramaṇam, aṉṉa-p-pirācaṉam, caulam, upanayaṉam, makāṉāmiyam, makāviratam, upaniṣattu, cōpaṉam, uttuvakaṉam, miruti;* கருப்பாதானம் புஞ்சவனம் சீமந்தம் உன்னயனம் சாதகன்மம் நாமகரணம் உப நிஷ்க்ரமணம் அன்னப்பிராசனம் சௌளம் உப நயனம் மகாநாமியம் மகாவிரதம் உபநிஷத்து சோபனம் உத்துவகனம் மிருதி என்னும் பதினாறுவகை ஸம்ஸ்காரங்கள். (த. நி. போ. 24.)

சோடம்[1] cōṭam, *n.* <*cōḍa.* A kind of corset; முலைக்கச்சுவகை. *Pond.*

சோடம்[2] cōṭam, *n.* <*sōḍha.* Patience, endurance; பொறுமை. (யாழ். அக.)

சோடை cōṭai, *n.* cf. சொள்ளை. *Loc.* 1. That which is withered, blighted or decayed; சொத்தை. 2. Useless, good-for-nothing person; உபயோகமற்றவ-ன்-ள். 3. Weak, emaciated person; உடல்வலியற்றவ-ன்-ள்.

சோணகவாளை cōṇaka-vāḷai, *n.* cf. சோனகம்வாளை. A kind of *vāḷai* fish; வாளைமீன்வகை. (M. M.)

சோதம் cōtam, *n.* prob. *cyōta.* Pure water; நல்லதண்ணீர். (W.)

சோதனாபிரதிகாலம் cōtaṉā-pirati-kālam, *n.* <*cōdanā*+*prati*+. Adjournment of a suit for examination of witnesses; சாட்சி விசாரணைக்காக வழக்கை ஒத்திவைக்கை. (சுக்கிரநீதி, 282.)

சோதனை cōtaṉai, *n.* <*cōdanā.* Purgative; பேதிமருந்து. *Loc.*

சோதனை cōtā, *n.* <*šōdhā.* Trial, examination, inquiry; விசாரணை. (P. T. L.)

சோதிசாத்திரம் cōti-cāttiram, *n.* <*jyōti*+. Astronomy; கோளசாத்திரம். *Mod.*

சோதிட்டம் cōtiṭṭam, *n.* Trifle, very little; மிகவற்பம். (யாழ். அக.)

சோதிடத்தேவர் cōtiṭa-t-tēvar, *n.* <*jyōtiṣa*+. (Jaina.) A class of gods; ஒரு சார் தேவசாதியார். *வாய்தல் சோதிடத்தேவர்காப்ப* (மேரு மந். 1060).

சோதிடி cōtiṭi, *n.* <சோதிடன். Astrologer; சோதிடன். (தத்துவப். 182, உரை.)

சோதிடோப்பரிகை cōtiṭōpparikai, *n.* <சோதிடம்+உப்பரிகை. Observatory; கிரகநட்சத்திரங்களின் கதிகளை ஆராய்தற்குச் சாதகமாகக் கட்டப்பட்டிருக்குங் கோபுரம். (M. Navi. 55.)

சோதிப்பு cōtippu, *n.* <சோதி-. Examination; பரிசோதனை. *Pond.*

சோதிர்லோகம் cōtir-lōkam, *n.* <*jyōtirlōka.* (Jaina.) One of the seven worlds; ஏழ வகையுலகுளொன்று. (திருக்கலம், 6, உரை.)

சோதிராங்கம் cōtirāṅkam, *n.* <*jyōtirāṅga.* A *kalpataru* whose splendour casts all other bright objects into shade; எல்லா ஒளியையு மடக்கும் ஒளியை வீசுங் கற்பதரு. (தக்கயாகப். 757, குறிப்பு.)

சோமசுந்தரம் cōmacuntaram, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (சங். சங்.)

சோமதாரி cōma-tāri, *n.* <சோமன்+. Rocksalt; இந்துப்பு. (யாழ். அக.)

சோய்வு cōyvu, *n.* prob. சோர்-. Languor; சோர்வு. (யாழ். அக.)

சோலா cōlā, *n.* cf. *cōla.* A kind of corset; முலைக்கச்சுவகை. *Pond.*

சோலாந்திரம் cōlāntiram, *n.* Hard task; கஷ்டமான வேலை. *Nāṉ.*

சோழிசொங்கமான் cōḻi-coṅkamāṉ, *n.* <சோழி+. Cowries, bag, etc., as the belongings of a *paratēci;* பரதேசிக்குரிய பை சோழி முதலிய அடையாளங்கள். *Colloq.*

சோழியன்காசு cōḻiyaṉ-kācu, *n.* <சோழியன்+. An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 56.)

சோழியன்வெட்டு cōḻiyaṉ-veṭṭu, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 134.)

சோளியல் cōḻiyal, *n.* <U. *jōlnī.* Bag, pouch; சோளிகை. (நெல்லிடு.)

சோற்றடைப்பு cōṟṟaṭaippu, *n.* <சோறு+. Endowment for free feeding; அன்னதானக் கட்டளை. *சோற்றடைப்புக்கு உடலாம் போனகப் பழ நெல்* (S. I. I. vii, 299).

சோற்றுப்புரை cōṟṟu-p-purai, *n.* <id.+. Kitchen; மடைப்பள்ளி. *சோற்றுப்புரை மணியஞ் சூரியன்* (தெய்வச். விறலிவிடு. 388).

சோற்றுமுத்து cōṟṟu-muttu, *n.* <id.+. Artificial pearl; போலிமுத்து. *Loc.*

சோறு cōṟu, *n.* Paste used in drums; மிருதங்கத்தின் நடுப்பாகத்திற் பூசுங் கலவைச்சாந்து. (கலைமகள், xii, 401.)

சோறுமாடு cōṟumāṭu, *n.* cf. சோறுமாட்டு. A tax; வரிவகை. (S. I. I. vii, 27.)

சோனிசி cōṉici, *n.* Cave; குகை. (*யாழ். அக.*)

செள

செளபன்னம் caupaṉṉam, *n.* <*sauparṇa.* (*யாழ். அக.*) 1. Dried ginger; சுக்கு. 2. Emerald; மரகதம்.

செளரசனம் cauracaṉam, *n.* cf. சூரசேனி. *Cūracēṉī,* a Prakṛt language; சூரசேனி என்னும் பாகதமொழி. (*சி. சி. பாயி.* 2, *மறைஞா. பக்.* 61.)

ஞ

ஞத்தி ñatti, *n.* <*jñapti.* Understanding; தெளிந்த அறிவு. ஞத்தியுடையவர் முத்திபெறுவர்கள் (*பாடு.* 91, *வீட்டுநெறி*).

ஞா

ஞாதி ñāti, *n.* <*jñāti.* One of *ēkātaca-ruṭṭirar,* q. v.; ஏகாதசருத்திரரு ளொருவர். (*தக்க யாகப்.* 443, *உரை.*)

ஞாபகி ñāpaki, *n.* <ஞாபகம். Person with good memory; ஞாபகசக்தியுள்ளவன். (*யாழ். அக.*)

ஞாலமாது ñālamātu, *n.* cf. ஞாழல்மாது. Purple stramony; ஊமத்தை. (*யாழ். அக.*)

ஞாளியாதனம் ñāḷi-y-āṭaṉam, *n.* <ஞாளி +. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (*தத்துவப்.* 108, *உரை.*)

ஞானவாக்கினை ñāṉa-v-ākkiṉai, *n.* <*jñāna* +. Order of the minister; கிறிஸ்தவ குருமாரின் கட்டளை. *Chr.*

ஞானஸ்நானகுல்லா ñāṉasnāṉa-kullā, *n.* <ஞானஸ்நானம் +. Chrisom; கிறிஸ்தவக் குழந்தைக்குப் பேரிடும்போது இடும் ஆடை. *Chr.*

ஞாஞத்மா ñāṉātmā, *n.* <*jñāna* +. Buddhi, the principle of the intellect; புத்தி. (*விசாரசங்.* 305.)

ஞாஞதிகாரி ñāṉātikāri, *n.* <id. +. (Phil.) One who is qualified to follow the *ñāṉa-mārkkam;* ஞானமார்க்கத்துக் தகுதியவன். நிராசையுடன் கூடினவன் ஞாஞதிகாரி (*வேதாந்தசா.* 21).

ட

டக்குத்தையல் ṭakku-t-taiyal, *n.* <E. *tack* +. Tacking; ஒட்டுத்தையல். *Loc.*

டக்தர் ṭaktar, *n.* <Fr. *Docteur.* Doctor; வைத்தியன். *Pond.*

டப்பால் ṭappal, *n.* <Hind. *tippāl.* Post; தபால். *Mod.*

டப்பு ṭappu, *n.* Log, an instrument for ascertaining the speed of a ship; கப்பற் கதியை அளக்குங் கருவி. (M. Navi. 66.)

டப்புக்கயிறு ṭappu-k-kayiṟu, *n.* <டப்பு +. Rope passing through the holes at the extremities of a log; டப்புப்பலகையின் துவாரங்களின் வழியாய்ச் செல்லுங் கயிறு. (M. Navi. 66.)

டப்புப்பலகை ṭappu-p-palakai, *n.* <id. +. The piece of wood, quadrant in shape, which is used in the log; டப்புக்கருவியிலுள்ள மரத்துண்டு. (M. Navi. 67.)

டபரா ṭaparā, *n.* A kind of metallic cup; பாத்திரவகை. *Madr.*

டமரா ṭamarā, *n.* See டபரா. *Madr.*

டவர்மரம் ṭavar-maram, *n.* <E. *tower* +. Royal mast; பாய்மரத்தின் நாலாவது அல்லது உச்சிப்பாகம். (M. Navi. 81.)

டஸ்தூர் ṭastūr, *n.* Studding sail; பறுவான்களில் விரிக்கப்படுஞ் சதுரப்பாய்களின் வெளிப்புறத்துப் போடப்படுந் துணைப்பாய். (M. Navi. 83.)

டா

டாவு ṭāvu, *n.* Haughtiness; செருக்கு. *Colloq.*

டை

டைமன் ṭaimaṉ, *n.* <E. *diamond.* Diamonds, a suite in playing-cards; விளையாட்டுச்சீட்டுக் கட்டில் ஒருசாதிச் சீட்டு. *Colloq.*

த

தக்காளியுழுவான் takkāḷi-y-uḻuvāṉ, *n.* <தக்காளி +. Mud grillus; பிள்ளைப்பூச்சி. *Pond.*

தக்கிராடம் takkirāṭam, *n.* <*takrāṭa.* Churning stick; மத்து. (*யாழ். அக.*)

தக்கு-தல் takku-, 5 *v. intr.* To yield; to be submissive; வசப்படுதல். (*யாழ். அக.*)

தகட்டுக்குழை takaṭṭu-k-kuḻai, *n.* <தகடு +. A part of necklace; கழுத்தணி உறுப்புவகை. (S. I. I. viii, 128.)

தகடு takaṭu, *n.* [T. K. *tagaḍu.*] The middle portion of a plantain leaf, cut longitudinally; வாழையிலையின் நடுப்பகுதியை நறுக்கிய ஏடு. *Tj.*

தகணிதம் takaṇitam, *n.* perh. *dahana.* cf. தகணை. Oxide of metals; உலோக மணல். (விவ. ரசா. 6.)

தகரம் takaram, *n.* <*dahara.* Young of an animal; விலங்கின் பிள்ளை. (யாழ். அக.)

தகவன் takavaṉ, *n.* <தகவு. Worthy man; ததியுடையவன். தகவா தகவல்லது செய் தனையே (சிவக. 1382).

தகன் takaṉ, *n.* <*dahana.* (யாழ். அக.) 1. Fire; தீ. 2. *Pūrāṇ,* a centipede; பூரான்.

தகனகரம் takaṉa-karam, *n.* <id.+*kara.* Oxygen; பிராணவாயு. (விவ. ரசா. 5.)

தகனோபலம் takaṉōpalam, *n.* <*dahanōpala.* Sun-stone; சூரியகாந்தக்கல். (யாழ். அக.)

தகுணி takuṇi, *n.* cf. தகுணிச்சம். A kind of drum; வாசியவகை. சங்கம பொற்ருளம் தகுணி துடிபடகம் (சிவக். பிரபந். தஞ்சைப்பெரு. 51).

தங்கக்கம்பி taṅka-k-kampi, *n.* <தங்கம்+. Person of amiable character; நல்ல குணமுடைய வ-ன்-ள். தம்பிமேலே சங்கையு மன்புள்ளவன் தங்கக்கம்பி (பெண்மதிமாலை, பக். 6).

தங்கப்படட்டை taṅka-p-paṭṭai, *n.* <தங்கு-+. Strap for the saddle; சேணங் கட்டுங் கச்சு. (யாழ். அக.)

தங்கப்பூவிராகன் taṅka-p-pū-virākaṉ, *n.* <தங்கம்+பூ+. A kind of gold mohur; பொன் ஞையவகை. (யாழ். அக.)

தங்கரளி taṅkaraḷi, *n.* <id.+அரளி. cf. தங்கலரி. Common yellow trumpet-flowered tree; நாகசெண்பகம். (B.)

தங்கி taṅki, *n.* <தங்கு-. Support, stay; ஆதாரமானது. *Pond.*

தச்சதுலாம் taccatulām, *n.* An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iv, 79.)

தசமம் tacamam, *n.* <*dašama.* One-tenth part; பத்திலொன்று. (யாழ். அக.)

தசராத்திரஞாதி taca-rāttira-ñāti, *n.* <தசம்+ராத்திரம்+. Agnatic relations within the 7th degree, as persons for whom pollution for 10 days is ordained on occasions of birth and death; பத்துநாள் தீட்டுக் காத்தற்குரிய ஏழதலை முறைக்குட்பட்ட தாயாதி. *Brah.*

தசாதரு tacā-taru, *n.* perh. தசம்+. Ten marks of horses; குதிரைச் சுழிகள் பத்து. (அசுவ. 17.)

தசிரம் taciram, *n.* cf. *dasra.* Drizzling; மழைத்தூறல். (யாழ். அக.)

தஞ்ஞன் taññaṉ, *n.* <*dakṣa.* Wise man; அறிஞன். (யாழ். அக.)

தட்சணநட்சத்திரராசி taṭcaṇa-naṭcattira-rāci, *n.* <தட்சிணம்+நட்சத்திரம்+. The southern constellations; இராசி மண்டல நட்சத்திரங்களுக்குத் தென்பாலுள்ள நட்சத்திரத் தொகுதி. (M. Navi. 109.)

தட்டஞ்சுற்று-தல் taṭṭañ-cuṟṟu-, *v. intr.* <தட்டம்+. To go round the deity in a temple with a lighted salver in hand, during the evening service; திருவந்திக்காப்பிற் கடவுளைத் தீபத் தட்டுடன் வலம்வருதல். *Loc.*

தட்டடுவு taṭṭaṭuvu, *n.* A tax; வரிவகை. (T. A. S. iii, 216.)

தட்டழி-தல் taṭṭaḷi-, *v. intr.* <தட்டு+. To deteriorate; சீர்கெடுதல். சாப்பாடு மெல்ல மெல்லத் தட்டழிந்து (பஞ்ச. திருமுக. 274).

தட்டாரநாயகன் taṭṭāra-nāyakaṉ, *n.* <தட்டான்+. An ancient coin; பழைய நாணய வகை. (சரவண. பணவிடு. 58.)

தட்டாரப்பொட்டு taṭṭāra-p-poṭṭu, *n.* <id.+. Ostentation, show; வெளிவேஷம். (யாழ். அக.)

தட்டான் taṭṭāṉ, *n.* cf. தட்டான்கொட்டோசை. Common snake-gourd; புடோல். (யாழ். அக.)

தட்டாணுப்பி taṭṭāṇuppi, *n.* A kind of creeper; செடிவகை. (W.)

தட்டுக்கடுதாசி taṭṭu-k-kaṭutāci, *n.* <தட்டு+. Single sheet of paper; தனிக்காகிதம். *Pond.*

தட்டுக்குதிரை taṭṭu-k-kutirai, *n.* <id.+. Pony; குதிரைவகை. *Loc.*

தட்டுடை taṭṭuṭai, *n.* <id.+. Cloth worn round the loins, without passing it between the legs; தட்டாடை. வேறு மடியொன்றைத் தட்டுடையாக உடுத்திக்கொண்டு (மீனாட். சரித். ii, 152).

தட்டுப்புழுகு taṭṭu-p-puḻuku, *n.* <id.+. Secretion from the gland in the anal pouch of the civet-cat; புனுகுசீசட்டம். தட்டுப்புழுகுஞ் சாத்தி (S. I. I. viii, 186).

தட்டுமாற்று taṭṭu-māṟṟu, *n.* <id.+. Stratagem; தந்திரம். (W.)

தட்டொலி taṭṭoli, *n.* An ancient tax; வரிவகை. (S. I. I. ii, 114.)

தட taṭa, *adj.* Soft, tender; மெல்லிய. *தடந்தாளென்பது மெல்லியவாகிய ஸ்ரீபாத மென்ற வாறு* (நீலகேசி, அவையடக்கம், 1, உரை).

தடநார் taṭanār, *n.* prob. *தடை*+. cf. *தளைநார்*. Foot-brace used by climbers of palmyras; பனையேறிகள் காலில் மாட்டிக்கொள்ளுங் கயிறு. (*யாழ். அக.*)

தடனம் taṭaṉam, *n.* <*taḍ*. Patting, tapping; தாடனம். *ஒருகை எத்துதடனத்தொனி யெடுத்தெறிய* (நெல்விடு. 286).

தடா taṭā, *n.* <*தட*. A vessel larger than a *miṭā;* மிடாவினும் பெரிதான பாத்திரம். *அந்தப்பாலை யெல்லாம் காய்ச்சுகைக்காக மிடாக்களோடும் தடாக்களோடும் அடுப்பிலே ஏற்றிவைத்து* (திவ். பெரியாழ். 2, 9, 5, வ்யா. பக். 463).

தடாய்-த்தல் taṭāy-, *11 v. tr.* <id. To cause to swell or increase; பெருகச்செய்தல். *குண்டோதரன்போல் மாரைத் தடாய்த்து* (மதி. க. i, 66).

தடி taṭi, *n.* A linear measure; நீட்டலளவு வகை. *தடிநான்கிற் பரந்தன* (மேருமந். 1153).

தடிக்கொம்பு taṭi-k-kompu, *n.* <*தடி*+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 16.)

தடிப்பதக்கு taṭi-p-patakku, *n.* prob. id.+. A tax; பழைய வரிவகை. (S. I. I. v, 114.)

தடிப்புத்தி taṭi-p-putti, *n.* <id.+. Thick headedness; மந்தபுத்தி. *Colloq.*

தடிமரை taṭi-marai, *n.* <id.+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 19.)

தடிவால் taṭi-vāl, *n.* <id.+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரிய. மாட். 18.)

தடு-தல் taṭu-, prob. *6 v. intr.* To be agreeable; இசைதல். (*யாழ். அக.*)

தடுக்கு taṭukku, *n.* See தகடு. *Loc.*

தடுதலை taṭu-talai, *n.* <*தடு*-+. Impediment; தங்குதடை. *அவர்கள் தடுதலையின்றி எங்கும் போவார்கள்* (எங்களூர், 24).

தடுபுடு-த்தல் taṭuputu-, *11 v. intr.* cf. *தடபுடல்*. To be hasty; அவசரப்படுதல். (*யாழ். அக.*)

தடுபுடுதாயம் taṭuputu-tāyam, *n.* <*தடுபுடு*-+. Hastiness; அவசரம். (*யாழ். அக.*)

தடுமாற்றம் taṭumāṟṟam, *n.* <*தடுமாறு*-. The cycle of mortal existence; ஸம்ஸாரம். *முன்னெனப் படுவதுதான் முதலில்லாத் தடுமாற்றம்* (நீலகேசி, 179).

தடுமாறு taṭumāṟu, *n.* <id. Disorder, as of things; derangement; தடுமாற்றம். (தொல். பொ. 308, இளம்பூ.)

தண்டசம் taṇṭacam, *n.* Pincers, tweezers; கருவிவகை. *Loc.*

தண்டதாசன் taṇṭa-tācaṉ, *n.* <*daṇḍa*+*dāsa*. Slave; அடிமை. (*யாழ். அக.*)

தண்டபாலன் taṇṭa-pālaṉ, *n.* <*daṇḍa*-*pāla*. Gate-keeper; துவாரபாலகன். (*யாழ். அக.*)

தண்டபிண்டம் taṇṭa-piṇṭam, *n* <*தண்டம்*+. Food wasted on useless persons; பயனற்றவர்க்கு இடும் வீண்சோறு. *Loc.*

தண்டம் taṇṭam, *n.* <*daṇḍa*. 1. Kingly justice; செங்கோல். (*சுக்கிரநீதி*, 22.) 2. Fine; அபராதம். *Loc.*

தண்டல்மேனி taṇṭal-mēṉi, *n.* <*தண்டல்*+. A tax; வரிவகை. (S. I. I. v, 119.)

தண்டலிற்கடமை taṇṭaliṟ-kaṭamai, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. iii, 115.)

தண்டாதனம் taṇṭātaṉam, *n.* <*daṇḍa*+*āsana*. (Śaiva.) A yogic posture; ஆசனவகை. (*தத்துவப்.* 107, உரை.)

தண்டாயம் taṇṭāyam, *n.* A kind of pincers; தூறுவகை. *திருவிலர் நாவினவாங்க வாங்கு தண்டாயத்திளல் வலித்து* (பெரியபு. சத்தி. 4).

தண்டாளர்முதல் taṇṭāḷar-mutal, *n.* prob. *தண்டு*+*ஆள்*-+. An ancient tax; பழைய வரி வகை. (S. I. I. vi, 33.)

தண்டிகை taṇṭikai, *n.* See தண்டியல். *C. N.*

தண்டியல் taṇṭiyal, *n.* cf. *தண்டியம்*. Large house; பெரியவீடு. *C. N.*

தண்டு taṇṭu, *n.* perh. *daṇḍa*. 1. Collection, as of money or grain; தண்டும் பணம் முதலியன. *தனிசுதண்டுகள் வாங்கிக் கொடுத்து* (S. I. I. v, 321). 2. Cantonment; சேனை தங்கும் இடம். *இவரிருந்த இடம் பங்களூர்த்தண்டு* (மீனாட். சரித். i, 118).

தண்டுக்கிரந்தி taṇṭu-k-kiranti, *n.* perh. *தண்டு*+. An eruption that spreads all over the body of a child; பொத்திக்கரப்பான். (*சங். அக.*)

தண்டுலாம்பு taṇṭulāmpu, *n.* <*taṇḍula*+*ambu*. Rice gruel; கஞ்சி. (*யாழ். அக.*)

தண்டுலோதகம் taṇṭulōtakam, *n.* <id.+*udaka*. See தண்டுலாம்பு. (*யாழ். அக.*)

தண்டெடுப்பார் taṇṭeṭuppār, *n.* <தண்டு+எடு-. Palanquin bearers; பல்லக்குச் சுமப்பவர். (M. E. R. 570 of 26.)

தண்டேசுரப்பெருவிலை taṇṭēcura-p-peruvilai, *n.* <தண்டேசுரன்+. Price fixed by the temple authorities; கோயிலதிகாரிகள் நிர்மானிக்கும் விலை. (S. I. I. iv, 129.)

தண்டைச்சுறவு taṇṭai-c-cuṟavu, *n.* perh. தண்டை+. A kind of fish; மீன்வகை. வெள்ளிரும் தண்டைச்சுறவு.

தண்டைப்பூடு taṇṭai-p-pūṭu, *n.* perh. id.+. A parasitic plant growing on walls; சுவரோட்டி. (தெய்வச். 406.)

தண்ணாயகர்மகமை taṇṇāyakar-makamai, *n.* <தண்டநாயகர்+. A tax or contribution payable to the military commander; இராணுவவரிவகை. (M. E. R. 510 of 1921.)

தண்ணிமை taṇṇimai, *n.* <தண்-மை. Inferiority; தாழ்வு. கல்மாற்று தண்ணியபொன் (S. I. I. ii, 22).

தண்ணீர்க்கொப்பு taṇṇīr-k-koppu, *n.* <தண்ணீர்+. A water-vessel used by Buddhists; பௌத்தர் கைக்கொள்ளும் ஒருவகைப் பாத்திரம். (நீலகேசி, 250, உரை.)

தண்ணீர்ப்பட்டி taṇṇīr-p-paṭṭi, *n.* <id.+. Gift for providing drinking water; தண்ணீர்ப் பந்தலமைத்துக்கவிட்ட நிலம். (S. I. I. iii, 365.)

தண்ணீர்ப்பாடம் taṇṇīr-p-pāṭam, *n.* <id.+. Anything well learnt, as a lesson or science; நன்றக மனப்பாடமானது. *Colloq.*

தண்ணீர்பட்டபாடு taṇṇīr-paṭṭa-pāṭu, *n.* <id.+படு-+. That which can be easily done or performed; easy work; எளிதாகச் செய்ய வல்லது. செய்யுளியற்றுவது இவர்க்குத் தண்ணீர்பட்ட பாடு (மீனாட். சரித். ii, 278).

தண்ணீர்விடு-தல் taṇṇīr-viṭu-, *v. intr.* <id.+. To become stale or putrid; நீர் கசிந்து பண்டங் கெடுதல். சாதம் தண்ணீர்விட்டுப் போயிற்று. (W.)

தண்பகம் taṇpakam, *n.* A kind of tree; ஒருவகை மரம். சண்பகந் தண்பகம் பாடலம் (மேரு மந். 585).

தணி-த்தல் taṇi-, *11 v. tr.* <தண்-மை. To bear; பொறுத்தல். மின்னு . . . . தன்னுவாட்டந் தணித்தலின் (சீவக. 867).

தணிமரம் taṇi-maram, *n.* prob. தணி-+. Lever beam for starting a temple car; தேர் நெம்பு கடி. (சூடி, 1, 4, 6, ஜீ. அரும்.)

தத்தரம் tattaram, *n.* perh. *tatara.* A mode of coition; உபரித் தொழில்வகை. (தெய்வச். விறலி விடு. 256.)

தத்தளங்கெனல் tattaḷaṅkeṉal, *n.* Onom. expr. signifying drum-beat; மத்தள வோலிக் குறிப்பு. தத்தளங்கென்றே பரதஞ் சாதிப்ப (கடம்ப. உலா, 107).

தத்தாங்காரம் tattāṅkāram, *n.* prob. *dagdha+aṅgāraka.* A hell, one of *mānarakam;* மாநரகங்களு ளொன்று. (சி. போ. பா. 2, 3, பக். 203.)

தத்துமடை tattu-maṭai, *n.* <தத்து-+. Side-course in a water channel; நீர்வாய்க்காலின் பக்கத்து மடை. (W.)

தத்துவசம்பிரதம் tattuva-campiratam, *n.* <தத்துவம்+. Magic art by which one of the five elements is made to appear from another; ஒரு பூதத்தில் வேறொரு பூதந் தோற்றுவிக்கும் மகேந்திர சாலவித்தை. (சௌந்தரிய. ஆனந். 30, உரை.)

தத்துவதரிசனம் tattuva-taricaṉam, *n.* <id.+. (Śaiva.) A spiritual experience of the soul, one of *taca-kāriyam,* q.v.; தசகாரியத் தொன்று. (சிவப். கட்.)

தத்துவம் tattuvam, *n.* <*tat+tva.* Soul; ஆன்மா. (தத்துவப். 8, உரை.)

தத்துவான்மா tattuvāṉmā, *n.* <*tattva+.* State of the soul when it is associated with the subtle body; சூக்குமதேகத்தைப்பற்றி நிற்கும் ஆன்மா. (சி. போ. பா. 6, 2, பக். 317.)

ததுமல் tatumal, *n.* prob. ததும்பு-. (யாழ். அக.) 1. Confusion; குழப்படி. 2. Crowd; கூட்டம்.

ததுளன் tatuḷaṉ, *n.* (யாழ். அக.) 1. Youth; இளைஞன். 2. Wind; காற்று.

தந்தக்குறி tanta-k-kuṟi, *n.* <தந்தம்+. (Erot.) Marks made by the teeth of the lover on the limbs of his beloved; சம்போகக்காலத்திற் பல்லால் உண்டான அடையாளம். (கொக்கோ.)

திருவீதிநாயகர் tiru-vīti-nāyakar, *n.* <id.+வீதி+. Deity of a temple intended for carrying out in procession during festivals; உற்சவமூர்த்தி. *ராஜாக்கள் தம்பிரான் திருவீதிநாயகர் திருப்பவனி எழுந்தருளும்போது* (S. I. I. viii, 21).

திருவீதிப்பந்தம் tiru-vīti-p-pantam, *n.* <id.+id.+. A kind of torch for procession in temple festivals; சுவாமிபுறப்பாட்டில் உபயோகிக்குந் தீவட்டிவகை. (S. I. I. v, 89.)

திருவுதரமாலை tiru-v-utara-mālai, *n.* <id.+. Ornament for the waist of a deity; girdle; கோயில்மூர்த்தியின் இடையிலிடும் ஆபரண வகை. (S. I. I. iii, 474.)

திருவுலகள-த்தல் tiru-v-ulakaḷa-, *v. intr.* <id.+உலகு+. To survey or measure land; நிலத்தை யளந்து கணக்கிடுதல். *திருவுலகளந்தபடி நிலம் எழுமா* (S. I. I. vii, 309).

திருவுலாச்செய்-தல் tiru-v-ulā-c-cey-, *v. intr.* <id.+உலா+. To go out in procession, as a deity in a temple; வலம்வருதல். *Loc.*

திருவுலாப்புறஞ்செய்-தல் tiru-v-ulā-p-puṟañ-cey-, *v. intr.* <id.+id.+புறம்+. See திருவுலாச்செய்-. (சிவதெறிப். 8.)

திருவுலாப்புறம் tiru-v-ulā-p-puṟam, *n.* <id.+id.+. Tiru-k-kailāya-ñāṉa-v-ulā, a poem by Cēramāṉ-perumāḷ; திருக்கைலாயஞானவுலா. *சேரர்காவலர் பரிவுடன் கேட்பித்த திருவுலாப்புறம்* (பெரியபு. வெள். 48).

திருவுறை tiru-v-uṟai, *n.* <id.+. Temple; கோயில். *கரியோன் திருவுறை* (கல்லா.).

திருவெண்காடர் tiru-veṇkāṭar, *n.* <id.+. The sage Paṭṭiṉattār; பட்டினத்தடிகள்.

திருவெழுத்துச்சாத்து-தல் tiru-v-eḻuttu-c-cāttu, *v. intr.* <id.+. To sign; கையெழுத்திடுதல். *தேவர் திருவெழுத்தச்சாத்தின திருமுகம் வந்தமையில்* (S. I. I. viii, 27).

திருவேள்-தல்[திருவேட்டல்] tiru-vēḷ-, *v. tr.* <id.+. To marry; திருமணம்புரிதல். *தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு* (பெரியபு. சேரமான். 92).

திருவையாற்றுச்சக்கரம் tiru-v-aiyāṟṟu-c-cakkaram, *n.* <id.+ஐயாறு+. A kind of coin; நாணயவகை. (பணவிடு. 145.)

திருஷ்டபோக்கியம் tiruṣṭa-pōkkiyam, *n.* <*dṛṣṭa*+. Effects of actions done in this birth; இம்மையிற்செய்த கருமங்களின் பலனை அனுபவிக்கை. (சி. சி. 2. 39, ஞானப்.)

திருஷ்டிசுற்று-தல் tiruṣṭi-cuṟṟu-, *v. intr.* <*dṛṣṭi*+. To wave specified articles round a person, to avert the evil eye; திருஷ்டி கழித்தற்பொருட்டுச் சில பண்டங்களைச் சுற்றுதல். *Loc.*

திருஷ்டிபரிகாரம் tiruṣṭi-parikāram, *n.* <id.+. Averting of the evil eye; கண்ணேறு பட்டதாலுண்டாந் தீங்கினை நீக்குகை. *Colloq.*

திரை-த்தல் tirai-, *11 v. intr.* To lie, as in bed; படுத்தல். *திரைப்பமெல்லணை செய்வ விழுத்தவம்* (நீலகேசி, 251).

திரைப்புழு tirai-p-puḻu, *n.* perh. திரை-+. A kind of worm; புழுவகை. (*பாராச.* ii, 217.)

திரையுறி tirai-y-uṟi, *n.* <id.+. 1. Network of rope for keeping big pots suspended; பெரிய உறி. 2. Plaited network of rope; பின்னல் உறி. *திண்ணைக்கலத்தில் திரையுறிமேல்வைத்த வெண்ணெய் விழுங்கி* (திவ். பெரியாழ். 2, 5, 3).

தில்லாயம் tillāyam, *n.* Deception; புரட்டு. *தில்லாயக் கட்டுமொழி செப்புகிருய்* (பஞ்ச். திருமுக. 1220).

தில்லைக்கட்டை tillai-k-kaṭṭai, *n.* <தில்லை +. *Cempāḷai* paddy; செம்பாளைநெல். (G. Tp. D. i, 132.)

திலகநிறமணி tilaka-niṟa-maṇi, *n.* <திலகம் + நிறம் +. A kind of *patumarākam;* கோவரங்சப்பதுமராகம். (யாழ். அக.)

திலகலம் tila-kalam, *n.* <*tila* +. Oil-mill; செக்கு. (யாழ். அக.)

திலபிந்து tila-pintu, *n.* <id. + *bindu.* Small hole of the size of a gingili seed; எள்ளைப் போற் சிறிய புள்ளிவடிவமாகச் செய்யப்பட்ட துளை. (சுக்கிரநீதி, 329.)

திலமலம் tila-malam, *n.* <id. +. Oil-cake; பிண்ணாக்கு. (யாழ். அக.)

திலாலவணம் tilā-lavaṇam, *n.* perh. id. +. *Pokkilavaṇam,* a kind of salt; போக்கிலவணம். (யாழ். அக.)

திவ்வியநற்கருணைச்சிமிழ் tivviya-naṟkaruṇai-c-cimiḻ, *n.* <*divya* +. Ciborium; அப்பம்வைக்கும் பாத்திரம். *Pond.*

திவ்வியமணி tivviya-maṇi, *n.* <id. +. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சங். 47.)

திவாமானம் tivā-māṉam, *n.* <*divā* +. Duration of day, from sunrise to sunset; சூரியோதயந்தொடங்கி அஸ்தமனம் வரையுள்ள பகற் பொழுது. (J. N.)

திறக்கு-தல் tiṟakku-, *5 v. intr.* To be increased; அதிகப்படுதல். (யாழ். அக.)

திறலோன் tiṟalōṉ, *n.* <திறல். Boy, fifteen years old; பதினைந்தாண்டுப் பிராயத்தான். (பன்னிருபா. 230.)

திருவல் tiṟāval, *n.* Spanker; கலிமி பாய்மரத்துக்குப் பிற்பக்கமாய்க் கோஸ்பறுவான் பூம் என்ற உத்தரத்தில் விரிக்கப்படும் பாய். (M. Navi. 251.)

தினசரிதக்காரன் tiṉa-carita-k-kāraṉ, *n.* <தினம் + சரிதம் +. Diarist; நாட்குறிப்பு எழுது வோன். (பணவிடு. 20.)

தினப்பிரமாணம் tiṉa-p-piramāṇam, *n.* <id. +. See தினமானம். (W.)

திநந்தரஇயக்கம் tiṉāntara-iyakkam, *n.* <id. + அந்தரம் +. Diurnal motion of the earth; மேற்குப்பக்கத்திலிருந்து கிழக்குப்பக்கமாகப் பூமி தன்னைச் சுற்றிவரும் இயக்கம். (M. Navi. 54.)

தீ

தீ tī, *n.* prob. *dhī.* Way, means of escape; உபாயவழி. (யாழ். அக.)

தீக்கரும்பு tī-k-karumpu, *n.* <தீ +. Firewood; விறகு. எருமுட்டையுந் தீக்கரும்பையும் . . . அடுக்குவதற்கு (மதி. க. ii, 91).

தீக்கோள் ti-k-kōḷ, *n.* <id. +. Arson, incendiarism; கூரைவீடு வைக்கோல் முதலிய வற்றில் இரகசியமாகத் தீப்பற்றவைக்கை. *Loc.*

தீட்சம் tīṭcam, *n.* prob. *titikṣā.* Experiencing without aversion whatever happens; சம்ப விப்பதை வெறுப்பின்றி அனுபவிக்கை. (யாழ். அக.)

தீட்சாநாமம் tīṭcā-nāmam, *n.* <*dīkṣā* +. (Śaiva.) Name given to a person on taking *tīṭcai,* dist. fr., *piḷḷai-t-tiru-nāmam;* தீட்சை பெறும்போது கொள்ளும் பெயர்.

தீட்சைக்குறை tīṭcai-k-kuṟai, *n.* <id. +. Initiation into the mysteries of Śaiva religion; சைவசமயத்துக்குரித்தான தீட்சை செய்துகொள் ளுகை. *Colloq.*

தீட்டு-தல் tīṭṭu-, *5 v. tr.* Caus. of தீண்டு-. To wear; சாத்துதல். எழின்முடி தீட்டி னனே (சிவக. 2641).

தீட்டுக்குறி tīṭṭu-k-kuṟi, *n.* <தீட்டு +. *Ōla* chit, note; ஓலைச்சீட்டுவகை. (T. A. S. v, 208.)

தீண்டமாழ்கி tīṇṭa-māḻki, *n.* <தீண்டு- +. *Toṭṭālvāṭi,* a sensitive plant; தொட்டால்வாடி. (நீலகேசி, 365, உரை.)

தீண்டல் tīṇṭal, *n.* prob. தீண்டு-. Field; வயல். பிரமராயன் தீண்டலில் (S. I. I. vii, 3).

தீண்டாதபொழுது tīṇṭāta-poḻutu, *n.* <id. + ஆ neg. +. The period of menses, when pollution is observed; மகளிர் சூதகம். (நேமிநா. 10, உரை.)

தீந்தகாலம் tīnta-kālam, *n.* <தீ- +. Period of drought; பஞ்சகாலம். (யாப். வி. 532.)

தீந்தாச்சரக்கு tīntā-c-carakku, *n.* <தீந்தா +. Green vitriol; அன்னபேதி. *Pond.*

தீபதம் tīptam, *n.* <*dīpta.* (Mus.) A class of *rāgas;* இராகவகையு ளொன்று. (பரத. இராக. 47.)

தீபகக்குருவி tīpaka-k-kuruvi, *n.* <தீபகம் +. Bird used as a decoy; பார்வைப்பட்சி. (சிவக். பிரபந். 351.)

தீபமாலை tīpa-mālai, *n.* <தீபம் +. Row of lights, as in a chandelier; சரவிளக்கு. (S. I. I. v, 273.)

தீபனம் tīpaṇam, *n.* <*dīpana.* (யாழ். அக.) 1. Brilliance, lustre; அதிக ஒளி. 2. Making food-offerings to a deity; நிவேதனஞ் செய்கை.

தீபாங்கம் tīpāṅkam, *n.* <*dīpāṅga.* (Jaina.) A celestial tree, supposed to give bright gems which shed light; இரத்தின தீபங்களைப் பயக்குந் தேவலோகமரம். (தக்கயாகப். 757, உரை, அடிக்.)

தீபாதனம் tīpātaṇam, *n.* <*dīpāsana.* (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 107, உரை.)

தீம்பாலை tī-m-pālai, *n.* perh. தீ+. A kind of tree; மாவகை. (மூ. அ.)

தீமலம் tī-malam, *n.* <id.+. Charcoal; கரி. (யாழ். அக.)

தீர்க்கசுமங்கலி tīrkka-cumaṅkali, *n.* <*dīrgha*+. Dancing girl; தேவரடியாள். (M. N. A. Dt. i, 201.)

தீர்க்கன் tīrkkaṉ, *n.* <*dīrgha.* Prophet; தீர்க்கதரிசி. தீர்க்கருரை நாடி யறியார் பலர் (இரகூ ணிய. பக். 51).

தீர்த்துக்கட்டு-தல் tīrttu-k-kaṭṭu-, *v. intr.* <தீர்-+. To remarry after divorce; முன் செய்த கலியாணத்தை நீக்கி வேறு விவாகஞ்செய்துகொள்ளுதல். *Loc.*

தீர்திறன் tīr-tiṟaṉ, *n.* <தீர்-+. Expiation of sin; பிராயச்சித்தம். (குறள், 214, உரை.)

தீர்வுமுறி tīrvu-muṟi, *n.* <id.+. Release deed; bond evidencing discharge of a debt; பத்திரவகை. (Pudu. Insc. 425.)

தீர்வையாயம் tīrvai-y-āyam, *n.* <தீர்வை+. Customs revenue; சுங்கவரி. எங்கெங்கு மொரு தீர்வையாய முண்டாயினும் (தாயு. சுகவாரி. 5).

தீரசங்கராபரணம் tīra-caṅkarāparaṇam, *n.* <*dhīra*+. (Mus.) *Caṅkarāparaṇam*, a primary *rāgā;* மேளகர்த்தாக்களுள் ஒன்றான சங்கரா பரணம். (பரத. ராக. 104.)

தீராப்பிழை tīrā-p-piḻai, *n.* <தீர்-+ஆ neg.+. Inexpiable sin; உய்தியில் குற்றம். தீராப்பிழை யகன்று பரமாய பேறடைந்தே (வேதாரணி. இலிங்க. 35).

தீவாணம் tīvāṇam, *n.* <Persn. *dīwān.* Council of a Muhammadan king; முகம்மதிய அரசரின் ஆலோசனைச் சங்கம். *Pond.*

தீவிரி-த்தல் tīviri-, *11 v. intr.* <*tīvra.* To attempt; to make effort; முயலுதல். *Pond.*

தீவினைக்கொடை tīviṉai-k-koṭai, *n.* <தீவினை+. Money spent in evil ways; கேடான வழிகளிற் செலவழிக்கப்படும் பொருள். (சுக்கிர நீதி, 145.)

தீவுகரிவு tīvu-karivu, *n.* <தீ-+. Damage, as of crops; பயிர் முதலியன கேடுறுகை. (S. I. I. viii, 235.)

தீனப்பிரவர்த்தகன் tīṉa-p-piravartta-kaṉ, *n.* <*dīna-pravartaka.* One who attends to the affairs of the poor; ஏழைகளுக்குதவுவோன். (கடம்பர். உலா, 49.)

து

துக்கச்சல்லா tukka-c-callā, *n.* <துக்கம்+. Crepe; துக்க அடையாளமாகக் கட்டிக்கொள் ளுங் கறுப்புத்துணி. *Pond.*

துக்கநாடகம் tukka-nāṭakam, *n.* <id.+. Tragedy; துக்ககரமான முடிவையுடைய நாடகவகை. *Pond.*

துக்கு tukku, *n.* prob. துடிக்கு. Quickness, activity; சுருசுருப்பு. துக்காய்ப்புகுந்து நின்றுட வேண்டும் (பாடு. 70, வாழ்க்கைப்.).

துகன்மகம் tu-kaṉmakam, *n.* <*dvi-karmaka.* (Gram.) Verb taking two objects; துவிகன்மகம். துணைநிலை யகதிதந் துகன்மக மென்பர் (பி. வி. 12, உரை).

துகைபலன் tukai-palaṉ, *n.* <தொகை+. Harvest; அறுவடை. துகைபலனில் வாருமென்று சொல்ல (சரவண. பணவிடு. 256).

துசாரோகணம் tucārōkaṇam, *n.* <*dhvaja-ā-rōhaṇa.* Ceremonial hoisting of the flag in a temple, at the commencement of the annual festival; கோவிலிற் கொடியேற்றம். காணுந் துசாரோகணஞ்செய்து (கடம்ப. உலா, 52).

துசாவந்தி tucāvanti, *n.* <*dhvajāvanti.* (Mus.) A *rāga;* ஓர் இராகம். *Loc.*

துஞ்சு-தல் tuñcu-, *5 v. intr.* To become solidified, as ghee; நெய் முதலியன கட்டி யாக உறைதல். துஞ்சியநெய்யும் காய்ந்த பாலும் (திவ். பெரியாழ். 2, 1, 6, வ்யா. பக். 228).

துஞ்சுநிலை tuñcu-nilai, *n.* <துஞ்சு-+. Cot, bedstead; கட்டில். (யாழ். அக.)

துஞ்சுமன் tuñcumaṉ, *n.* <id. Indolent person; சோம்பலுள்ளவன். (R.)

துடி tuṭi, *n.* <*tuṭi.* Molecule, as made up of three atoms; திரியணுகம். துடிகொள் துண்ணிடை (திவ். பெரியதி. 1, 2, 3, வ்யா.).

துடிப்பு tuṭippu, *n.* 1. Exorbitance, as of price; விலை முதலியவற்றின் ஏற்றம். *துடிப்பானதுமான விலையை ஏற்றுவார்கள்* (மதி. க. ii, 173). 2. Zeal; ஊற்றம். *சைவத் துடிப்புள்ளவர்* (மதி. க. ii, 27).

துடினம் tuṭiṉam, *n.* <துடி-. Haste; விரைவு. *Loc.*

துண்டகவிஷயம் tuṇṭaka-viṣayam, *n.* <*tuṇḍaka*+. Toṇṭai-maṇṭalam; தொண்டை நாடு. (An. Dec. 4.)

துண்டீரம் tuṇṭīram, *n.* <*tuṇḍīra*. See துண்டகவிஷயம். (An. Dec. 4.)

துணி tuṇi, *n.* <துணி-. Clarity; தெளிவு. *துணிகடற் றண்சேர்ப்ப* (கலித். 132).

துணிப்புழு tuṇi-p-puḻu, *n.* <துணி+. A worm infesting woollen clothes; கம்பளிச் சால்வைகளிற் கூடுகட்டும் புழுவகை. (அபி. சிந். 907.)

துணிபுத்தூக்கு tuṇipu-t-tūkku, *n.* <துணிபு+. (Mus.) A musical mode, one of seven *tūkku*; எழுவகைத் தூக்குகளுள் ஒன்று. (சிலப். 3, 16, உரை.)

துணுக்குத்துணுக்கெனல் tuṇukku-t-tuṇukkeṉal, *n.* Onom. expr. of being afraid; அஞ்சுதற்குறிப்பு. *'நான்சென்று கிட்டுகை யாவதென்' என்று துணுக்குத்துணுக்கென்ற நிற்பர்கள் பிரம்மாதிகள்* (திவ். பெரியதி. 1, 2, 9, வ்யா.).

துணைச்சகோதரி tuṇai-c-cakōtari, *n.* <துணை+. Novitiate nun before ordination, among Christians; கிறிஸ்தவருள் சன்னியாசம் பெறுவதற்குமுன் சீடநிலையிலுள்ளவள். *Pond.*

துணைச்சந்நியாசி tuṇai-c-canniyāci, *n.* <id.+. Lay disciple before ordination, among Christians; கிறிஸ்தவருள் சன்னியாசம் பெறுவதற்குமுன் சீடநிலையிலுள்ளவன். *Pond.*

துணையாளி tuṇai-y-āḷi, *n.* <id.+. Coadjutor; ஒருகாரியத்திற் சமமான பங்கெடுத்துக் கொள்பவன். *Pond.*

துணைவாரி tuṇai-vāri, *n.* <id.+. Folding doors; இரட்டைக்கதவு. (சிவக். பிரபந். பக். 92.)

துத்தநாகமணல் tuttanāka-maṇal, *n.* <துத்தநாகம்+. Sand containing lead; நாக மணல். (வை. மூ.)

துத்தாரி tuttāri, *n.* cf. *தத்தரி*. A kind of musical instrument; வாச்சியவகை. (கந்தபு. கீர். 59, 7.)

துத்தி tutti, *n.* (திவ். பெருமாள். 1, 1, வ்யாக்.) 1. Sacred earth; திருமண். 2. Sacred sandal; திருவடிநிலை.

துத்திப்பட்டு tutti-p-paṭṭu, *n.* <துத்தி+. A kind of fine cloth; துகில்வகை. (எங்களூர், 168.)

துதாங்கனம் tutāṅkaṉam, *n.* Good habits; தாயவொழுக்கம். *நன்பவர்க்குத் துதாங்கனத் தொன்றுமே* (நீலகேசி, 316).

துதாங்கு tutāṅku, *n.* See துதாங்கனம். *துதாங்கென் றுத்தர் சொன்னவே* (நீலகேசி, 356).

துந்துபிவழங்கு-தல் tuntupi-vaḻaṅku-, *v. intr.* <துந்துபி+. To be happy or glad; சந்தோஷமாயிருத்தல். *Loc.*

துப்பினி tuppiṉi, *n.* Corr. of துப்புநீர். *Tinn.*

துப்புநீர் tuppu-nīr, *n.* <துப்பு-+. Spittle; எச்சில்நீர். *Tinn.*

துப்பேறு-தல் tuppēṟu-, *v. intr.* <துப்பு+. To become rusty; துருவேறுதல். *தண்ணீர் பட்டாலோ சோல்டுகோல்டு துப்பேறிப்போகும்* (மதி. க. ii, 111).

தும்படைசி tumpaṭaici, *n.* <தும்பு+அடைசு-. Brush; அழுக்குத்துப்போக்குங் கருவி. *Pond.*

தும்பிக்கைமாலை tumpikkai-mālai, *n.* <தும்பிக்கை+. A kind of large garland; மாலை வகை. *Nāṉ.*

தும்பிச்சி tumpicci, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 56.)

தும்பிமுகன் tumpi-mukaṉ, *n.* <தும்பி+. God Gaṇēša; விநாயகக் கடவுள். (பேரின்பக்கீர்த். பக். 2.)

தும்பை tumpai, *n.* A kind of grain; ஒருவகைத் தானியம். *தும்பையென்றும் வாய்வகுக்குஞ் சாமியென்றும்* (நெல்விடு. 170).

தும்மி-தல் tumi-, 4 *v. tr.* To remove; விலக்குதல். *சுதைச்சிலம்பிமேல் விழவூதித் தும்மினன்* (பெரியபு. திருநீலநக். 13).

துயோதகம் tuyōtakam, *n.* <*dyōtaka*. (Gram.) Hinting at a meaning other than the natural meaning of a word; ஒரு சொல்லின் ஆற்றலால் வெளிப்படத்தோன்றும் பொருளின்றி அதன் இயைபுபட்ட பொருள் விசேடங் குறிப்பிற் றோன்றுகை. (தொல். சொல். குறிப். பக். 240.)

துர்த்தானம் tur-t-tāṉam, *n.* <தர்+. A gift whose acceptance is sinful; பெறுவது பாவம் என்று கருதப்படுந் தானம். (பகவற்கீதை. மான்மி. 11.)

துர்ப்பொசிப்பு tur-p-pocippu, *n.* <id.+. (Astrol.) Inauspicious part of a *rāśi*; இராசியின் கேட்ட பகுதி. (சோதிட. சிந்.)

துர்வாயகம் turvāyakam, *n.* <*dur-vācaka.* Abusive language; வசவு. *பிராமணரைத் துர்வாயகம் பறைகில்* (T. A. S. iii, 195).

துர்வியாதி tur-viyāti, *n.* <துர்+. Venereal disease; துர்நடத்தையால் உண்டாகும் நோய். *Colloq.*

துரந்தரயோகம் turantara-yōkam, *n.* <*dhurantara*+. An auspicious combination of planets, which indicates victory; செயத்தைக் குறிப்பதான ஒரு கிரகநிலை யோகம். *கிட்டிவந்த தமக்குத் துரந்தரயோகம்* (பெண்மதிமாலை, பக். 21).

துரஸ்து turastu, *n.* <Persn. *durust.* Repair, good condition; சீர்கேடா நிலை. *Colloq.*

துராதுரை turāturai, *n.* <துரை+. Overlord, lord of lords; துரைகளுக்கெல்லாம் அதிபதி. *துராதுரைக் கிணையுண்டோடி* (கனம் கிருஷ்ணையர், கீர்த். 50).

துராயுதம் tur-āyutam, *n.* prob. *dur-ākṛta.* Injustice; அநீதி. (யாழ். அக.)

துரியம் turiyam, *n.* perh. *druta.* Quickness; விரைவு. *இதென்ன துரியம்* (தெய்வச். விறலி விடு. 243).

துரு turu, *n.* Recital of a Vēdic text, etc., by a disciple following his preceptor's lead; வேதமுதலியன ஓதுஞ் சந்தைவகை. *சாகையிலும் கற்பத்திலும் கணத்திலுந் துருச்சொல்லி* (T. A. S. i, 8).

துருக்கநாட்டுமணி turukka-nāṭṭu-maṇi, *n.* <துருக்கம்+நாடு+. Emerald; மரகதம். (யாழ். அக.)

துருத்திவாணம் turutti-vāṇam, *n.* <துருத்தி+. A kind of rocket; வாணவகை. (W.)

துருவசக்கரம் turuva-cakkaram, *n.* <துருவம்+. Polar circles; பூமியின் சீத மண்டலங்களை வரையறுக்குஞ் சுற்றுரேகை. (M. Navi. 57.)

துரைப்பெண் turai-p-peṇ, *n.* <துரை+. Lady, noble woman; சீமாட்டி. *தொழுத மதன் போற்றுந் துரைப்பெண்* (அழகியநம்பியுலா, 136).

துரைமின்னற்பொன் turai-minnaṟ-poṉ, *n.* <id.+மின்னல்+. A coin; நாணயவகை. (M. E. R. 506 of 1925.)

துலங்கு-தல் tulaṅku-, *5 v. intr.* <துளங்கு-. To be uprooted; நிலைகெடுதல். *துலங்கலில் போகமூட்டி* (தணிகைப்பு. காட்டுப். 2).

துலாக்கூலி tulā-k-kūli, *n.* prob. துலா+. A kind of tax; வரிவகை. (T. A. S. ii, 82.)

துலாபாரவரி tulāpāra-vari, *n.* <துலாபாரம்+. A tax; வரிவகை. (S. I. I. vii, 403.)

துவரைச்சிவப்பிறுங்கு tuvarai-c-civap-piṟuṅku, *n.* <துவரை+சிவப்பு+. A kind of maize or great millet; சோளவகை. (விவசா. 3.)

துவளம் tuvaḷam, *n.* cf. தோவாளம். Parapet wall of a well; கிணற்றின் கைப்பிடிச்சுவர். *Loc.*

துவனை tuvaṉai, *n.* <*dhvani.* cf. துவனி. Noise; ஒசை. (யாழ். அக.)

துவா tuvā, *n.* <Arab. *duā.* Prayer; தொழுகை. *Loc.*

துவிபதை tuvipatai, *n.* <*dvi-pada.* A kind of musical composition; இசைப்பாவகை. *கட்கா துவிபதை திரிபதை தண்டகம் முதலியன* (கோபாலகிருஷ்ணபாரதி. 86).

துவைதி tuvaiti, *n.* <*dvaitī* nom. sing. of *dvaitin.* Follower of the doctrine of Śrī Madhvācārya; துவைதக் கொள்கையைப் பின்பற்றுபவன்.

துளப்பு tuḷappu, *n.* Belly; வயிறு. *பாழியிற் பிணங்களும் துளப்பெழப் படுத்தியே* (தக்கயாகப். 376).

துளார் tuḷar, <துளார்-. Weeding-hook; களைக்கோட்டு. (திவ். பெரியதி. 8, 7, 3.)

துளிர்க்கெண்டை tuḷir-k-keṇṭai, *n.* <துளிர்+. White mullet; பாற்கெண்டை. *Loc.*

துளும்பு-தல் tuḷumpu-, *5 v. intr.* To shine; to irradiate; சோதிவிடுதல். *மருளிநின்று துளும்பவே* (தக்கயாகப். 254).

துளையரியம் tuḷai-y-ariyam, *n.* perh. துளை+ஆர்-+இயம். Trumpet, horn; ஊதுகொம்பு. (யாழ். அக.)

துறவன் tuṟavaṉ, *n.* <துறவு. Ascetic; துறவி. *Pond.*

துறுப்புக்கூடு tuṟuppu-k-kūṭu, *n.* cf. திருப்புக்கூடு. Unwinnowed heap of grain; தூற்றப் போலி. (திவ். அமலனாதி. அவ. பக். 14.)

துன்னம் tuṉṉam, *n.* A tree; ஒருவகை மரம். *Pond.*

துன்னாரம் tuṉṉāram, *n.* <துன்னு-. Tailoring; தைத்தற் றொழில். (நீலகேசி, 280.)

துன்னீர் tuṉṉīr, *n.* prob. துர்நீர். Spittle; எச்சில். (யாழ். அக.)

துஜாவந்தி tujāvanti, *n.* <*dvajāvanti.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 55.)

துஷ்டம் tuṣṭam, *n.* <*duṣṭa*. That which is censurable; நிந்திக்கத்தக்கது. (நீலகேசி, 530, உரை.)

துஷ்டி tuṣṭi, *n.* prob. *tuṣṭi*. *Tinn.* 1. Death; சாத்துன்பம். 2. Condolence; துக்கம் விசாரிக்கை.

துஷ்பூண்டு tuṣ-pūṇṭu, *n.* <*duṣ*+. Poisonous plant or herb; விஷப்பூண்டு. (திவ். பெரியாழ். 3, 6, 4, வ்யா. பக். 676.)

துஸ்து tustu, *n.* Ornament; ஆபரணம். துஸ்துதினுசுகள் வாரியாகத்தந்த (கனம் கிருஷ்ணையர். கீர்த். 51).

தூ

தூக்கம் tūkkam, *n.* <தூக்கு-. An ornament of ancient times; பழையகாலத்து அணி வகை. (S. I. I. ii, 86.)

தூக்கு tūkku, *n.* <id. (யாழ். அக.) 1. Uneven state of balance; வாரடை. தராசு தூக்காக இருக்கிறது. 2. Heaviness; கனம்.

தூக்குத்தலரிசி tū-k-kuttal-arici, *n.* <தூ+குத்து-+. Well-polished rice; நன்றாகக் குத்திச் சுத்தஞ்செய்த அரிசி. (S. I. I. iv, 177.)

தூக்குவண்டி tūkku-vaṇṭi, *n.* <தூக்கு+. A kind of carriage; வண்டிவகை. *Pond.*

தூங்குமெத்தை tūṅku-mettai, *n.* <தூங்கு-+. Swinging cot or bedstead; தூங்தமஞ்சம். தூங்குமெத்தைபோலே திருவணந்தாழ்வான் மூச்சாலே அசைக்கவிறே (திவ். பெரியாழ். 8, 5, 11, வ்யா. பக். 658).

தூணிறுத்துதல் tūṇiṟuttutal, *n.* <தூண்+நிறுத்து-. Ceremony of setting up on an auspicious day the first post for the construction of a marriage pavilion or pandal; நாட்கால் நாட்டுகை. (E. T. vi, 133.)

தூதுகறியுருண்டை tūtu-kaṟi-y-ūruṇṭai, *n.* <தூது+கறி+. Ball of kneaded black-gram flour, used in sauce; பொரித்ததுழம்பில் இடும் உளுத்தமா உருண்டை. *Loc.*

தூப்பஞ்செய்-தல் tūppañ-cey-, *v. intr.* prob. தூ+. To clean; சுத்தஞ்செய்தல். கண்டவர் காட்சியைத் தூப்பஞ்செய்தடன் (மேருமந். 1271).

தூபகடம் tūpa-kaṭam, *n.* <தூபம்+. Censer; தூபமிடி. தூபகடமேந்திப் பணிந்து (மேருமந். 1037).

தூம்பு tūmpu, *n.* A measure; ஓரளவு. இருதூம்பு அரிசி (S. I. I. viii, 249).

தூமபேதி tūma-pēti, *n.* prob. தூமம்+. A solvent, one of *pañca-pēti*, q.v.; பஞ்சபேதியு ளொன்று. (சங். அக.)

தூமரதம் tūma-ratam, *n.* <id.+. Railway train; புகைவண்டி. (சிற்பரத். முகவுரை, பக். 11.)

தூய்மை tūymai, *n.* <தூ. Whiteness; வெண்மை. தூய்மை காட்டும் (பெருங். உஞ்சைக். 33, 59).

தூர் tūr, *n.* <தூறு. Calumny; பழிச்சொல். கவலைத்தூர் கொல்லுங் கதிர்காமம் (கதிரைமலை. காதல். 10).

தூரறு-த்தல் tūr-aṟu-, *v. intr.* <தூர்+. To root out; மூலநாசஞ்செய்தல். அமணர்தூ ரறுத்தான் (பெரியபு. திருநாவு. 298).

தூரால் tūrāl, *n.* prob. id. Bush; புதர். *Pond.*

தூரியாங்கம் tūriyāṅkam, *n.* <தூரியம்+. A *Kalpaka* tree which yields every kind of musical instrument that is wished for; நாஞவித வாத்தியங்களைக் கொடுக்குங் கற்பகதருவகை. (தக்கயாகப. 757, குறிப்பு.)

தூவல் tūval, *n.* <தூவு-. A kind of vegetable curry; கறிவகை. *Loc.*

தூற்றுக்குடியான்சுழி tūṟṟukkuṭiyāṉ-cuḻi, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 133.)

தூறுமீன் tūṟu-mīṉ, *n.* prob. தூறு+. A kind of fish; மீன்வகை. (பெரியமாட். 101.)

தூஷணன் tūṣaṇaṉ, *n.* <*dūṣaṇa*. Reviler, one who abuses another; பிறரை நிந்திப்போன். தூஷணன் சண்டாளன் (நீதிசாரம், 98).

தூஷணை tūṣaṇai, *n.* <*dūṣaṇā*. *Loc.* 1. Abuse; இகழ்ச்சி. 2. Harm; கேடு.

தெ

தெசி-த்தல் teci-, *11 v. tr.* <*tyaj*. To abandon; கைவிடுதல். சிகைநூறெறித்துச் செபங்கள் பண்ணி (பாடு. 71, சந்நியாசம், 1).

தெண்டகுற்றம் teṇṭa-kuṟṟam, *n.* <தெண்டம்+. See தெண்டநீர்வை. (S. I. I. iii, 35.)

தெண்டநீர்வை teṇṭaṉ-tīrvai, *n.* <id.+. Penal tax; அபராதமாக விதிக்கும் வரி. கஷ்டம் தெண்டநீர்வை தொடுத்தபின் (கட்டபொம்மு. பக். 28).

தெண்டில் teṇṭil, *n.* Blood-sucker; ஓணான். *Loc.*

தெண்டு teṇṭu, *n.* cf. தண்டு. See தெண்டில். *Loc.*

தெண்டுச்சலாகை teṇṭu-c-calākai, *n.* prob. *daṇḍa* + *šalākā*. A surgical instrument; இரணவைத்தியத்தில் உபயோகிக்கும் ஆயுதவகை. (தஞ். சர. iii, 40.)

தெத்தபடம் tetta-paṭam, *n.* < *dagdha* + *paṭa*. Burnt cloth; எரிபட்ட துணி. தெத்தபடமானேண்டி தீயிரும்பினீரானேன் (பட்டினத்துப். பக். 244).

தெத்து tettu, *n.* Yard-arm in a vessel or dhoney; பருமல். *Pond.*

தெத்துமாற்றிப்போடு-தல் tettu-māṟṟi-p-pōṭu-, *v. intr.* perh. தெற்று + மாற்று- +. To break joint, in building walls, etc.; ஏறுவாசி வைத்துச் சுவர் கட்டுதல். *Madr.*

தெந்தனம் tentaṉam, *n.* 1. Laziness; சோம்பல். 2. Delay; தாமதம். கருணைபொழிய இன்னந் தெந்தனமா (கனம் கிருஷ்ணையர், 65).

தெந்துக்கி tentukki, *n.* perh. தேன் + துக்கு-. Cuspidate-leaved calycine croton; வெள்ளோப்புனை. (L.)

தெரிகவிச்செய்யுள் teri-kavi-c-ceyyuḷ, *n.* < தெரி- + கவி +. Anthology of poems; பல நூல்களினின்று பொறுக்கியெடுக்கப்பட்ட செய்யுட்களின் தொகுதி. *Pond.*

தெரிமானனப்புள் terimāṉaṉa-p-puḷ, *n.* prob. தெரிமா + ஆனனம் +. Owl; ஆந்தை. (யாழ். அக.)

தெலுங்குக்கட்டு teluṅku-k-kaṭṭu, *n.* < தெலுங்கு +. *Māmpaḻa-k-kaṭṭu*, a mode of wearing the saree; மாம்பழக்கட்டு. *Loc.*

தெலுங்குச்சிற்ரூடை teluṅku-c-ciṟṟāṭai, *n.* < id. +. See தெலுங்குக்கட்டு.

தெவிட்டு-தல் teviṭṭu-, *5 v. tr.* To consider, think; நினைத்தல். வர்த்தக சம்பாதனையிற் சிந்தைவைத்தே னென்று தெவிட்டாதீர் (பஞ்ச. திருமுக. 1124).

தெழி-த்தல் teḻi-, *11 v. tr.* To thresh; மிதித்துழக்குதல். நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களே (நன். 101, உரை).

தெளிநீர் teḷi-nīr, *n.* < தெளி- +. Clear solution; ஒரு பண்டத்தைக் கரைத்துத் தெளியவைத்து வடித்த நீர். (இராசவைத். 80, உரை.)

தெளிவாள் teḷi-vāḷ, *n.* < id. +. Sharp sword; கூர்வாள். இவ் வறிவேகத்தை யறக்கைக்குத் தெளிவாளாயிருப்பது ஏற்றச்சுருக்கமறத் தன்னளவி லுண்டான தெளிவு (ரஹஸ்ய. 602).

தெளிவி-த்தல் teḷivi-, *11 v. tr.* Caus. of தெளி-. To appease; சாந்தப்படுத்துதல். பகவானேடி எதிரம்பு கோத்த ருத்ரனை ப்ரஹ்மா தெளிவித்து விலக்க (ரஹஸ்ய. 609).

தெளிவில்புகழ்ச்சி teḷivil-pukaḻcci, *n.* < தெளிவு + இல் neg. +. (Rhet.) A figure of speech, in which there is apparent censure but veiled praise; பழிப்பதுபோல் புகழ்வதாகிய அணி. (வீரசோ. அலங். 14, உரை.)

தெளிவு teḷivu, *n.* < தெளி-. One of *pāṭaṟ-payaṉ*; பாடற்பயன்வகை. (சிலப். 3, 16, உரை.)

தெற்றுரை teṟṟurai, *n.* < தெற்று- +. Inconsistent speech; மாறுபடுமொழி. தெற்றுரை செய்து தியக்கமுற்ற (பிரபோதசந். 11, 19).

தெறிசோறு teṟi-cōṟu, *n.* < தெறி- +. Spoon-drift; உண்கலத்தினின்று சிதறிவிழுஞ் சோற்றுப் பருக்கை. *Pond.*

தெறிப்பு teṟippu, *n.* < id. *Pond.* 1. Rocket; அதிர்வேடி. 2. Fillip; சிணுக்கி.

தென்னரங்கன்சம்பா teṉ-ṉ-araṅkaṉ-campā, *n.* தெற்கு + அரங்கன் +. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. தென்னரங்கன் சம்பா திருக்குறுங்கை நம்பிசம்பா (செல்விடு. 183).

தே

தேக்கம் tēkkam, *n.* < தேங்கு-. 1. Obstruction; தடை. தேக்கமொன்று மிலன் (திவ். பெரியாழ். 2, 9, 3). 2. Fear; அச்சம். (திவ். பெரியாழ். 2, 9, 3, வ்யா. பக். 457.)

தேங்கனி tēṅ-kaṉi, *n.* < தெங்கு +. Coconut; தேங்காய். தேங்கனியுங் கொண்டுவந்து சோக வைத்தாராம் (கோவ. க. 65).

தேங்காய்கட்டியடி-த்தல் tēṅkāy-kaṭṭi-y-aṭi-, *v. tr.* < தேங்காய் + கட்டு- +. To give trouble; to vex, worry; தொந்தரவுசெய்தல். *Loc.*

தேங்காய்ப்பாயசம் tēṅkāy-p-pāyacam, *n.* < id. +. A sweet preparation with coconut pulp; தேங்காய்ப்பாலைச் சேர்த்துச் செய்த பாயசம். *Loc.*

தேங்கு[1]-தல் tēṅku-, *5 v. intr.* cf. தியக்கு-. To be afraid; அஞ்சுதல். நாம் இத்தைச் செய்யும்படியென் என்று தேங்குதல் அல்பமுமுடையவனல்லன் (திவ். பெரியாழ். 2, 9, 3, வ்யா. பக். 457).

தேங்கு² tēṅku, *n.* <தெங்கு. Coconut tree; தெங்கு. (J.)

தேசகாலம் tēca-kālam, *n.* <தேசம்+. Hour, time; வேளை. மூன்று தேசகாலத்துக்கும் நெய்யமுதுக்கும் (Insc.).

தேசசஞ்சாரி tēca-cañcāri, *n.* <id.+. See தேசாந்திரி. (யாழ். அக.)

தேசசஞ்சுற்றி tēcañ-cuṟṟi, *n.* <id.+. See தேசாந்திரி. (கொங்கு. சத. பக். 114.)

தேசத்துரோகம் tēca-t-turōkam, *n.* <id.+. Disloyalty to the country; நாட்டுக்குச் செய்யுந் துரோகம். (கள்ளர்சரி. 12.)

தேசபாண்டியஇனம் tēca-pāṇṭiya-iṉām, *n.* <id.+. A kind of *iṉām;* இனம்வகை. (R. T.)

தேசாட்சி tēcāṭci, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 55, உரை.)

தேசாடனம் tēcāṭaṉam, *n.* <*dēšāṭana.* Travel in foreign countries; அன்னியதேச யாத்திரை. *Loc.*

தேசாந்தரதூரம் tēcāntara-tūram, *n.* <தேசாந்தரம்+. Longitude; பூமியின் மத்திய தேசாந்தரரேகைக்குக் கிழக்கே அல்லது மேற்கேயுள்ள தூர அளவு. (M. Navi. 56.)

தேசாந்தரரேகை tēcāntara-rēkai, *n.* <id.+. Meridian; சமரேகைக்கு நேர்தூக்காக இருதுருவங்களின் வழியே செல்லும் இரேகை. (M. Navi. 55.)

தேசாந்திரி tēcāntiri, *n.* <*dēšāntara.* 1. Tramp; one who leads a roving life; பல விடங்களுக்குஞ் சென்று வாழ்பவன். செகத்தினிற் செல்லுந் தேசாந்திரிக் கவன் கற்ற வித்தை (நீதிசாரம், 26). 2. Pilgrim; யாத்திரிகன். 3. Wandering mendicant; பரதேசி.

தேசாயி tēcāyi, *n.* cf. கோசாயி. A class of mendicant pilgrims from North India; வடநாட்டிலிருந்து யாத்திரையாக வரும் யாசகருள் ஒரு வகையான். (திவ்விய. தேச. சரி. 19.)

தேசிகம் tēcikam, *n.* <*dēšika.* (Mus.) A mode of singing; இசைபாடுவதில் ஒரு முறை. (கனம் கிருஷ்ணையர், 7.)

தேசிகன் tēcikaṉ, *n.* <*tējaka.* Beautiful person; அழகன். (யாழ். அக.)

தேசிமுட்டிக்கை tēci-muṭṭi-k-kai, *n.* <தேசி+. (Nāṭya.) A kind of hand-pose; அபிநயக்கைவகை. (பரத. பாவ. 28.)

தேசியராகம் tēcīya-rākam, *n.* <*dēšya*+. (Mus.) A class of *rāgas;* இராகங்களுளொரு பிரிவு.

தேசுகம் tēcukam, *n.* A plant; செடிவகை. *Loc.*

தேட்டாறு tēṭṭāṟu, *n.* A disease of cattle; கால்நடை நோய்வகை.

தேட்டூண் tēṭṭūṇ, *n.* <தேடு+. Earnings; சம்பாத்தியம். தேட்டூணு மெங்கள் குடியிருப்பும் . . . எல்லாம் போச்சது (தெய்வச். விறலிவி. 499).

தேந்தம் tēntam, *n.* A mark in horses; குதிரைக் சுழிவகை. பிறப்புவகை வளருந்தேந்தம் (தஞ். சர. iii, 117).

தேம் tēm, *n.* Wetness; ஈரம். (யாழ். அக.)

தேம்பு-தல் tēmpu-, 5 *v. intr.* To loose strength; to become weak; வலிதுறைதல். தேம்பின திறத்தா யேகேல் (இரகு. யாகப். 47).

தேய்தவளை tēy-tavaḷai, *n.* <தேய்-+. Indian toad; தேரை. (யாழ். அக.)

தேய்ப்புமட்டப்பலகை tēyppu-maṭṭa-p-palakai, *n.* <தேய்-+. Mason's smoothing plane; மணியாகுப்பலகை. (C. E. M.)

தேயாமணி tēy-ā-maṇi, *n.* <id.+ஆ neg.+. Diamond; வைரம். (யாழ். அக.)

தேர்கை tērkai, *n.* <தேர்-. A kind of poem; சித்திரக்கவிவகை. (யாப். வி. பக். 511.)

தேர்ச்சியர் tērcciyar, *n.* <id. Ministers; மந்திரிகள். (யாழ். அக.)

தேர்தல் tērtal, *n.* <id. Election; சபைகளுக்குப் பிரதிநிதியைத் தெரிந்தெடுக்கை. *Mod.*

தேர்வாணம் tēr-vāṇam, *n.* <தேர்+. A kind of rocket; வாணவகை. *Loc.*

தேர்விருந்து tēr-viruntu, *n.* <id.+. Feast given by a person to his son-in-law on the day of car-festival in the local temple; தேர்த்திருநாளன்று ஒருவன் தன் மாப்பிள்ளைக்குச் செய்யும் விருந்து. *Loc.*

தேரணை tēraṇai, *n.* Black honey-thorn; நக்கணி. (L.)

தேராளி tēr-āḷi, *n.* <தேர்+. Warrior mounted on a chariot; தேர்வீரன். (திவ். பெரியாழ். 2, 1, 2, வ்யா. பக். 209.)

தேரோட்டி tēr-ōṭṭi, *n.* <id.+. Axle pin; அச்சாணி. (யாழ். அக.)

தேவகதி tēva-kati, *n.* <*dēva*+. (Buddh.) One of *ṣaṭ-kati,* q.v.; ஷட்கதியுள் ஒன்று. (மணி.)

தேவகுடிமை tēva-kuṭimai, *n.* perh. id.+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. ii, 115.)

தேவசங்கு tēva-caṅku, *n.* <id.+. *Caṅka-niti*, a treasure of Kubēra; சங்கநிதி. (யாழ். அக.)

தேவடிமை tē-v-aṭimai, *n.* <தே+. 1. Dancing-girl, as a servant of God; தாசி. (Pudu. Insc. 930.) 2. Maid-servant; வேலைக்காரி. (I. M. P. N.A. 202.)

தேவதாமரை tēva-tāmarai, *n.* <தேவர்+. *Paduma-niti*, a treasure of Kubēra; பதுமநிதி. (யாழ். அக.)

தேவதீர்த்தம் tēva-tīrttam, *n.* <*dēva*+. 1. Water poured from the palm of the hand through the finger tips on the ground, to propitiate Dēvas, one of *pañca-tīrttam;* பஞ்ச தீர்த்தங்களு ளொன்று. (சைவச. பொது. 66.) 2. Sacred tank to the west of a Šiva temple; சிவன் கோவிலுக்கு மேற்கிலுள்ள தீர்த்தம். *Loc.*

தேவபண்டிதன் tēva-paṇṭitaṉ, *n.* <id.+. Dhanvantari; தன்வந்தரி. (வைதாரணி. குளகே. 9.)

தேவமனோகரி tēva-maṉōkari, *n.* <id.+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

தேவமேரையாய் tēva-mērai-y-āy, *adv.* <id.+மேரை+. Divinely; தீவ்வியமாய். *Pond.*

தேவர் tēvar, *n.* <*dēva*. (Jaina.) Celestials, of five classes, viz., *pavaṇar, viyantarar, cōtiṭar, kaṟpar, vēmāṉiyar;* பவணர் வியந்தரர் சோதிடர் கற்பர் வேமானியர் என்ற ஐவகைத் தேவசாதியினர். (நீலகேசி, 87.)

தேவரடியார் tēvar-aṭiyār, *n.* <தேவன்+. Māhēšvaras, a sect among Šaivaites; மாகேசுர சைவர். தேவரடியாராயுள்ள ஆண்டார்களே தெண்டித்த (S. I. I. vii, 399).

தேவாதீனம் tēvātīṉam, *n.* <id.+அதீனம். God's will; தெய்வசங்கல்பம். *Pond.*

தேவாரம் tēvāram, *n.* A compartment in a mansion; மாளிகையில் ஒரு பகுதி. பெரியவுடை யார் தேவாரத்தே கேட்டருளி (S. I. I. vii, 269).

தேவானை tēvāṉai, *n.* <*dēva*+. Dēvasēnā, a Consort of God Skanda; தெய்வயானை. தேவானைத் தாயார் திருக்கணருள் தந்திடும் (கதிரைமலை. காதல். 2).

தேவிடு-தல் tēviṭu-, *v. tr.* <தேவை+இடு-. To require; வேண்டுதல். கான் ஒருகால் தேவிடானின்றேன் (சடை, 1, 10, 8).

தேன்வாழை tēṉ-vāḻai, *n.* <தேன்+. A kind of plantain; வாழைவகை. *Loc.*

தேனஞ்சு tēṉ-añcu, *n.* <id.+. Mixture of five delicious substances; பஞ்சாமிர்தம். தேனஞ் சாடிய தெங்கிள நீரொடு (தேவா. 1020, 10).

தேனுகராகம் tēṉuka-rākam, *n.* prob. *dhēnuka*+. (Mus.) A primary *rāga;* மேளகர்த் தாக்களுளொன்று. (சங். சங். 47.)

தேஜம் tējam, *n.* Remainder; மிச்சம். *Loc.*

தேஜமானியம் tējamāṉiyam, *n.* A tax payable in money; காசாயவகை. (S. I. I. viii, 151.)

தை

தைசசம் taicacam, *n.* <*taijasa*. Metal; உலோகம். (யாழ். அக.)

தைசதம் taicatam, *n.* prob. *taiṣa*. The zodiacal sign capricorn; மகராசி. (யாழ். அக.)

தைத்தியயுகம் taittiya-yukam, *n.* perh. *daitya*+. Cycle of four yugas; சதுர்யுகம். (யாழ். அக.)

தைத்தியாகோராத்திரம் taittiyākōrāttiram, *n.* <id.+*ahōrātra*. Year; வருடம். (யாழ். அக.)

தைப்புமுத்து taippu-muttu, *n.* perh. தை-+பு+. A kind of pearl; முத்துவகை. (S. I. I. ii, 34.)

தைலத்தோணி taila-t-tōṇi, *n.* <தைலம்+. A longish tub for preserving dead body in medicated oil; எண்ணெய்த்தொட்டி. தைலத் தோணி வளர்த்துமி னென்னச் சொன்னன் (கம்பரா. யுத்த. இராவணன்சோக. 61).

தைவாகரி taivākari, *n.* <*daivākari*. (யாழ். அக.) 1. Saturn; சனி. 2. Yama; யமன்.

தைவியம் taiviyam, *n.* <*daivya*. Act of God; தெய்வசெயல். (யாழ். அக.)

தொ

தொக்கயம் tokkayam, *n.* cf. இடக்கியம். Flag; கொடி. தொக்கயங்க டொக்கெனவே சூறை யிட்டு (மான்விடு. 96).

தொக்குளவன் tokkuḷavaṉ, *n.* A subsect of Kampaḷattār; கம்பளத்தாருள் ஒருவகையான். (G. Tn. D. I, 373.)

தொக்கைக்குன்றி tokkai-k-kuṉṟi, *n.* perh. தொகை+. Loss or waste in cultivation; சாதுபடி நஷ்டம். (S. I. I. v, 499.)

தொகு-தல் toku-, 6 *v. intr.* 1. To conform, agree; ஒத்தல். உடன்மூவர் சொற்றொக்க (குறள், 589, உரை). 2. To be included; to be hidden; உள்ளடங்குதல். தோன்றல் மலர்மணம் போற்றொக்கு (சி. போ. 7, 3).

தொகைமொழி tokai-moḻi, *n.* <தொகை +. (Rhet.) A figure of speech; பொருளணி வகை. (யாப். வி. 56.)

தொங்கட்டம் toṅkaṭṭam, *n.* <தொங்கு-. Pendant; தொங்கட்டான். *Loc.*

தொங்கல்நடை toṅkal-naṭai, *n.* <தொங்கல்+. Toddle; தளர்நீத நடை. தொங்கல்நடை யாண்பிள்ளைகாண் (வள்ளி. கதை. Ms.).

தொங்குகாது toṅku-kātu, *n.* <தொங்கு-+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (மாட்டுவை.)

தொசம் tocam, *n.* <*dhvaja*. Flag; கொடி. (யாழ். அக.)

தொட்டிமாளிகை toṭṭi-māḷikai, *n.* <தொட்டி+. Howdah; அம்பாரி. (தக்கயாகப். 468, உரை.)

தொட்டுக்குளி toṭṭu-k-kuḷi, *n.* <தொடு-+. Bathing in order to remove the pollution caused by touching unclean persons; அசுத்தரைத் தொடுதலால் நேருந் தீட்டுப்போக நீராடுகை. *Loc.*

தொட்டுக்கொள்துடைத்துக்கொள்ளெனல் toṭṭu-k-koḷ-tuṭaittu-k-koḷ-ḷ-eṉal, *n.* <id.+கொள்-+துடை-+. Expr. signifying bare sufficiency; பற்றியதும் பற்றதுமாதற் குறிப்பு. *Loc.*

தொட்டுண்(ணு)-தல் toṭṭuṇ-, *v. tr.* <id.+. To enjoy, as of right; உரிமையாக அனுபவித்தல். கோத்தொட்டுண்ணப் பாலதெல்லாம் . . . கோக்கொள்ளப்பெறுதே (S. S. I. ii, 521).

தொடங்கு toṭaṅku, *n.* prob. தொடக்கு-. Fetters; கால்விலங்கு. *Pond.*

தொடர் toṭar, *n.* <தொடர்-. Earthen pot for melting metals; உலோகங்களை யுருக்க உதவும் மண்பாத்திரம். தொடரிலிட்ட ரசம்போலே துடியாநிற்கும் (திவ். திருமாலை, அவ. வ்யா. பக். 4).

தொடர்ச்சி toṭarcci, *n.* <id. Denseness, closeness; செறிவு. (திவ். திருச்சந். 105, வ்யா. பக். 308.)

தொடர்நாட்கள் toṭar-nāṭkaḷ, *n.* <id.+. Running days, not excluding holidays; விடுதலை நாட்களைக் கழிக்காமற் கணக்கிடும் நாட்கள். (M. Navi. 122.)

தொடர்வல்லி toṭar-valli, *n.* <id.+. Iron chain; இரும்புச்சங்கிலித்தொடர். சயத்தொடர் வல்லியுமின்று தாம்விடுக்கும்படி மயங்க (பெரியபு. நின்றசீர். 5).

தொடாக்காஞ்சி toṭā-k-kāñci, *n.* <தொடு-+ஆ neg.+. 1. (Puṟam.) A theme describing the wife scaring away the devils which surround her wounded husband in the battlefield and fearing at the same time to touch him; போர்ப்புண்ணுற்ற தன் கணவனைப் பேய் தீண்டுதலை நீக்கிய மனைவி தானுந் தீண்டாதிருத்தலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 79.) 2. (Puṟam.) A theme describing the devils being scared away by the ghastly wounds of a warrior lying in the battlefield; தறுகண்வீரனது புண்ணினைத் தீண்டுதற்கு அஞ்சி நடுங்கிப் பேய் பேயரிதமை கூறும் புறத்துறை. (பு. வெ. 4, 19.)

தொடுகடல் toṭu-kaṭal, *n.* <id.+. Eastern ocean; கீழ்கடல். குணதிசை பொரு தொடுகடற் குணக்கும் (புறநா. 6).

தொடுதுணை toṭu-tuṇai, *n.* <id.+. Help; உதவி. (யாழ். அக.)

தொடுப்பு toṭuppu, *n.* <id. Theft; களவு. தொடுப்புண்டாய் வெண்ணெயை யென்று (திவ். பெரியாழ். 2, 3, 9, வ்யா. பக். 297).

தொடுவழக்கு toṭu-vaḻakku, *n.* <id.+. False claim; கள்ளவழக்கு. (யாழ். அக.)

தொடைநடுங்கி toṭai-naṭuṅki, *n.* <தொடை+. Extremely timid person; coward; மிக அஞ்சுபவன். *Colloq.*

தொடைப்பாடு toṭai-p-pāṭu, *n.* <தொடு-+. Appendage, as sandals, etc.; துடை பாதராட்சை முதலியன. இத் தொடைப்பாடெலாந் தீண்டலன்னெனத் தீண்டிய வந்தவோ (நீலகேசி, 527).

தொண்டி[1] toṇṭi, *n.* <தொண்டு. Maid-servant; தொண்டுசெய்பவள். (நாநார்த்த. 296.)

தொண்டி[2] toṇṭi, *n.* prob. தொள்-. Small garden; சிறுதோட்டம். *Loc.*

தொண்டு toṇṭu, *n.* An ornament; அணி வகை. பச்சைமணித் தொண்டு கட்டியே (குருகூர்ப். 6).

தொண்டுபட்டி toṇṭu-paṭṭi, *n.* <தொண்டு +. Cattle-pound; மாட்டை அடைக்குங் கொண்டி. (எக்களூர், 20.)

தொண்ணைத்தடி tonṇai-t-taṭi, *n.* Stout stick or club; பெருந்தடி. *Cm.*

தொதல் total, *n.* A confection; தித்திப்புப் பண்டவகை. (J.)

தொதவல் totaval, *n.* See தொதல். (J.)

தொப்பி toppi, *n.* Left side of a *mirutaṅkam;* மிருதங்கத்தின் இடதுபக்கம். (கலை மகள், xii, 401.)

தொம்பரம் tomparam, *n.* Cooking pot; சமையற்பானை. அந்த அரிசியைத் தொம்பரத்திற் போட்டுச் சமையல் செய்யுங்கள் (தமிழறி. 46).

தொம்பரை tomparai, *n.* cf. தொம்பறை. Granary; நெற்குதிர். தொம்பரைக ளோறுமுன்னுட் டாழ்வின்றி வைத்திடுநெற் ருன்யமதை (பஞ்ச. திரு முக. 193).

தொழிமரம் toḻi-maram, *n.* <தொளி+. Board used to smoothen the ploughed surface of a nanja field for *cĕṟṟu-k-kāl* cultivation; சேற்றுக்காலாக உழது பின் நிலத்தைச் சமஞ்செய்ய உபயோகிக்கும் பரம்பு. *Nāñ.*

தொழிற்கல்வி toḻiṟ-kalvi, *n.* <தொழில்+. Technical education; தொழிற் பயிற்சிக்குரிய கல்வி. *Mod.*

தொழிற்சொல் toḻiṟ-col, *n.* <id.+. 1. (Gram.) Verb; வினைச்சொல். 2. (Gram.) Verbal noun; தொழிற்பெயர். (யாப். வி. 536.)

தொழிற்பட்டிகை toḻiṟ-paṭṭikai, *n.* <id.+. A kind of woman's girdle; அரைப் பட்டிவகை. (S. I. I. ii, 16.)

தொழிற்படுத்து-தல் toḻiṟ-paṭuttu-, *v. tr.* <id.+. To direct or exact, as work; ஏவுதல். (சி. போ. பா. அவை. பக். 15.)

தொழிற்புலையர் toḻiṟ-pulaiyar, *n.* <id.+. One who is considered an outcaste because of his base actions; கன்மசண்டாளர். கொலைத்தொழிலினை யுடையராகிய மாக்கள் தொழிற் புலையராகுவர் (குறள், 329, மணக்.).

தொழுவை toḻuvai, *n.* prob. தொள். Pond, pool; மடு. தொழுவையம்புனலாடி (கலித். 30).

தொழுனி toḻuṉi, *n.* <தொழு-. 1. Woman fit to be worshipped; தொழுதற்குரியவள். தந்தையினைச் சுமடன் ருய்தொழுனி தான்பார்ப்பான் (இலக். வி. 753, உதாரணச். பக். 775). 2. Servant woman; பணிப்பெண்.

தொள்ளை toḷḷai, *n.* cf. தொல்லை. [T. *tolli.*] Antiquity; பழமை. தொள்ளைமாநிலமெங்கும் தருவி (இரகுவ. பக். 11).

தொளுக்கு toḷukku, *n.* Flabby person; ஊழற்சதை பிடித்தவன். *Loc.*

தொற்றம்பு toṟṟampu, *n.* <தொற்று-+. Arrow which causes only a surface wound; ஊடுருவிச் செல்லாமல் உடம்பின்மேலே படும் அம்பு. அதி தன்னிலும் தொற்றம்பன்றிக்கே மறுபாடுருவத் தைப்பதமாயிருந்தது (திவ். இயற். திருவிருத். 75, வ்யா. பக். 385).

தொற்று-தல் toṟṟu-, 5 *v. tr.* To be connected with; பற்றியிருத்தல். இங்குக்கழிக்கிற அஹங்காரம் ஸூக்ஷ்மசரீரம் விடுமளவும் இவனைத் தொற்றிக்கிடக்கும் (ரஹஸ்ய. 959).

தொற்றுத்தொடிசு toṟṟu-t-toṭicu, *n.* prob. தொற்று-+. Trifling error; சிறுபிழை. (யாழ். அக.)

தொறுநிலை toṟu-nilai, *n.* <தொறு+. Cow-shed; பசுக்கள் கட்டும் கொட்டம். எம்மூர் எல்லாச்சேரித் தொறுநிலையும் (S. I. I. vi, 167).

தொற்றுப்பல் toṟṟu-p-pal, *n.* prob. தொற்று-+. Irregular, extra tooth; அதிகப்படியாகத் தோற்றும் பல். (திவ். பெரியாழ். 1, 1, வ்யா. பக். 13.)

தொறுப்போ-தல் toṟu-p-pō-, *v. intr.* <தொறு+. To be captured in herds, as cattle; ஆனிரை கவரப்படுதல். மாடு தொறுப்போகாநிற்க (Insc.).

தொன்மை toṉmai, *n.* <தொல். Nature; தன்மை. (சங்கற்பநிராகரணம், 18.)

தொன்மொழி toṉ-moḻi, *n.* <id.+. Proverb, maxim; பழமொழி. பொற்கிரிசேர் கருங் கொடியும் பொன்னிறமா மெனச்சொன்ன தொன் மொழியும் (பதினொரும். பட்டின. திருக்கழு. 40).

தொனிக்கி toṉikki, *n.* <E. Tonic; ஆரோக்கியமளிக்கும் மருந்து. (J.)

தொனுவை-த்தல் toṉu-vai-, *v. intr.* prob. *dhvani*+. To sound; தொனித்தல். (யாழ். அக.)

தோ

தோகதவதி tōkatavati, *n.* <*dōhadavatī.* Pregnant woman; கர்ப்பிணி. (யாழ். அக.)

தோகைநோய் tōkai-nōy, *n.* A disease of cattle; மாட்டுநோய்வகை. (மாட்டுவை.)

தோட்டக்குடிசை tōṭṭa-k-kuṭicai, *n.* <தோட்டம்+. Summer-house; சவுக்கண்டி. *Pond.*

தோட்டக்கூறு tōṭṭa-k-kūṟu, *n.* <id.+. Garden land; தோட்டத்துக்குத் தகுதியான நிலம். (S. I. I. v, 327.)

தோட்டந்தூரம் tōṭṭan-tūram, *n.* prob. id.+. Deafness; செவிடு. *Tinn.*

தோட்புடைக்கொள்(ளு)-தல் tōṭ-puṭai-k-koḷ-, *v. intr.* <தோள்+. To strike the shoulder, as a combatant in challenging; எதிர்த்து நிற்றம் குறியாகத் தோள்தட்டுதல். அல்லாக் காற் றோட்புடைக்கொள்ளா வெழும் (நாலடி, 312).

தோடு tōṭu, *n.* 1. Skin; தோல். தோட்டை நீ பூணியோ (நீலகேசி, 273). 2. Leaf; இலை. (புறநா. 120.)

தோடை tōṭai, *n.* A disease of cattle; மாட்டுநோய்வகை. (மாட்டுவை.)

தோண்டி tōṇṭi, *n.* A liquid measure of 64 seers; 64 சேர்கொண்ட முகத்தலளவை. *Loc.*

தோணிக்கடமை tōṇi-k-kaṭamai, *n.* <தோணி+. A tax on boats; தோணிக்கு வாங்கும் வரி. (Insc.)

தோணியம் tōṇiyam, *n.* Arrow; அம்பு. (யாழ். அக.)

தோதலி-த்தல் tōtali-, *11 v. intr.* To be perverse; முரணுதல். மெத்த மெத்தத் தோதலித் தப்பேசுஞ் சுணைகெட்ட மூளி (பஞ்ச. திருமுக. 1509).

தோப்பணம் tōppaṇam, *n.* cf. தொப்பணம். A form of obeisance to Gaṇēša; தோப்பணம். (திருப்புகழ், Vol. I, p. 4, கீழ்க்குறிப்பு.)

தோபா tōpā, *n.* Tribute; மேலாசனுக்குச் சிற்றரசன் செலுத்துங் காணிக்கை. (P. T. L.)

தோரணக்காணிக்கை tōraṇa-k-kāṇikkai, *n.* <தோரணம்+. A tax; வரிவகை. (M. E. R. 1921-22, p. 109.)

தோல்வியாதி tōl-viyāti, *n.* <தோல்+. Skin disease; சருமத்தைப்பற்றிய நோய். (M. L.)

தோலுரி-த்தல் tōl-uri-, *v. intr.* <id.+. To cast off slough, as a snake; பாம்பு சட்டை கழற்றுதல். (சீவக. 1546.)

தோலொட்டு tōl-oṭṭu, *n.* perh. id.+. A tax; வரிவகை. (S. I. I. viii, 43.)

தோழ்ப்பாடி tōḻppāṭi, *n.* cf. தோப்பாடி. Wicked person; போக்கிரி. தார்த்தத்தனம் பேசுந் தோழ்ப்பாடி வித்தைதில் (தெய்வச். விறலிவி. 476).

தோளாச்செவியர் tōḷā-c-ceviyar, *n.* perh. தோள்-+ஆ neg.+. A sect of people; ஒருவகைச் சாதியினர். (S. I. I. iii, 268.)

தோன்று-தல் tōṉṟu-, *5 v. intr.* To be clear, explicit; விளங்குதல். மதுரகவி தோன்றக் காட்டுந் தொல்வழியே நல்வழி (ரஹஸ்ய. 20).

தோஷிக்கொக்கு tōṣi-k-kokku, *n.* perh. *dōṣin*+. A kind of crane; கொக்குவகை. (யாழ். அக.)

ந

நகதா nakatā, *n.* perh. Mhr. *nagadā.* Gold tinsel covering lac bangles; அரக்குவளைக்கு மேலாக ஒட்டும் பொற்றகடு. *Loc.*

நகதிகுமாவ்தா nakati-kumāstā, *n.* <நகதி+. Treasury clerk; கஜானாவிலுள்ள குமாஸ்தா. (P. T. L.)

நகரக்கல் nakara-k-kal, *n.* <நகரம்+. Stone kept, as a standard of weight, in important cities; சில முக்கிய நகரங்களில் நேரான எடையைக் குறிப்பதற்கு வைத்திருக்குங் கல். (S. I. I. v, 102.)

நகரங்களிலார் nakaraṅkaḷilār, *n.* <id. Residents of a town; நகரவாசிகள். (S. I. I. iii, 402.)

நகரத்தான் nakarattāṉ, *n.* <id. Merchant; வணிகன். (S. I. I. iii, 268.)

நகரத்தோர் nakarattōr, *n.* <id. Council of the citizens, in ancient times; முற்காலத்திலிருந்த நகரமாந்தர் சபை. (Insc.)

நகரப்பாட்டு nakara-p-pāṭṭu, *n.* prob. id.+. The war song of the French; பிராஞ்சுக் காரர்களின் சண்டைப்பாட்டு. *Pond.*

நகரவனுச்சை nakara-v-aṉuccai, *n.* <id.+. Order of the council of citizens; நகரசபையார் உத்திரவு. நகரவனுச்சையால் வைத்துக் கொடுத்தோம் (S. I. I. iii, 223).

நகுடம் nakuṭam, *n.* Indian winter cherry; அமுக்கிரா. (இராசவைத். பக். 67.)

நகுவல் nakuval, *n.* <நகு-. Pleasantry; பரிகாசம். நானெனதென்னு நகுவ தீர (பாடு. 105, பாம்பாட்டு).

நகைக்கண் nakai-k-kaṇ, *n.* <நகை+. A comic show with grotesque actions; நானாவிகாரபக் காட்சி. (பார. பாவ. பக். 72.)

நங்கி naṅki, *n.* cf. கஞ்ஞ. That side of a *mirutaṅkam* to which *mārccaṉai* is applied; வலந்தலை. (கலிமகள், xii, 400.)

நச்சுத்தேள் naccu-t-tēḷ, *n.* <நஞ்சு+. A kind of scorpion; தேள்வகை. (அபி. சிந்.)

நச்சுவாய்ப்பல்லன் naccu-vāy-p-pallaṉ, *n.* <id.+வாய்+. One whose curses are believed to take effect; தீமைவிளைக்குஞ் சொல் லுள்ளவன். *நச்சுவாய்ப்பல்லர் நடுக்கேடு செய்தவர்கள்* (சித். காய. 5).

நச்வரம் nacvaram, *n.* <*našvara*. Impermanence; நிலையின்மை. *நச்வரமுந் தானு மில்லை* (கனம் கிருஷ்ணையர், 99).

நசிகத்து nacikattu, *n.* <Arab. *nasīhat*. Reprimand; கண்டிக்கை. (P. T. L.)

நஞ்சையன்வெட்டு nañcaiyaṉ-veṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 144.)

நஞ்சொட்டி nañcoṭṭi, *n.* A kind of shrub; பூடுவகை. (குருகூர்ப். 45.)

நஞ்ஞு nañṉu, *n.* See நங்கி. *Loc.*

நட்டம் naṭṭam, *n.* <*naṣṭa*. One of six *pirattiyayam;* பிரத்தியயம் ஆறனுள் ஒன்று. (யாப். வி. 471.)

நட்டவக்காணி naṭṭava-k-kāṇi, *n.* <நட்டவம்+. Grant for *naṭṭuvam* service; நட்டுவத் தீற்து விடப்பட்ட மானியம். (S. I. I. v, 232.)

நட்டுப்பாழ் naṭṭu-p-pāḻ, *n.* <நடு-+. Field in which the crop has become withered after transplantation; நாற்றுநட்டு விளையாமற் போன நிலம். (S. I. I. vii, 279.)

நட்டுவத்துரவு naṭṭuva-t-turavu, *n.* <நட்டுவன்+. The profession of training girls in dancing; நட்டுவத் தொழில். (M. E. R. 390 of 1916.)

நட்டெலும்பு naṭṭelumpu, *n.* <நடு+எலும்பு. [K. *naṭṭeluvu*.] Backbone; முது கெலும்பு. *Tinn.*

நட்டேந்துகலை naṭṭēntu-kalai, *n.* <*naṣṭēndukalā*. The first *titi* of the bright fortnight; பூர்வபட்சத்துப் பிரதமை. (யாழ். அக.)

நட்பு naṭpu, *n.* <நள்-. Sexual union; புணர்ச்சி. *காமமருடலு நட்புந் தணப்பும்* (பரிபா. 20, 108).

நட்புத்திட்பு naṭpu-t-tiṭpu, *n.* cf. நற்புத் திற்பு. Nature of the soil, as good or bad; நிலத்தின் தாதரம். *Loc.*

நடந்துவிடு-தல் naṭantu-viṭu-, *v. intr.* <நட-+. 1. To be accomplished or completed; காரியம் முடிந்துபோதல். *Loc.* 2. To run away; ஓடிப்போதல். *அன்னநடை மின்னு மறி யாமல் முன்னே நடந்து விட்டான்* (தெய்வச். விறலி விடு. 102).

நடபைரவி naṭa-pairavi, *n.* prob. நடம்+. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சங். 47.)

நடமுருடு naṭa-muruṭu, *n.* prob. id.+. A musical instrument, played as an accompaniment to dance; நடனத்துக்குரிய முருடென்னும் வாத்தியம். (சிலப். பிரபந். பக். 237.)

நடவல் naṭaval, *n.* <நடு-. Transplanted crop; நட்டபயிர். *நடவலிறைத்ததற்கும் வரிசையில் மூன்றிலொன்று* (Pudu. Insc. 423).

நடனநடை naṭaṉa-naṭai, *n.* <நடனம்+. A kind of ambling gait; அசைந்தாடி நடக்கும் நடை. *Pond.*

நடனன் naṭaṉaṉ, *n.* <id. See நடிகன். *நடனன் பால்குறநடிப்பது* (இரகு. குசனயோத்தி. 98).

நடிகன் naṭikaṉ, *n.* <*naṭika*. Actor; நாடகமேடையில் நடிப்பவன். *Mod.*

நடிகை naṭikai, *n.* <*naṭikā*. Actress; நாடகமேடையில் நடிப்பவள். *Mod.*

நடு-த்தல் naṭu-, *11 v. intr.* To tremble; நடுங்குதல். *நடுத்திருக்கும்* (சங்கர. அந்தாதி, 20).

நடுக்கல்வாந்தி naṭukkal-vānti, *n.* <நடுக்கல்+. A disease; நோய்வகை. (பாலவா. 167.)

நடுக்கேடு naṭu-k-kēṭu, *n.* <நடு+. Partiality; பட்சபாதம். *நச்சுவாய்ப்பல்லர் நடுக்கேடு செய்த வர்கள்* (சித். காய. 5).

நடுநடு-த்தல் naṭu-naṭu-, *v. intr.* Redupl. of நடு-. To tremble; நடுங்குதல். *காமவேற் கண்ணு ணடுநடுப்ப வாரலோ* (திணைமாலை. 25).

நடுவிரு-த்தல் naṭu-v-iru-, *v. intr.* <நடு+. To arbitrate; மத்தியஸ்தஞ் செய்தல். (S. I. I. iii, 403.)

நடுவில்மண்டலம் naṭuvil-maṇṭalam, *n.* <id.+. The tract of land known as *naṭunāṭu*, or *makatai-maṇṭalam;* நடுநாடு. (S. I. I. vii, 388.)

நடுவிற்கோயில் naṭuviṟ-kōyil, *n.* <id.+. Central shrine; கோயிற் கட்டடத்துள் மத்தியி லுள்ள ஆலயம். (S. I. I. iii, 84.)

நடுவிற்றிருமுற்றம் naṭuviṟṟirumuṟṟam, *n.* <id.+. See நடுவிற்கோயில். (M. E. R. 1926-7, p. 96.)

நடுவுநிலைமை naṭuvu-nilaimai, *n.* <நடுவு +. Quietist sentiment, one of *nava-racam*, q.v.; நவரசங்களுள் ஒன்றான சாந்தம். (தொல். பொ. 245, இளம்.)

நடுவெழுத்தலங்காரம் naṭu-v-eḻuttalaṅkāram, *n.* <நடுவெழுத்து +. (Rhet.) A variety of *cittra-kavi*; சித்திரகவிவகை.

நடுவெழுது-தல் naṭu-v-eḻutu-, *v. tr.* <நடு +. To record impartially; பட்சபாத மின்றி எழுதுதல். நன்றுந் தீதுந் தெரிய நடுவெழுதுவார் கணக்கர் (சித். நாய. 2).

நடை naṭai, *n.* <நட-. Pandal erected throughout the route of a procession; நடைப் பந்தல். நடைநிழ லவைகெட (இரகு. திக்குவி. 82).

நடைகேளிக்கை naṭai-kēḷikkai, *n.* <நடை +. Performance of a dancing-girl while moving along with a procession; ஊர் வலத்தில் நடந்துகொண்டே செய்யும் நர்த்தனம். (கோயிலொ. 95.)

நடைச்சக்கரவத்து naṭai-c-cakkara-vattu, *n.* <id.+. Grandest style of walking; உத்தமமான நடை. (திவ். பெரியதிரு. 8, 2, 6, வ்யா. பக். 1433.)

நடைத்தூண்டில் naṭai-t-tūṇṭil, *n.* <id.+. An instrument of torture for prolonging the agonies of a victim; சித்திரவதைக்குரிய கருவிவகை. (நீலகேசி, 541, உரை.)

நடைப்பிணி naṭai-p-piṇi, *n.* <id.+. Long-persisting illness; chronic disease; நாட்பட்ட வியாதி. *Loc.*

நடையாடு-தல் naṭai-y-āṭu-, *v. intr.* <id.+. To abound; to be in abundance; மிகுந்திருத்தல். நிர்விகார சித்தையும் . . . . . ஸந் தோஷமும் நடையாடிற்றுகில் (ரஹஸ்ய. 478).

நடையிடு-தல் naṭai-y-iṭu-, *v. intr.* <id.+. To walk; நடத்தல். அவ்விடத்தில் நில்லாதே கடகே நடையிட்டு நான் காப்பிடும்படி வாராய் (திவ். பெரியாழ். 2, 8, 9, வ்யா. பக். 440).

நடைவழிப்பாலம் naṭai-vaḻi-p-pālam, *n.* <id.+வழி+. Foot-bridge; மனிதர் நடந்து செல்வதற்குரிய பாலம். (C. E. M.)

நடைவழு naṭai-vaḻu, *n.* <id.+. (Poet.) A defect in versification; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. 525.)

நண்டுக்கலை naṇṭukkalai, *n.* A kind of plantain; வாழைவகை. *Loc.*

நத்தவரி natta-vari, *n.* prob. நத்தம் +. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iv, 122.)

நத்து nattu, *n.* <நத்து-. Desire; விருப்பம். நான் நத்தாக (திருப்புகழ்த். 84).

நதிக்குதிரை nati-k-kutirai, *n.* <நதி +. Hippopotamus; நீர்யானை. *Pond.*

நந்தபாலம் nantapālam, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

நந்தவனப்புறம் nantavaṉa-p-puṟam, *n.* <நந்தவனம் +. Land for a flower-garden of a temple; நந்தவனத்திற்கு விடப்பட்ட நிலம். (S. I. I. iii, 302.)

நந்தன் nantaṉ, *n.* 1. An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 58.) 2. A kind of plantain; வாழைவகை. *Loc.*

நந்தனம் nantaṉam, *n.* <*nandana*. Pleasure; சந்தோஷம். நந்தன முறுவதிந்த நகரம் (விநாயகபு. திருந. 128).

நந்திபெம்மான் nanti-pemmāṉ, *n.* <நந்தி +. God Śiva; சிவபிரான். (நாமதீப. 1, 1.)

நப்பிளித்து-தல் nappiḷittu-, *v. intr.* <நப்பு + இளி-. To speak gaily; சிரித்து விநோத மாகப் பேசுதல். (திவ். நாய்ச். 14, 7, உரை.)

நபுஞ்சகவேதம் napuñcaka-vētam, *n.* <*napuṃsaka-vēda*. (Jaina.) The fault which consists in the desire of a neuter for the companionship of another neuter; ஓர் அலி மற்றோர் அலியின் நட்பை விரும்புவதான தோஷம். (சிவக. 3076, உரை.)

நம்பிக்கைக்கேடு nampikkai-k-kēṭu, *n.* <நம்பிக்கை +. Untrustworthiness; நம்பிக்கை யின்மை. *Pond.*

நம்பிக்கைப்பட்டயம் nampikkai-p-paṭṭayam, *n.* <id.+. Deed assuring the performance of an act; உறுதிப்பத்திரம். (M. E. R. 310 of 1916-B.)

நம்பிக்கைப்பத்திரம் nampikkai-p-pattiram, *n.* <id.+. Credentials, as of an ambassador; ஒருவன் மெய்யான தூதுவனெனக் காட்டும் உறுதிச்சீட்டு. *Pond.*

நம்பிக்கைப்பிசகு nampikkai-p-picaku, *n.* <id.+. See நம்பிக்கைக்கேடு. *Pond.*

நம்பிக்கைமோசம் nampikkai-mōcam, *n.* <id.+. Breach of trust; நம்பிக்கைத் துரோகம். *Loc.*

நம்பு nampu, *n.* <நம்பி. Right of conducting *pūjā* in a temple; கோயிலிற் பூஜைசெய்யுமுரிமை. *அசற்பங்கில் நம்பும்* (S. I. I. v, 327).

நம்பூரி nampūri, *n.* Nambūdiri; மலையாளப் பிராமணன். *கண்ணகியும் . . . நம்பூரிமார் வீதியிலே நலமா பெழுந்திருந்தாள்* (கோவ. க. 112).

நம்மள் nammaḷ, *pron.* Corr. of நம்மவர்கள். *உண்மை நம்மள் ஜாதிக் குதவாதே* (பஞ்ச. திருமுக. 1267).

நமகசமகம் namakacamakam, *n.* A Vēdic mantra; ஒரு வேதமந்திரம். *நாதனே மாதேவனென்பதற் கோருத்ர நமகசமகஞ் சாட்சியாம்* (அறப். சத. 52.)

நமடு namaṭu, *n.* cf. நமுடு. Louse; சிறுபேன். (அபி. சிந்.)

நமனிகை namaṉikai, *n.* prob. *snapana.* Sacred bath; திருமஞ்சனம். (S. I. I. iii, 270.)

நமஸ்காரபாகுடம் namaskāra-pākuṭam, *n.* <நமஸ்காரம்+. (Jaina.) Book of hymns; தோத்திரநூல். *நமஸ்காரபாகுடத்துள் . . . அத்திணைப் பாகுபாட்டாலும் நமஸ்காரஞ்செய்து* (நீலகேசி, 1, உரை).

நமஸ்காரமண்டபம் namaskāra-maṇṭapam, *n.* <id.+. A *maṇṭapam* in front of the central shrine of a temple, for devotees to perform *namaskāram;* நமஸ்காரஞ் செய்தற்காக அமைத்த மண்டபம். (T. A. S. vi, 63.)

நமிட்டு-தல் namiṭṭu-, *5 v. tr. & intr.* cf. நிமிட்டு-. To pinch; நுழட்டுதல். *Pond.*

நமுடு namuṭu, *n.* perh. நமுட்டு-. Knot in silk-fibre; பட்டுநூலில் விழும் முடிச்சு. *Pond.*

நமை-த்தல் namai-, *11 v. tr.* prob. நியமி-. To command; கட்டளையிடுதல். *பொறிபுலன்களைந்தும் நமையாமல்* (திவ். இயற். 1, 32).

நயதி nayati, *n.* prob. *nīti.* Justice; நீதி. *சரிதையினயதியின்* (இரகு. தசரத. சா. 3).

நயப்பெத்தன் nayappettaṉ, *n.* <நயப்பு+எத்தன். Cheat; மோசக்காரன். *Pond.*

நயபோசனம் naya-pōcaṉam, *n.* <நயம்+. Offering sumptuous meals, one of seven *puṇṇiyam;* புண்ணியம் ஏழனுள் ஒன்றான நல்லுணவளிக்கை. (யாழ். அக.)

நயம் nayam, *n.* <*naya.* (Mus.) A mode of singing in which both *kaṉam* and *tēcikam* are mixed; கனமும் தேசிகமும் கலந்து பாடும்வகை. (சனம்கிருஷ்ணையர், 1.)

நயராகம் naya-rākam, *n.* <நயம்+. (Mus.) A class of *rāgas;* இராகத்தில் ஒருவகை.

நயனக்கத்தி nayaṉa-k-katti, *n.* prob. *nayana*+. A surgical instrument; சத்திரவைத்தியத்தில் உபயோகிக்கும் ஆயுதவகை. (தஞ். சர. iii, 40.)

நயனப்படலம் nayaṉa-p-paṭalam, *n.* <id.+. Cataract of the eye; கண்ணை மறைக்கும் நோய்வகை. *Pond.*

நரகரம் narakaram, *n.* prob. *naraka.* The infernal region; நரகலோகம். (சிவரக. கீர்த்தி. 29.)

நரகாவஸ்தை narakāvastai, *n.* <id.+ *avasthā.* Hellish torture; நரகவேதனை. *Colloq.*

நரந்தை narantai, *n.* Bitter orange; நாரத்தை. (இராசவைத். 141.)

நரவிளங்குதீபம் nara-viḷaṅku-tīpam, *n.* <நரன்+விளக்கு+. A kind of lamp for waving before the deity in a temple; புருஷாமிருக தீபம். (பாத. ஒழிபி. 41.)

நரி-த்தல் nari-, *11 v. intr.* To be perplexed; பிரமித்தல். *Pond.*

நரிக்கெளிறு nari-k-keḷiṟu, *n.* perh. நரி+. A kind of fish; மீன்வகை. *Tinn.*

நரித்தொம்பன் nari-t-tompaṉ, *n.* <id.+. A person belonging to the Nari-k-kuṟava caste; நரிக்குறவன். *Loc.*

நரிமிரட்டி nari-miraṭṭi, *n.* cf. நரிமருட்டி. Rattlewort; கிலுகிலுப்பை. (பாலவா. 50.)

நரிமுகத்தில்விழி-த்தல் nari-mukattil-viḻi-, *v. intr.* <நரி+முகம்+. To be lucky; அதிருஷ்டமடைதல். (மதி. க. ii, 127.)

நல்லகாக்கை nalla-kākkai, *n.* <நல்ல+. Common crow; காக்கைவகை. (M. M. 149.)

நல்லது nallatu, *n.* <நன்-மை. Virtue; அறம். *நல்லது வெஃகி* (பரிபா. 10, 88).

நல்லவன் nallavaṉ, *n.* <id. Caste man, dist. fr. *tiṇṭāṭavaṉ;* தீண்டாச்சாதி அல்லாதவன். *Mod.*

நல்லாடு nal-l-āṭu, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. ii, 509.)

நல்லிசம் nallicam, *n.* Purple wild indigo; கொள்ளுக்காய்வேளை. (சித். அக.)

நல்லுளத்தோர்தலைப்பாடு nal-l-uḷa-t-tōr-talai-p-pāṭu, *n.* <நன்-மை+உளம்+. (Buddh.) Right concentration; பழுதற்ற சமாதி. (மணி. 30, 179, உரை.)

நல்லூற்றம் nal-l-ūṟṟam, *n.* <id.+. (Buddh.) Right intention; பழுதில்லாத சங்கற்பம். (மணி. 30, 179, உரை.)

நல்லெருமை nal-l-erumai, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (I. M. P. Cg. 689.)

நல்வழிக்காலன் nal-vaḻi-k-kālaṉ, *n.* <id.+வழி+. A person who brings luck; அதிர்ஷ்டக்காலன். (ஈடு, 7, 9, 9, ஜீ.)

நல்வாய்செய்-தல் nal-vāy-cey-, *v. tr.* <id.+வாய்+. To bless; ஆசிகூறுதல். (கூர்மபு. 399, 30.)

நல்வாய்மை nal-vāymai, *n.* <id.+. (Buddh.) Right speech; பழுதில்லாத வார்த்தை. (மணி. 30, 179, உரை.)

நல்வாழ்க்கை nal-vāḻkkai, *n.* <id.+. (Buddh.) Right living; பழுதற்ற வாழ்வு. (மணி. 30, 179, உரை.)

நல்வெள்ளங்கு nal-veḷḷaṅku, *n.* <id.+. Bastard rosewood; காட்டுப்பச்சிலை. (L.)

நலக்கு-தல் nalakku-, *5 v. intr.* prob. நலம். To do good; நன்மைபயத்தல். உயிர்க்குயிராய் நலக்கு மிறை (திருவானைக். புராணவர. 41).

நலம் nalam, *n.* <நன்-மை. Virtue; அறம். நலமுழு தளிஇய புகரறு காட்சி (பரிபா. 1, 45).

நலம்புனைந்துரைத்தல் nalam-puṉain-turaittal, *n.* <நலம்+. (Akap.) Theme praising the beauty of one's lady-love; நலம்பாராட்டல். (குறள், 112, அதி.)

நலுக்கம் nalukkam, *n.* <நலுங்கு-. Pressure; நலிவு. கர்ப்பத்திலிருக்கிற பிள்ளைகளுக்கு நலுக்கம் வாராதபடி (திவ். பெரியாழ். 3, 2, 8, வ்யா. பக். 550).

நலுங்கு-தல் naluṅku-, *5 v. intr.* cf. நலங்கு-. 1. To slip off; நெகிழ்தல். கலைகள் அவிழ்ந்தவிழ்ந்து நலுங்க (கனம்கிருஷ்ணையர், 107). 2. To become lean; மெலிதல். தேகம் . . . நலுங்க (கனம்கிருஷ்ணையர், 107). 3. To be distressed; நலிவுறுதல். வயிற்றிலிருந்த காலம் நலுங்காமல் நோக்கினவள் (திவ். பெரியாழ். 3, 2, 8, வ்யா. பக். 552).

நவகிருத்தியம் nava-kiruttiyam, *n.* <*nava*+. Discovery; புதிதாய்க்கண்டது. *Pond.*

நவதாலி nava-tāli, *n.* <*navan*+. The *tāli* tied round the neck of girls, on the occasion of *viḷakkiṭu-kalyāṇam*, in propitiation of *nava-k-kirakam*; நவக்கிரகசாந்தியாக விளக்கீடு கல்யாணத்தில் சிறுமிக்குக் கட்டும் ஒருவகைத்தாலி. *Loc.*

நவநிதி nava-niti, *n.* <id.+. (Jaina.) The nine treasures, viz., *vaṇṭōkai, māṉōkai, piṅkalikai, patumai, caṅkai, vēcaṅkai, kāḷai, makākāḷai, carvarattiṉam*; வண்டோகை மாஞ்கை பிங்களிகை பதுமை சங்கை வேசங்கை காளை மகாகாளை சர்வரத்தினம் என்னும் நிதிகள். (சிவசம். Ms.)

நவநீதம் navanītam, *n.* (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களுளொன்று. (சங். சங். 47.)

நவமை navamai, *n.* <நவை. Defect, fault; குற்றம். நவமை நீங்கிய கற்றவன் (கம்பரா. அகத். 31).

நவர் navar, *n.* Wetness; ஈரம். நவராயிருக்கிறது. *Loc.*

நவளாலி navaṉāli, *n.* Corr. of நவதாலி. *Loc.*

நவார்ப்பட்டை navār-p-paṭṭai, *n.* <Persn. *nawār*+. Multi-coloured tape; பல நிறமான பட்டை. (R.)

நவிர்[1] navir, *n.* See நவமை. நவிறெறி நலத் திளடி (இரகு. குறைகூ. 4).

நவிர்[2]-தல் navir-, *4 v. intr.* To be torn; பிறுதல். நுண்ணவி றறுவை (சிவக. 2010).

நவிரெழுசங்கு navir-eḻu-caṅku, *n.* <நவிர்+எழு-+. Conch with thorn-like points; முட்சங்கு. (சங். அக.)

நவிரை navirai, *n.* cf. நவரை. A kind of paddy; நெல்வகை. (S. I. I. vii, 51.)

நவை-த்தல் navai-, *11 v. tr.* To dispossess, take away; அபகரித்தல். பலகள்வர் நவையாரால் (நீலகேசி, 273).

நளிஞபதி naḷiṉāpati, *n.* <*nalinā*+. Viṣṇu; திருமால். (பாரத. ஐந்தாம். 14.)

நற்கடைப்பிடி naṟ-kaṭai-p-piṭi, *n.* <நன்-மை+. (Buddh.) Ripe-mindedness; பழுதற்ற சிந்தனை. (மணி. 30, 179, உரை.)

நற்காசு naṟ-kācu, *n.* <id.+. Current coin; செல்லுங்காசு. அன்றுடி நற்காசினால் (Pudu. Insc. 319).

நற்காட்சி naṟ-kāṭci, *n.* <id.+. (Buddh.) Right view; பழுதில்லாத கருத்து. (மணி. 30, 179, உரை.)

நற்காலம் naṟ-kālam, *n.* <id.+. 1. Prosperous time; சுபிட்சகாலம். நற்கால வற்காலமெல்லாம் (S. I. I. viii, 8). 2. (Jaina.) One of six divisions of time; காலவகை ஆறனு ளொன்று. (யாப். வி. 532.)

நற்கிடா naṟ-kiṭā, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (M. E. R. 1913, p. 22.)

நற்சீவன் naṟ-cīvaṉ, *n.* <id.+. Life-breath; பிராணவாயு. என்னுடைய நற்சீவனைத திருவாபீகமலத்தன்றே வென்கிறார் (திவ். அமலனாதி. 3, வ்யா.).

நற்செய்கை naṟ-ceykai, *n.* <id.+. (Buddh.) Right action; பழுதற்ற செய்கை. (மணி. 30, 179, உரை.)

நற்பசு naṟ-pacu, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (An. Dec. 344.)

நற்பவழம் naṟ-pavaḻam, *n.* <id.+. Genuine coral; சாதிப்பவழம். *Loc.*

நற்புடை naṟ-puṭai, *n.* <id.+. Good quality; நல்ல தன்மை. (நாலடி, 212.)

நற்றீக்காலம் naṟṟī-k-kālam, *n.* <id.+. தீ+. (Jaina.) One of six divisions of time; காலவகை ஆறனு ளொன்று. (யாப். வி. 532.)

நறுக்காய் naṟukkāy, *adv.* prob. நறுக்கு-. Properly; நேர்மையாய். நறுக்காய் வாங்கு. *Loc.*

நறுக்குமீசை naṟukku-mīcai, *n.* <நறுக்கு+. Moustache trimmed in a particular way; மீசைவகை. *Colloq.*

நறுக்கெனல் naṟukkeṉal, *n.* Expr. of quickness; விரைவுக்குறிப்பு. நறுக்கென்று வேலையை முடித்தான்.

நறுநாட்டியம் naṟunāṭṭiyam, *n.* Fastidiousness; நொறுநாட்டியம். *Loc.*

நறும்பண்ணை naṟum-paṇṇai, *n.* <நறுமை+. A kind of greens, *Cclosia odosatta;* கோழிக் கீரைவகை. *Pond.*

நறும்பூ naṟum-pū, *n.* <id.+. Fresh flower; நாண்மலர். (S. I. I. vii, 318.)

நறூஸ் naṟūs, *n.* A kind of pomegranate; மாதுளைவகை. *Loc.*

நன்கு naṉku, *n.* <நன்-மை. That which is good; இதம். இதற்கு நன்குவேண்டுவார் (S. I. I. viii, 354).

நன்குமதிப்பு naṉku-matippu, *n.* <நன்கு+. Esteem; கௌரவம். *Loc.*

நன்மச்சுனன் naṉ-maccuṉaṉ, *n.* <நன்மை+. Son of one's maternal uncle; நல்லம்மான் புதல்வன். (S. I. I. ii, 439.)

நன்மதிப்பு naṉ-matippu, *n.* <id.+. See நன்குமதிப்பு. *Loc.*

நன்முயற்சி naṉ-muyaṟci, *n.* <id.+. (Buddh.) Right effort; பழுதற்ற முயற்சி. (மணி. 30, 179, உரை.)

நன்றிநடு naṉṟi-naṭu, *n.* <நன்றி+. Equity; justice; நியாய முறை. நாயன்மாரே கேளும் நன்றிநடு வீலையோ (தெய்வச். விறலிவிடு. 484).

நன்னற்காலம் naṉṉaṟ-kālam, *n.* <நன்-மை+நல்+. (Jaina.) One of six divisions of time; காலவகை ஆறனு ளொன்று. (யாப். வி. 532.)

நனவாரித்தாக்கம் naṉavārittākkam, *n.* A disease of cattle; மாட்டுநோய்வகை. (மாட்டுவை. 80.)

நஷ்டஈடு naṣṭa-īṭu, *n.* <நஷ்டம்+. See நஷ்டபரிகாரம். *Loc.*

நஷ்டபரிகாரம் naṣṭa-parikāram, *n.* <id.+. Compensation for loss; ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடுசெய்கை. *Pond.*

நக்ஷத்திரத்தியாச்சியம் nakṣattira-t-tiyāccam, *n.* <*nakṣatra*+. Inauspicious period of time in the duration of a *nakṣatra;* நக்ஷத்தீரகாலத்துள் அசுபவேளை. (பஞ்.)

நக்ஷத்திரபதம் nakṣattira-patam, *n.* <id.+. The region of the stars; நட்சத்திரபதவி. சந்திரபதத்துக்கு மேலே ஆறுயிரக் காதமாறு உண்டிறே நக்ஷத்திரபதம் (திவ். திருநெடு. 5, வ்யா.).

நா

நாக்கடைப்பன் nākkaṭaippaṉ, *n.* <நாக்கு+. A disease of cattle; மாட்டுநோய் வகை. (மாட்டுவை.)

நாக்கரணை nākkaraṇai, *n.* <id.+. A disease of the tongue; நாக்குநோய்வகை. (பரராச. i, 226.)

நாக்குமேற்ரளி nākku-mēṟṟāḷi, *n.* <id.+. A disease of the tongue; நாக்குநோய்வகை. (பரராச. i, 226.)

நாக்கொட்டி nākkoṭṭi, *n.* <நாக்கு+ஒட்டு-. A disease of the tongue; நாக்கு நோய்வகை. (பரராச. i, 226.)

நாகசுரவராளி nāka-cura-varāḷi, *n.* <*nāga*+*svara*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

நாகத்தல்லி nāka-t-talli, *n.* prob. id.+. A kind of fragrant substance; வாசனைப்பண்டவகை. (பெருங். மகத. 17, 132.)

நாகநாதம் nāka-nātam, *n.* <id.+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

நாகநெய் nāka-ney, *n.* A medicinal oil; மருந்தெண்ணெய்வகை. (இராசவைத். 132.)

நாகப்பன்வெட்டு nākappaṉ-veṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 143.)

நாகபணம் nāka-paṇam, *n.* <நாகம்+. An ornament; அணிவகை. (S. I. I. vi, 180.)

நாகபாசம் nāka-pācam, *n.* <id.+. *Loc.* 1. A kind of armlet worn by women; நாக வோத்து. 2. W-shaped hook; இரும்புக்கொக்கி வகை.

நாகபாசமுடிச்சு nāka-pāca-muṭiccu, *n.* <நாகபாசம்+. A kind of knot; முடிச்சுவகை. (சைவபூ. சந். 218.)

நாகம் nākam, *n.* <*nāka.* Joy; happiness; சுகம். நாகமேந்து மாகமாக (திவ். திருச்சந்த. 6, வ்யா.).

நாகானந்தி nākāṉanti, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

நாகுணம் nākuṇam, *n.* cf. நாகணம். The aromatic substance, *nākaṇam;* நாகணம் என்ற வாசனைப்பண்டம். (பெருங். மகத. 17, 135.)

நாகை nākai, *n.* <நாகம். Snake; பாம்பு. இசைதரு நாகைதே டெண்ணமாங் கில்லையோ (சரபேந்திரபூபாலகுறவஞ்சி, 71, 5).

நாங்கணைச்சான் nāṅkaṇaiccāṉ, *n.* Bush myna; நாகணவாய்ப்புள். (கன்னியா. சிந்து.)

நாசிகாபூஷணி nācikāpūṣaṇi, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

நாசித்தூள் nāci-t-tūḷ, *n.* <நாசி+. Snuff; முக்குப்பொடி. மிளகுப்பொடி நாசித்தூளாய் (சரவண. பணவிடு. 123).

நாசிவிடம் nāci-viṭam, *n.* <id.+. A disease; நோய்வகை. எரிகுணநாசிவிடமே (திருப்பு. 260, புதுப்.).

நாட்சரக்கு nāṭ-carakku, *n.* <நாள்+. Drugs bought on an auspicious day before child-birth for use as medicine for a woman in confinement; ஸ்திரீயின் பேறுகாலத்தை உத்தேசித்து முன்னடியே நல்ல நாளில் வாங்கும் மருந்துச் சாமான்கள். (W.)

நாட்டு nāṭṭu, *n.* <காட்டு-. The cross-brick, in a layer of bricks; சுவரொழப்புகையிற் குறுக்கே வைக்குங் கல். *Loc.*

நாட்டுக்காணிக்கை nāṭṭu-k-kāṇikkai, *n.* <நாடு+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. vi, 2.)

நாட்டுக்காமிண்டன் nāṭṭu-k-kāmiṇṭaṉ, *n.* <id.+. A title of village chieftains; கிராமத் தலைவர்களின் பட்டப்பெயர்களு ளொன்று. (M. E. R. 229 of 1927-8.)

நாட்டுநாயகம் nāṭṭu-nāyakam, *n.* <id.+. Headship of a *nāṭu*, a territorial division; நாட்டின் தலைமை. (S. I. I. vii, 49.)

நாட்டுவியவன் nāṭṭu-viyavaṉ, *n.* <id.+. Headman of a *nāṭu*, a territorial division; நாட்டதிகாரி. (S. I. I. ii, 352.)

நாட்டுவினியோகம் nāṭṭu-viṉiyōkam, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. v, 95.)

நாட்டைபைரவி nāṭṭai-pairavi, *n.* <நாட்டை+. (Mus.) A specific melody-type; இராகவகையுளொன்று. (பரத. ராக. பக். 102.)

நாடகப்பிரியா nāṭaka-p-piriyā, *n.* <நாடகம்+. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

நாடகமுகப்பு nāṭaka-mukappu, *n.* <id.+. Stage; நாடகமேடை. நாடகமுகப்பிற் றழங்கு பல்லியம் (உபதேசகா. சிவபுண். 102).

நாடகி nāṭaki, *n.* <id. Actress; நாடக மாடுபவள். *Loc.*

நாடங்காய் nāṭaṅkāy, *n.* Bottle-gourd; சுரைக்காய். (J.)

நாடுகண்காட்சி nāṭu-kaṇ-kāṭci, *n.* <நாடு+. Overseer of a *nāṭu;* நாட்டுக்காரியங்களைக் கண்காணிக்கும் அதிகாரி. (I. M. P. Cg. 211.)

நாடுகாவல் nāṭu-kāval, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. iii, 437.)

நாடுகூறு nāṭu-kūṟu, *n.* <id.+. Settlement officer; நிலத்தீர்வை விதிப்போன். (Colas, ii, 254.)

நாடுவாழ்க்கை nāṭu-vāḻkkai, *n.* <id.+. Duration of a reign, regnal period; அரசாட்சிபுரியுங் காலம். (T. A. S. iii, 174.)

நாடுவாழுமவர் nāṭu-vāḻumavar, *n.* <id.+வாழ்-. Officers governing a country; அரசாங்கத்தை நடத்தும் உத்தியோகஸ்தர். (T. A. S. iii, 167.)

நாணம் nāṇam, *n.* <Pkt. *nāṇa* <*jñāna.* Intelligence; knowledge; அறிவு. நாணமுடைய மாமுத லியாவையும் (நீலகேசி, 374).

நாணயம் nāṇayam, *n.* cf. *jñāna.* Conscience; மனச்சாட்சி. *Pond.*

நாணயவட்டம் nāṇaya-vaṭṭam, *n.* <நாணயம்+. Discount on coins; நாணயமாற்றில் கொடுக்கும் வட்டம். (P. T. L.)

நாத்தடுக்கு nā-t-taṭukku, *n.* <நா+. Stammering; தீக்கல். *Pond.*

நாத்தாங்கிவாய் nā-t-tāṅki-vāy, *n.* <id.+தாங்கி+. Hasp, staple; நாதாங்கி. *Loc.*

நாதக்கட்டு nāta-k-kaṭṭu, *n.* <நாதம்+. 1. Harmony of sounds; ஒலிகளின் இசைவு. நாதக்கட்டில்லாத கோஷ்டி. 2. Acoustic properties of a hall or building; நாதம் நன்கு சேட்டும்படியான கட்டடவமைப்பு. இந்தக் கட்டிடம் நாதக் கட்டில்லாதது. *Loc.*

நாதராமக்கிரியை nātarāmakkiriyai, *n.* cf. நாதநாமக்கிரியை. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

நாமத்தராசு nāma-t-tarācu, *n.* <நாமம்+. The common balance; தராசுவகை. *Loc.*

நாமதேயம் nāma-tēyam, *n.* <*nāmadhēya.* The Vēdic passages which give the names of sacrifices, etc.; யாகாதிகளுக்குப் பெயரிடும் வேத வாக்கிய வகை. (விவேகசிந். பக். 5.)

நாமநக்ஷத்திரம் nāma-nakṣattiram, *n.* <நாமம்+. The natal star of a person deduced by set rules, from the initial letter of his name; ஒருவனுடைய பெயரின் முதலெழுத்திலிருந்து விதிப்படி கொள்ளப்படும் அவனது நட்சத்திரம். (பஞ்.)

நாமநாராயணி nāma-nārāyaṇi, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சது. சந். 47.)

நாமள் nāmaḷ, *pron.* Corr. of நாங்கள். நாமளிருவரு மொரேவகுப்பி லாங்குகலே பயின்றே மல்லவா (பஞ்ச. திருமுக. 432).

நாமைகதேசம் nāmaikatēcam, *n.* <*nāman*+*ēkadēša.* (Gram.) Contraction of a name; முழுப்பெயரைச் சுருக்கிச்சொல்லும் பெயரின் பகுதி. (சிவக். பிரபந். பக். 84.)

நாய்க்கயிறு nāy-k-kayiṟu, *n.* prob. நாய்+. Hat retainer; தோப்பியின் நாடா. *Pond.*

நாய்க்குடை nāy-k-kuṭai, *n.* <id.+. Mushroom; காளான். *Loc.*

நாயகக்கண்டம் nāyaka-k-kaṇṭam, *n.* <நாயகம்+. A pendant in a jewel; பதக்க அணி வகை. (S. I. I. viii, 53.)

நாயகப்பேர் nāyaka-p-pēr, *n.* <id.+. Headman of a gang of servants; வேலைக்காரரின் தலைவன். நாயகப்பேர் இரண்டேக்கு (S. I. I. viii, 27).

நாயகம் nāyakam, *n.* <*nāyaka.* See நாயகப் பேர். காற்பத்தெட்டு ஆளும் இரண்டு நாயகமும் (S. I. I. viii, 27).

நாயகவாசி nāyaka-vāci, *n.* <நாயகம்+. Phrase, clause or sentence in a poem, indicating the patron of the poet; பாட்டைத்தலைவனைக் குறிக்கும் வாசகம்.

நாயெறும்பு nāy-eṟumpu, *n.* <நாய்+. A kind of ant; எறும்புவகை. (அபி. சிந்.)

நார்ச்சுண்ணாம்பு nār-c-cuṇṇāmpu, *n.* <நார்+. Lathing plaster; சுண்ணாம்புவகை. (C. E. M.)

நாராயணக்கிரியை nārāyaṇakkiriyai, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

நாராயணதுவாதசி nārāyaṇa-tuvātaci, *n.* <*nārāyaṇa*+. *Dvādaśī tithi* in the bright fortnight of the month Kārttikai; கார்த்திகை மாதத்துச் சுக்கிலத் துவாதசி. (பஞ்.)

நாராயம் nārāyam, *n.* cf. நாராயநாழி. A measure; அளவு படிவகை. நாராயத்தால் நிசதம் உரிசெய் (S. I. I. v, 286).

நாலாம்வாசல் nālām-vācal, *n.* <நாலு+ஆ-+. Passage leading to a courtyard, in a Brahmin's house; பிராமணர் வீட்டின் முற்றத்தை ஒட்டியுள்ள தாழ்வாரம். (G. Tn. D. i, 102.)

நாலாவது nālāvatu, *n.* <id.+id. Tobacco leaf, as being the fourth article used in chewing; புகையிலை. *Colloq.*

நாலிகங்கபாடிக்கல் nālikaṅkapāṭi-k-kal, *n.* A kind of gem; இரத்தினவகை. (S. I. I. ii, 196.)

நாலுகாற்சீவன் nālu-kāṟ-cīvaṉ, *n.* <நாலு+கால்+. Quadruped; மிருகம். நாலுகாற் சீவனே நரர்களோ பறவையோ (சிவக். பிரபந். பக். 345).

நாவடக்கி nā-v-aṭakki, *n.* <நா+. A plant; பூவேகை. நின்று சிணுங்கி நிலம்பரண்டி நாவடக்கி (தெய்வச். விறலிவிடு. 403).

நாவணாத்தி nāvaṇātti, *n.* Myna; நாகண வாய்ப்புள். *Pond.*

நாவீறு nā-vīṟu, *n.* <நா+. Powers of speech; பேச்சு வல்லமை. நாவீறுடைய ஒருவனே (ரகஸ்ய. 4).

நாவீறன் nāvīṟaṉ, *n.* <நாவீறு. Saint Nammāḻvār; நம்மாழ்வார். நன்மதிசகவி வணக்கு நாவீறன்வாழியே (நித்தியா. 116, 1).

நாவேறு nā-v-ēṟu, *n.* perh. நா+ஏறு. A disease affecting betel; வெற்றிலையிற்காணும் நோய்வகை. வெற்றிலைக்கு நாவேறு சுருட்டை முதலாயின (சீவகசி, 366, உரை).

நாழிகை nāḻikai, *n.* perh. *nāḍikā.* A portion of a temple; கோயிற்பகுதி. இடைகாழிகை, உண்ணாழிகை.

நாழிகைவட்டம் nāḻikai-vaṭṭam, *n.* <காழிகை+. Hour-glass, clepsydra; நாழிகை வட்டில். *Pond.*

நாள் nāḷ, *n.* Flower; புஷ்பம். (தக்கயாகப். 68, உரை.)

நாள்மாடை nāḷ-māṭai, *n.* perh. நாள்+. A tax in money; பொன்னுயவகை. (S. I. I. iv, 195.)

நாள்வாய் nāḷ-vāy, *adv.* <id.+. Every day; ஒவ்வோரு நாளும். நாள்வாய் காழிநெய் அளக்கதொடுத்து (S. I. I. viii, 168).

நாள்விருந்து nāḷ-viruntu, *n.* <id.+. Feast given before marriage to bride and bridegroom by their near relations; மணமக்கட்குக் கல்யாணத்துக்குமுன் நெருங்கிய உறவினர் இடும் விருந்து. *Loc.*

நாளம் nāḷam, *n.* A gem; மாணிக்கவகை. மாணிக்க நாளமும் கோமளமும் (S. I. I. ii, 431).

நாளெழுத்து nāḷ-eḻuttu, *n.* <நாள்+. See நாமநகூஷத்திரம். (யாப். வி. 536.)

நாற்சார்வீடு nāṟ-cār-vīṭu, *n.* <நான்கு+. Quadrangle; நடுவில் முற்றம் விட்டு நாற்புறமும் கட்டடவமைந்த வீடு. (யாழ். அக.)

நாற்சில்வண்டி nāṟ-cil-vaṇṭi, *n.* <id.+. Four-wheeled carriage; நான்கு சக்கரங் களுடைய வண்டிவகை. *Pond.*

நாற்றங்கொல்லை nāṟṟaṅ-kollai, *n.* <நாறு+. Seed bed; நாற்றங்கால். (P. T. L.)

நாற்றடிப்பாழ் nāṟṟaṭi-p-pāḻ, *n.* <id.+அடி+. Withering of seedlings; நாறு பாழ்படுகை. (S. I. I. vii, 279.)

நான்கு nāṉku, *n.* A system of loan by which grain is borrowed in the off season and repaid at the next harvest with an addition of 25 per cent. as interest; நாலிலொருபங்கு வட்டிக்காகச் சேர்த்து அறுவடையானதுங் கொடுப்பதாகச் சம்மதித்துப் பெறுந் தானியக்கடன். *Loc.*

நானாதேசி nāṉā-tēci, *n.* <நானா+. A class of merchants; வணிகர்வகை. (I. M. P. Cg. 682.)

நி

நிகமி-த்தல் nikami-, *11 v. tr.* <*nigama.* To conclude; முடித்தல். (சூடி, 1, 6, ப்ர. ஜீ. பக். 262.)

நிகழ்வாக்கம் nikaḻvākkam, *n.* <நிகழ்வு+. Transformation; பரிணமம். ஒத்தபொருண்களிகழ்வாக்க முரைத்து நின்றேன் (நீலகேசி, 421).

நிகுஞ்சிதசிரம் nikuñcita-ciram, *n.* (Nāṭya.) A head-pose; சிரவபிநயவகை. (பரத. பாவ. பக். 57.)

நிச்சங்கம் niccaṅkam, *n.* <*niś-śaṅka.* That which is undoubted; சந்தேகமற்றது. அங்கைக்கனியாகி நிச்சங்கமாகி நிகழ்த்தவடி (பாடி. திருவடி.).

நிச்சயப்பத்திரிகை niccaya-p-pattirikai, *n.* <நிச்சயம்+. Certificate; உறுதிச்சீட்டு. *Pond.*

நிச்சயாந்தம் niccayāntam, *n.* (Rhet.) A figure of speech; அணிவகை. (பாப்பா. 132.)

நிச்சல்காவி niccal-kāvi, *n.* prob. *nīca*+. Lower top-sail; காவிபாயின் கீழ்ப்பகுதி. (M. Navi. 83.)

நிச்சல்சவர் niccal-cavar, *n.* prob. id.+. Lower top-gallant sail; சவர்பாயின் கீழ்ப்பகுதி. (M. Navi. 83.)

நிசானிவராகன் nicāṉi-varākaṉ, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 117.)

நிசிதம் nicitam, *n.* perh. *niśita.* Lie; பொய். செப்புமொழி நிசமென்று நிசிதமென்றுக்கண்டு (மதுரை, 3).

நிசிதிகை nicitikai, *n.* <*niṣīdikā.* Cave where a Jain fasts to death; சைனத்துறவி உண்ணாநோன்பால் உயிர்விடும் கற்பாழி. (I. M. P. S.A. 389.)

நிட்கிரியம் niṭkiriyam, *n.* <*niṣkriya.* That which is inactive; தொழிற் செய்யாதது. (வேதாந்த சார. 85.)

நித்தப்படிகாரன் nitta-p-paṭi-kāraṉ, *n.* <நித்தம்+படி+. One who works on daily wages; நாட்கூலிக்காரன். (சரவண. பணவிடு. 81-2.)

நித்தலழிவு nittal-aḻivu, *n.* <நித்தல்+. Daily expenses; தினப்படிச் செலவு. (S. I. I. iii, 298.)

நித்தியசுமங்கலி nittiya-cumaṅkali, *n.* <நித்தியம்+. Dancing-girl; தேவடியாள். *Colloq.*

நித்தியமல்லிகை nittiya-mallikai, *n.* <id.+. A kind of jasmine; மல்லிகைவகை. *Loc.*

நித்தியல் nittiyal, *adv.* <நித்தம். Daily; தினந்தோறும். நித்தியல் திருப்பெருக்கு அமுது கொடுக்கிற (T. A. S. v, 117).

நிதாககாலாக்கினி nitāka-kālākkiṉi, *n.* <*nidāha*+. One of *pañcākkiṉi*, q.v.; பஞ்சாக்கினியு ளொன்று. (சங். அக.)

நிநாதம் ninātam, *n.* <*ni-nāda*. Sound; ஒலி. (W.)

நிபந்தனைக்கிரயம் nipantaṉai-k-kirayam, *n.* <நிபந்தனை+. Mortgage by conditional sale; அவதிக்கிரயம். *Cm.*

நிம்பர் nimpar, *n.* <E. Number; எண். முதல் நிம்பரென்றுலகில் (பஞ்ச. திருமுக. 1651).

நிமிர்-தல் nimir-, *4 v. intr.* To interpose; இடையிடுதல். நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துத் தொடர்ந்தும் (பரிபா. 19, 82).

நிமிரி nimiri, *n.* 1. Yellow colour; மஞ்சள் நிறம். (G. Tj. D. I, 120.) 2. A disease of cattle; குரைவலிப்புநோய். (M. Cm. D. 249.)

நியதம் niyatam, *n.* <*niyata*. Regularity; ஒழுங்கு.

நியாமகம் niyāmakam, *n.* <*niyāmaka*. That which binds or sanctions; கட்டுப்படுத்துவது. நியாமகம் என்னெனென்பீராயின் (சிவசம. 51).

நியாஸஸ்வரம் niyāsa-svaram, *n.* <*nyāsa*+. (Mus.) Proper final note of a *rāga;* இராகத்தைக் காட்டி முடித்தற்குரிய ஸ்வரம். (Mus. of Ind. 39.)

நியோகி niyōki, *n.* <*niyōgin*. Sage; wise man; பெரியோன். போந்திடு நியோகியர்கள் வார்த்தை யுசிதந்தான் பொருந்தவே வாதவெல்வார் (திருவேங். சத. 19).

நிர்க்குணி nirkkuṇi, *n.* <*nir-guṇa*. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

நிர்ணயகம் nirṇāyakam, *n.* <*nirṇāyaka*. That which helps to determine; determinant; நிர்ணயிக்க உதவுவது. இவ்வர்த்தத்திற்கு நிர்ணயகம் இசையாயிற்று (சுடி, 6, 1, 6).

நிர்த்தூள் nir-t-tūḷ, *n.* prob. *nis*+*dhūlī*. Atom; சிறு துகள். பொருப்பை நிர்த்தூளாக்கி (சந்திர கலாமாலை, 15).

நிர்த்தேசியம் nirttēciyam, *n.* <*nirdēšya*. That which is pointed out or emphasised; point; குறித்துக் காட்டப்படுவது.

நிர்வாகவிலக்கை nirvāka-v-ilakkai, *n.* <நிர்வாகம்+. Fee for management; காரிய நிர்வாகத்திற்கு ஏற்பட்ட சம்பளம். (S. I. I. v, 504.)

நிர்வாணி nirvāṇi, *n.* <*nirvāṇī*. (Astrol.) A deity located in a particular direction each day of the week, when it is inauspicious to start on a journey in that direction; தான் நீர் குந் தீக்கை நோக்கிப் பயணஞ்செய்வதற்காகாதபடி கிழமைதோறும் இடம் மாறி நிற்குந் தேவதை. (பஞ்.)

நிர்விடம் nirviṭam, *n.* <*nir-viṣa*. Antidote for poison; விடத்தை நீக்கும் மருந்து. நிர்விடமு விடமுமொருமுதலாய் நின்றும் (சிவதெறிப். 65).

நிர்விடயம் nirviṭayam, *n.* <*nir-viṣaya*. That which is non-existent; இல்பொருள். பிரயத்தின பூர்வகமாய் நிர்விடயம் பண்ணவேண்டும் (வேதாந்தசா. 42).

நிரக்கை nirakkai, *n.* <நிர-. Average; நிரவல். *Mod.*

நிரதன் niratan, *n.* <*nirata*. A man of excessive attachment; மிக்க பற்றுடையவன். தாய நிரதராயினர் சிலர் (பிரபோதசந். 7, 31).

நிரந்தரி-த்தல் nirantari-, *11 v. intr.* <நிரந்தரம். To expand; பரவுதல். மணலினிரந் தரிப்பியா (தணிகைப்பு. வள்ளி. 20).

நிரநுயோச்சியாநுயோகம் niranu-yōcciyānuyōkam, *n.* <*nir-anu-yōjya*+. (Log.) A fallacy in argument; தோல்வித்தானத்து ளொன்று. (செந். iii, பக். 13.)

நிரம்சம் nir-amcam, *n.* <*nir-aṃša*. That which is indivisible; பகுக்கத்தகாதது. சுபிரதேசியாகலின் நிரம்சமாகிய பரமாணுவினுக்கு (நீலகேசி, 397, உரை).

நிரவல் niraval, *n.* <நிரவு-. Average; சராசரி. *Loc.*

நிரனிறைவழு niraṉiṟai-vaḻu, *n.* <நிரனிறை+. (Rhet.) A defect in composition which consists in following one order at one place and the reverse order later on; ஒரு நிரலை முன்வைத்து அதன் பின்வைக்கும் நிரலை மாறுபட வைக்குங் குற்றம். (இலக். வி. 697.)

நிரஸி-த்தல் nir-asi-, *11 v. tr.* <*nir-as*. 1. To destroy; அழித்தல். பாண்டவரையும் நிரஸிக்கப் பிராப்தமாயிருக்க (ஸ்ரீவசன. 21). 2. To defeat, as in an argument; தோல்வியுறச் செய்தல்.

நிருணயக்கணக்கு niruṇaya-k-kaṇakku, *n.* <*nirṇaya*+. Algebra; பீசகணிதம். *Pond.*

நிருபச்சம்படம் nirupa-c-campaṭam, *n.* <நிருபம்+. Pay of the messenger carrying royal orders; அரசருத்தரவுகளைக் கொண்டு வரு வோனுக்குரிய கூலி. (M. E. R. 1921-22, p. 109.)

நிருபர் nirupar, *n.* <*nirūpa.* Correspondent; பத்திரிகைக்குச் சமாசாரக் கடிதம் எழுதுவோன். *Mod.*

நிருமாலியம் nirumāliyam, *n.* Sacred lingam tree; பெரியமாவிலிங்கம். (L.)

நிருவிஷம் niruviṣam, *n.* Zedoary root; கர்ப்பூரக்கிச்சிலிக்கிழங்கு. *Pond.*

நிரூபணம் nirūpaṇam, *n.* <*nirūpaṇa.* Section containing the argument of a story, in musical composition; கீர்த்தனருபமான சரித்திர நூலின் முதலில் அச் சரித்திரத்தைச் சுருக்கிக்கூறும் பகுதி. (கோபாலகிருஷ்ணபாரதி, 39.)

நிரைக்கட்டை nirai-k-kaṭṭai, *n.* <நிரை-+. Damming a river with stockade. See உல்லடைப்பு. *Pond.*

நிரைப்பு niraippu, *n.* <id. Order; ஒழுங்கு. *Pond.*

நிரோட்டி nirōṭṭi, *n.* <*nir-ōṣṭha.* cf. நிரோட்டியம். (Pros.) Poem composed without using the labials; நிரோட்டகம். (யாப். வி. 510.)

நிரோதானமுத்திரை nirōtāṇa-muttirai, *n.* <*nirōdāna*+. (Śaiva.) A handpose which consists in bringing the thumb and the fingers other than the little finger together; சிறுவிரலை நீக்கி ஏனைய விரல்களை நுனிகள் பொருந்தச் சேர்த்துக் குவிக்கும் முத்திரைவகை. (சைவாநுட். வி. 17.)

நிலக்காணிக்கை nila-k-kāṇikkai, *n.* <நிலம்+. A kind of tax; வரிவகை. (S. I. I. iv, 79.)

நிலக்கில் nila-k-kīl, *n.* <id.+. Asphalt; சிலாசத்து. *Pond.*

நிலக்கூலி nila-k-kūli, *n.* <id.+. Rent for land; நிலவாடகை. நிலக்கூலி தண்டிப்போந்த படிக்கும் (S. I. I. vii, 385).

நிலங்கீறு-தல் nilaṅ-kīṟu-, *v. intr.* <id.+. To dawn; அருணோதயமாதல். *Tinn.*

நிலமடக்கு-தல் nila-maṭakku-, *v. intr.* <id.+. To classify arable lands according to quality; விளை நிலத்துக்குத் தரம் ஏற்படுத்துதல். (S. I. I. v, 142.)

நிலமுதல் nila-mutal, *n.* <id.+. Land-register; அடங்கற் குறிப்பு. (Colas, ii, 310.)

நிலுவைஅஞ்சனை niluvai-añcaṉā, *n.* <நிலுவை+. Estimate of the produce of a field before it is harvested; அறுவடைப் புள்ளிக்கணக்கு. (R. T.)

நிலைக்களம் nilai-k-kaḷam, *n.* <நிலை+. Office for collection of revenue; அரசிறை தண்டுஞ் சாலை. (S. I. I. ii, 353.)

நிலைப்பந்தம் nilai-p-pantam, *n.* <id.+. A kind of torch; தீவட்டிவகை. (Pudu. Insc. 307.)

நிலைபரம் nilai-param, *n.* cf. நிலைவரம். Foundation; ஆதாரம். *Pond.*

நிலையடி nilai-y-aṭi, *n.* <நிலை+. First threshing of harvested sheaves of paddy; களநெல்லின் தலையடி. *Tinn.*

நிலையாணி nilai-y-āṇi, *n.* <id.+. Fixed pin, in jewels, dist. fr. *ōṭāṇi;* நகைகளில் பதித்திருக்கும் ஆணிவகை. (S. I. I. ii, 15.)

நிலையாள் nilai-y-āḷ, *n.* <id.+. Permanent servant; ஸ்திரமான வேலைக்காரன். நிலையாள் என்றுகூட்டி (S. I. I. iv, 140).

நிலையுருக்காண்(ணு)-தல் nilai-y-uru-k-kāṇ-, *v. intr.* <id.+. To check and verify the stock account; பதிவுக் குறிப்பில் உள்ள படி பண்டங்களை எண்ணிக் கணக்கிடுதல். ஸ்ரீ பண்டாரஞ் சோதிச்சு ஸ்ரீ பண்டாரப் பொத்தகப்படி நிலையுருக்கண்டு (S. I. I. vii, 447).

நிவசி-த்தல் nivaci-, *11 v. intr.* <*ni-vas.* To dwell; குடியிருத்தல். (ஜீவப்பிரம்மைக்ய. பக். 640.)

நிவாரகன் nivārakaṉ, *n.* <*nivāraka.* Obstructor; தடைசெய்வோன். ஸர்வாதிகன் தாழ நிற்குமன்று நிவாரகரில்லை (சூடி, 1, 3, ப்ர.).

நிவிருத்திமார்க்கம் nivirutti-mārkkam, *n.* <*nivṛtti*+. The path of renunciation; துறவு நெறி. *Colloq.*

நிவேதனப்பாவாடை nivētaṉa-p-pāvāṭai, *n.* <நிவேதனம்+. Food-offerings on a large scale, made to a deity; கடவுளுக்கு இடும் பெரும்படைப்பு. *Loc.*

நிழல் niḻal, *n.* Devil; பேய். *Loc.*

நிழலாட்டப்பாவை niḻal-āṭṭa-p-pāvai, *n.* <நிழலாட்டம்+. Puppet show; தோற்பாவைக் கூத்து. (நாடகத்தமிழ், பக். 9.)

நிழலாட்டம் niḻal-āṭṭam, *n.* <நிழல்+. 1. Movement of a person's shadow; ஒள் நடமாடுவதால் ஏற்படும் நிழலின் அசைவு. குற விழிக்கொண்டு வந்தார்போலூர் நிழலாட்டம் பார்த்துக் கொண்டு கிடக்கையிலே (திவ். பெரியாழ். 2, 5, 3, வ்யா. பக். 340). 2. Cinema; புகைப்படங்களின் சலனத்தாலமைந்த காட்சி. *Mod.*

நிழற்சுருங்கி nilaṟ-curuṅki, *n.* <id.+. A plant; பூடுவகை. (அபி. சிந். 1480.)

நிறுத்துமுள்ளு niṟuttu-muḷḷu, *n.* <நிறுத்து-+. Needle of a scale; தராசின் நடுமுள். *Pond.*

நிறை niṟai, *n.* <நிறை-. Abundance; மிகுதி. நிறையென்று மிகுதியாய் (சூடி, 1, 2, 3).

நிறைச்சளவு niṟaiccaḷavu, *n.* <id. + அளவு. Full and correct measure; சரியான அளவு. (S. I. I. ii, 107.)

நிறைசெலுத்து-தல் niṟai-celuttu-, *v. tr.* <நிறை+. To bring to fruition, contending against difficulties; கொண்டு செலுத்துதல். *Tinn.*

நிறைவிளக்கு niṟai-viḷakku, *n.* prob. id. +. Unlit lamp; ஏற்றத விளக்கு. *Tinn.*

நின்றையம் niṉṟaiyam, *n.* perh. *nirṇaya.* Determination, resolution; நிருணயம். (Pudu. Insc. 558.)

நினைப்பீடு niṉaippīṭu, *n.* <நினைப்பிடு-. See நினைப்பு. ஸர்வேச்வரன் இவர்களுடைய பூர்வ பாதத்தாலேயிட்ட நினைப்பீடு மாறுகைக்கு ப்ரதான காரணம் மூன்றுண்டு (ரஹஸ்ய. 709).

நினைப்பு niṉaippu, *n.* <நினை-+. Will; சங்கற்பம். நாட்டுக்கிட்ட நினைப்பு அந்தப்புரத்துக்கு அரிதாக வேணுமோ (சூடி, 1, 4, 5, பக். 191).

நிஷ்கம்பம் niṣkampam, *n.* <*niṣkampa.* Fixity; அசைவின்மை. (வேதா. சூ. 106.)

நிஷித்தகுரு niṣitta-kuru, *n.* <*niṣiddha* +. Preceptor who by imparting secrets of charms gives his disciple pleasure here and sorrow in the next world; வசியாகருஷணாதிகளால் இகத்திலே சுகமும் பரத்திலே துக்கமுங் கொடுக்குங் குரு. (விவேகசிந். பக். 28.)

நிஸ்ஸந்தேகம் nis-santēkam, *n.* <*nis-sandēha.* Indubitability; ஐயமின்மை.

நீ

நீக்கம் nīkkam, *n.* <நீக்கு-. Interspace; இடைப்பட்ட இடம். எள்ளிருக்க நீக்கமின்றி (கதிரை மலைப்போன்பக்காதல், பக். 12).

நீக்கிலக்கம் nīkkilakkam, *n.* <நீக்கு-+. (Arith.) A kind of calculation; கணக்குவகை. (கணக்கதி.)

நீக்கு nīkku, *n.* <id. See நீக்கம். நீக்கற வெடுத்துப் பல்கா லின்னண நிரந்து கூறி (இரகு. திக்குவி. 218).

நீகாசம் nīkācam, *n.* <*nīkaśa.* Certainty; உறுதி (நாநார்த்த.)

நீசல் nīcal, *n.* perh. *nīca.* cf. கீர்ச்சீலை. Loin cloth; கௌபீனம். *Mad.*

நீசன் nīcaṉ, *n.* <*nīca.* Ignorant person; அறிவில்லாதவன். (திவ். திருச்சந்த. 66, வ்யா. பக். 192.)

நீஞ்சூசி niñcum-ūci, *n.* <நீஞ்சு-+. Loadstone; காந்தம். *Loc.*

நீடம் nīṭam, *n.* <*nīḍa.* Place; இடம். (நாநார்த்த.)

நீத்தண்ணீர் nī-t-taṇṇīr, *n.* prob. நீர்-. Water allowed to stand over cooked rice overnight; நீராகாரம். *Tinn.*

நீதாசனம் nītācaṉam, *n.* <நீதம்+. Court of justice; நியாயஸ்தலம். (யாழ். அக.)

நீதிகர்த்தா nīti-karttā, *n.* <நீதி+. Judge; நீதிபதி. *Pond.*

நீதிகர்மம் nīti-karmam, *n.* <id.+. Inserting a thread 11 inches long through the nostril and drawing it out of the mouth; பதினொரங்குல நீளமுள்ள நூலை நாசியிற் செலுத்தி வாய் வழியாக வாங்குகை. (யோகஞான. பக். 33.)

நீதிமதி nītimati, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களுள் ஒன்று. (சங். சந்.)

நீர்க்கட்டு nīr-k-kaṭṭu, *n.* <நீர்+. The maximum height up to which water collects, as in a lake, tank, etc.; ஏரி முதலியவற்றில் நீர் தேங்தும் அளவு. இந்த ஏரிக்கு நீர்க்கட்டு எவ்வளவு?

நீர்க்கடியாரம் nīr-k-kaṭiyāram, *n.* <id. +. Clepsydra; நாழிகைவட்டில். *Pond.*

நீர்க்கணம் nīr-k-kaṇam, *n.* <id.+. A wasting disease, in children; குழந்தைகட்கு வருங் கணைநோய்வகை. (பாலவா. 41.)

நீர்க்காணம் nīr-k-kāṇam, *n.* <id.+. Water cess; நீர்வரி. (Insc.)

நீர்க்கிண்ணம் nīr-k-kiṇṇam, *n.* <id.+. See நீர்க்கடியாரம். *Pond.*

நீர்க்கிரந்தி nīr-k-kiranti, *n.* <id.+. A disease; நோய்வகை. (இவ். வை. 166.)

நீர்க்கோவை nīr-k-kōvai, *n.* <id.+. Water-spread, as of a tank; நீர் தங்கிநிற்கக்கூடிய நிலப்பகுதி. (S. I. I. iii, 479.)

நீர்ச்சிலந்தி nīr-c-cilanti, *n.* <id.+. A kind of spider; சிலந்திவகை. (அபி. சிந்.)

நீர்ச்சுண்டல் nīr-c-cuṇṭal, *n.* <id.+. Decoction; கஷாயம். *Nāṉ.*

நீர்நரம்பு nīr-narampu, *n.* <id.+ Underground spring or flow of water; பூமியுட் பாயும் நீரோட்டம். கடின ஸ்தலத்திலே நீர்நரம்பு அறியுமவனுகையாலே வாருணஸ்திரத்தைவிட்டு (ஈடு, 10, 6, 4, பக். 195).

நீர்நிலக்காசு nīr-nila-k-kācu, *n.* <id.+ நிலம்+. An ancient tax in cash; பழைய காசாய வகை. (S. I. I. i, 89.)

நீர்ப்பண்டம் nīr-p-paṇṭam, *n.* <id.+. Liquid; திரவப்பொருள். மருள்ஸு நீர்ப்பண்டமாக டருகி (திவ். பெரியாழ். 3, 6, 3, வ்யா. பக். 675).

நீர்ப்பாடு nīr-p-pāṭu, *n.* <id.+. A disease of children; குழந்தைநோய்வகை. (பால வா. 451.)

நீர்ப்பிடி nīr-p-piṭi, *n.* <id.+. Arrogance; கருவம். *Loc.*

நீர்ப்பிடிப்பு nīr-p-piṭippu, *n.* <id.+. Scarcity of water; நீர்த்தட்டு. *Loc.*

நீர்ப்பெருக்கு nīr-p-perukku, *n.* <id.+. A disease; நோய்வகை. (இராசவைத். 166.)

நீரசம் nīracam, *n.* <*nīrāja*. Hydrogen; நலவாயு. *Pond.*

நீராழி nīr-āḻi, *n.* <நீர்+. A disease of cattle; மாட்டுநோய்வகை. (மாட்டுவை.)

நீரி nīri, *n.* <id. That which lives in water, aquatic life; நீரில்வாழ்வது. நீரியா யூர்வன வாய் நின்றநாள் போதாதோ (பட்டினத்தப். பக். 200).

நீரெரிவு nīr-erivu, *n.* <id.+. Dysury; நீர்க்கடுப்பு. *Pond.*

நீலகண்டவாலை nīlakaṇṭa-vālai, *n* prob. *nīlakaṇṭha*+. A medicine; மருந்துவகை. *Loc.*

நீலகாம்போதி nīlakāmpōti, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

நீவு-தல் nīvu-, *5 v. tr.* To propel; to raise, as the wick of a lamp; தூண்டுதல். நீவாத நிபமென (மஸ்தான். 140).

நீற்றுமானம் nīṟṟu-māṉam, *n.* <நீற்று-+. Calcination; புடமிடுகை. குருமுடித்தி நீற்று மானம்புரியு நோறிவேன் (பஞ்ச. திருமுக. 848).

நு

நுகத்தடிச்சீர் nukattaṭi-c-cīr, *n.* <நுகம்+. A marriage rite; விவாகச்சடங்குவகை. *Loc.*

நுடங்கு-தல் nuṭaṅku-, *5 v. intr.* To be feeble, thin or weak; மெலிதல். நொந்தவரே முதலாக நடங்கி யனன்னியராய் (ரஹஸ்ய. 390).

நுளைவாய் nuḷai-vāy, *n.* prob. நுளை+. Foul mouth; ஊத்தைவாய். (மதி. கள. i, 72.)

நுனி-த்தல் nuṉi-, *11 v. tr.* <நனி. 1. To state after a full consideration; ஆராய்ந்து கூறுதல். நூற்பொருளுணர்ந்தோர் நுனித்தனராமென (மணி. 19, 38). 2. To intend; கருதுதல். நோக் கருஞ் சாலேபோக நுனித்தி (இரகு. குறைக. 67).

நுனியாடி nuṉi-y-āṭi, *n.* prob. id.+. Commander-in-chief; சேனாதிபதி. (ஈடு, 4, 8, 7.)

நுனியிலை nuṉi-y-ilai, *n.* <id.+. Plantain leaf with the tapering end intact; தலைவாழையிலை. *Loc.*

நூ

நூக்குணை nūkkuṇā, *n.* cf. ஊக்குணை. Moosly root; நிலப்பனை. (சித். அக.)

நூல்நிலயம் nūl-nilayam, *n.* <நூல்+. See நூல்நிலை. *Mod.*

நூல்நிலை nūl-nilai, *n.* <id.+. Library; புத்தகாலயம். *Mod.*

நூலாமாலை nūl-ā-mālai, *n.* <id.+ஆ neg.+. Craft; artifice; தந்திரம். (R.)

நூலாயம் nūl-āyam, *n.* prob. id.+. A tax; வரிவகை. (S. I. I. vii, 430.)

நூலுத்தி nūl-utti, *n.* <id.+. (Gram.) Devices adopted in standard literary works; தந்திரவுத்தி. (W.)

நூவன் nūvaṉ, *n.* Person belonging to the Kuṟava caste; குறவன். (சிவக். பிரபந். பக். 279.)

நூற்படை nūṟ-paṭai, *n.* <நூல்+. Warp; பாவு. (J.)

நூற்புணர்ப்பு nūṟ-puṇarppu, *n.* <id.+புணர்-. See நூலுத்தி. அது விரித்துத் தொகுத்த லென்னும் நூற்புணர்ப்புப்பட வைத்தவாறு (தொல். சொல். 205, இளம்.). இது யோகவிபாகம் என்னும் நூற்புணர்ப்பு (தொல். சொல். 1, சேனா.).

நூன்மலிவு nūṉ-malaivu, *n.* <id.+. (Pros.) A defect in composition; செய்யுட் தற்றங்களு ளொன்று. (யாப். வி. பக். 525.)

நூனதை nūṉatai, *n.* <*nyūna-tā*. Defect; குறைவு. சிவனுக்கு . . . நூனதை ஆரோபித்தலின் சுவாமித் துரோகிகளாய் (சிவசமவா. பக். 38).

நெ

நெகிழ்ச்சி nekiḻcci, *n.* <நெகிழ்-. 1. Loosening, slackening; தளர்கை. (W.) 2. Tenderness of feeling; மனமிரங்துகை. அவன் பக்கலிலே நெகிழ்ச்சியில்லை (சுடு, 9, 1, 3).

நெகிழியல்வஸ்து nekiḻ-iyal-vastu, *n.* <id. + இயல் +. Fluid; நீர்த்தன்மையுடைய பண்டம். *Mod.*

நெஞ்சுக்கல் neñcu-k-kal, *n.* <நெஞ்சு +. That which oppresses the mind; மனத்தை உறுத்துவது. *Nāṉ.*

நெஞ்சுக்கூடு neñcu-k-kūṭu, *n.* <id. +. Thorax; வயிற்றிற்குமேலுங் கழுத்திற்குக் கீழும் உள்ள உடற்பகுதி.

நெஞ்சுத்திடுக்கம் neñcu-t-tiṭukkam, *n.* <id. +. Trembling of the heart; மனநடுக்கம். *Nāṉ.*

நெஞ்செதிர் neñcetir, *adv.* <id. +. Directly in front; நேரெதிரில். பெண்களே நெஞ்செதி ராகவே கண்டால் (வள்ளி. கதை. MS.).

நெட்டாள் neṭṭāḷ, *n.* prob. நெடு-மை +. A tax; வரிவகை. (S. I. I. vii, 489.)

நெட்டிப்புல் neṭṭi-p-pul, *n.* <நெட்டி +. *Ayiri*, a long grass; அயிரி என்ற புல்வகை. (W.)

நெட்டிமுட்டி neṭṭimuṭṭi, *n.* A plant; செடிவகை. (பரி. அக.)

நெட்டுவட்டி neṭṭu-vaṭṭi, *n.* <நெடு-மை +. Simple interest; சாதாரண வட்டி. *Loc.*

நெட்டெழுத்து neṭṭeḻuttu, *n.* <id. +. 1. Document-writing; பத்திர முதலியன எழுதுகை. பத்திரத்தின் . . . நெட்டெழுத்துக்கூலி ரிஜிஸ்தர்ச் செலவோடு (பஞ்ச. திருமுக. 1584). 2. The body of a document or letter; பத்திரத்தின் உடல். (யாழ். அக.)

நெட்டை neṭṭai, *n.* prob. id. Carcass; பிணம். *Pond.*

நெட்டோலை neṭṭōlai, *n.* <id. +. Mat of plaited palmyra-leaf; பனையோலை. நெட் டோலைச் சயனத்தார் (தற்றெட்டேத். திருப்புகழ். 95).

நெடுக்குமரம் neṭukku-maram, *n.* <நெடுக்கு +. Longitudinal frame, as of a door; வாசற்கால் கதவுச்சட்டம் முதலியவற்றின் பக்கவடம். *Loc.*

நெடுங்காய்பற்று-தல் neṭuṅka-p-paṟṟu-, *v. tr.* prob. நெருகு- +. To grasp firmly; இறுகப் பிடித்தல். கண்ட இரை நெடுகப் பற்றி விழுங்கிய பாம்புபோல் (நீலகேசி, 308, உரை).

நெடுங்கம்பு neṭuṅ-kampu, *n.* <நெடு-மை +. A kind of bulrush millet; கம்புப்பயிர்வகை. (விவசா. 4.)

நெடும்புழு neṭum-puḻu, *n.* <id. +. A disease of crops, due to worms; பயிரில்விழும் பூச்சிநோய்வகை. *Nāṉ.*

நெடுமடல் neṭu-maṭal, *n.* <id. +. A metallic vessel for sacred ashes; திருநீறு வைக்கும் பாத்திரவகை. (S. I. I. ii, 419.)

நெடுமை neṭumai, *n.* Long vowel; நெட்டெழுத்து. நெடுமையுங் தீர்க்கமு நெடிற்பெயர் (போகத். 15).

நெடுவட்டி neṭu-vaṭṭi, *n.* <நெடு-மை +. See நெட்டுவட்டி. *Tinn.*

நெடுவாலன் neṭu-vālaṉ, *n.* <id. +. Rope; கயிறு. (J.)

நெடுவாலி neṭu-vāli, *n.* <id. +. Iguana; உடும்பு. *Nāṉ.*

நெய் ney, *n.* Cementing substance; சாந்துடன் சேர்ந்து இறுகப்பிடித்துக் கொள்ளுதற் குரிய கருப்புக்கட்டி முதலியன. மணலும் நீருங் கூட வரைத்த சாந்திற் கருப்புக் கட்டியாகிய நெய் அனை வினவாறுபோல (நீலகேசி, 310, உரை).

நெய்விலை ney-vilai, *n.* <நெய் +. A tax; வரிவகை. (S. I. I. ii, 352.)

நெரளைதாளி neraḷaitāḷi, *n.* A tree, *Antidesma alexiteria*; மரவகை. *Pond.*

நெரிசம் nericam, *n.* Spear; ஈட்டி. *Loc.*

நெருக்கு-தல் nerukku-, *5 v. tr.* To press, as in a mill; to crush; ஆலை செக்கு முதலிய வற்றில் இட்டு ஆட்டுதல். நல்ல கரும்பு நெருக்கிச் சாறுதிரட்டி வட்டாகச் செய்த அக்காரமும் (திவ். பெரியாழ். 2, 9, 7, வ்யா. பக். 468).

நெருஞ்சிப்பாகல் neruñci-p-pākal, *n.* <நெருஞ்சி +. A kind of balsam pear; மீதி பாகல். *Madr.*

நெருஞ்சிப்பூ neruñci-p-pū, *n.* <id. +. An ornament; ஓரணி. (Insc.)

நெருப்புக்குச்சி neruppu-k-kucci, *n.* <நெருப்பு +. Match; தீக்குச்சி. *Mod.*

நெருப்புப்பூ-த்தல் neruppu-p-pū-, *v. intr.* <id. +. To smoulder, as live charcoal; நீறுபூத்தல். *Loc.*

நெருப்புப்பெட்டி neruppu-p-peṭṭi, *n.* <id.+. Match box; தீப்பெட்டி. *Mod.*

நெருப்பெறும்பு neruppeṟumpu, *n.* <id.+. A kind of small red ant whose bite is very painful; கடித்தவிடத்து நெருப்புப்பட்டது போல் வலியுண்டாக்கும் ஒருவகைச் சிவப்புச் சிற் றெறும்பு. *Loc.*

நெருப்போடு neruppōṭu, *n.* <id.+. Chafing dish, used by goldsmiths; தட்டார் வேலைக்குரிய நெருப்புச்சட்டி. *Colloq.*

நெல்லானி nellāṉi, *n.* Guinea peach; வெண்மி. (L.)

நெல்லிக்காய்முத்து nellikkāy-muttu, *n.* <நெல்லிக்காய்+. cf. நெல்லிக்காய்மணி. A kind of necklet; கழுத்தணிவகை. (S. I. I. viii, 59.)

நெல்லுப்பருத்தி nellu-p-parutti, *n.* <நெல்+. A kind of cotton; பருத்திவகை. (M. E. R. 1915, p. 107.)

நெல்லுமா nellu-mā, *n.* <id.+. Rice flour; நென்மா. (நாகார்த்த. 2, உரை.)

நெல்லூர்ப்புதுமாடை nellūr-p-putu-māṭai, *n.* <நெல்லூர்+. A coin; நாணயவகை. (M. E. R. 116 of 1929-30.)

நெல்லூர்மாடை nellūr-māṭai, *n.* <id.+. A coin; நாணயவகை. (M. E. R. 356 of 1919 B.)

நெல்லெடை nel-l-eṭai, *n.* <நெல்+. Weight of a grain of paddy, used as a unit in weighing gold; பொன் நிறுக்க வதவுஞ் சிறு எடை வகை.

நெளிவர்ணச்சேலை neḷi-varṇa-c-cēlai, *n.* <நெளி+வர்ணம்+. A kind of saree; புடவை வகை. (பஞ்ச. திருமுக. 1160.)

நெற்குறுசாலை neṟ-kuṟu-cālai, *n.* <நெல்+குறு-+. Place where paddy is husked; நெல்லைக் குத்தும் இடம். (S. I. I. iv, 188.)

நெற்சம்பளம் neṟ-campaḷam, *n.* <id.+. Salary paid in paddy; நெல்லாகப் பெறுஞ் சம்பளம். பணம் வேறு நெற்சம்பளம் வேறு பற்றி (சரவண. பணவிடு. 120).

நெற்றி neṟṟi, *n.* Middle; நடு. காலெநெற்றியி லிலமுஞ்சுடு கனலிகுறைபட (தக்கயாகப். 334).

நெற்று-தல் neṟṟu-, *5 v. tr.* To attain, as an end; பெறுதல். *Pond.*—*intr.* To mature, ripen; முதிர்தல்.

நெறி[1] neṟi, *n.* cf. நெரி. Inflammation of the gland; நெறிக்கட்டி. *Colloq.*

நெறி[2]-த்தல் neṟi-, *11 v. tr.* To look; நோக்குதல். (நீலகேசி, 53, உரை.)

நென்புடவை neṉ-puṭavai, *n.* prob. மென்மை+. A kind of fine cloth, dist. fr. *parum-puṭavai;* மெல்லிய ஆடைவகை. நென்புடவை பொதி ஒன்றுக்குக் காசு இருபதும் (S. I. I. viii, 233).

நே

நேசங்காட்டி nēcaṅ-kāṭṭi, *n.* <நேசம்+. Cajoler; இச்சகம் பேசுவோன். *Pond.*

நேமநிஷ்டை nēma-niṣṭai, *n.* <நேமம்+. Daily rites and observances; நித்தியானுட்டானம்.

நேமநெட்டு nēmaneṭṭu, *n.* Benami; மலராணை. *Loc.*

நேமுகம் nēmukam, *n.* <நியமகம். Appointment; நியமனம். *Loc.*

நேமுகன் nēmukaṉ, *n.* prob. நியாமகன். Officer; உத்தியோகஸ்தன். நிசக்கட்டாகக் கொடுக்கும் நேமுகர்போல் (சரவண. பணவிடு. 139).

நேர் nēr, *n.* Manner; பிரகாரம். இங்நேரிலே தந்தாம் பிள்ளைகள் தாய்மார் பக்கலிலே அழுது சென்றால் தரிப்பார்களோ (திவ். பெரியாழ். 2, 2, 3, வ்யா. பக். 253).

நேர்கோடு nēr-kōṭu, *n.* <நேர்+. Straight line; வளையாத கோடு. *Mod.*

நேர்கோணக்கருவி nēr-kōṇa-k-karuvi, *n.* <நேர்கோணம்+. Mason's rule; முலைமட்டப் பலகை. *Pond.*

நேர்கோணம் nēr-kōṇam, *n.* <நேர்+. Right angle; ஒன்றுக்கொன்று செங்குத்தான கோடுகளின் இடையேயுள்ள கோணம். *Pond.*

நேர்ச்சிக்கடா nērcci-k-kaṭā, *n.* <நேர்ச்சி+. Ram intended as a vow-offering to a deity; பிரார்த்தனைக்கு நேர்ந்துவிட்ட ஆட்டுக்கிடாய். *Nāṉ.*

நேர்ந்தவாக்கில் nērnta-vākkil, *adv.* <நேர்-+. *Loc.* 1. At random; முறையின்றி. 2. At pleasure; இஷ்டப்படி.

நேர்ந்தவாக்கு nērnta-vākku, *n.* <id.+. Rashness; நேர்ந்தபோக்கு. (W.)

நேர்மை nērmai, *n.* <id. Occurrence; சம்பவம். இதுகண் டிங்நேர்மை புதிதென் றதிசயித் தான் (மகாராஜாதுறவு, 111).

நேரப்பலன் nēra-p-palaṉ, *n.* <நேரம்+. Astrological effect of the time when a work is commenced; காரியந்தொடங்கப்பட்ட வேளையின் பலன். *Nāṉ.*

நேரப்போக்கு nēra-p-pōkku, *n.* <id.+. Pastime; பொழுதுபோக்குதகை. *வெற்றுநேரப் போக்காய்ப்புகல் விஞ்தமுமன்று* (இரகுவ. பக். 2).

நேரியது nēriyatu, *n.* cf. நேரியல். A kind of fine cloth; ஒருவகை நல்லாடை. *Nāṉ.*

நை

நைமிசம் naimicam, *n.* A spiritual world, one of *kuyyāṭṭaka-puvaṉam*, q. v.; குய்யாட்டகபுவனத்து ளொன்று. (சி. போ. பா. 2, 3, பக். 213.)

நைராத்மியதர்சனம் nairātmıya-tarcaṉam, *n.* <*nis*+*ātmya*+. The doctrine of the non-existence of the soul; ஆன்மா இல்லை என்ற வாதம். (நீலகேசி, 528, உரை.)

நொ

நொக்கல் nokkal, *n.* A kind of sweetmeat; தின்பண்டவகை *நொக்கல் பால்கோவா* (பஞ்ச. திருமுக. 1837).

நொங்கு-தல் noṅku-, *5 v. intr.* prob. நுகை-. To become weak and emaciated; மெலிதல். *அங்கமு நொங்குதே* (கனம்கிருஷ்ணையர், 72).

நொண்டங்காய் noṇṭaṅkāy, *n. Nāṉ.* 1. Tender fruit of tamarind; புளியங்காயின் பிஞ்சு. 2. Tamarind fruit almost ripe; புளியின் செங்காய்.

நொந்துபோ-தல் nontu-pō-, *v. intr.* <நோ-+. 1. To be impoverished; to be reduced in circumstances; நிலைகெடுதல். (W.) 2. To become spoilt; பதனழிதல். *காற்றில்லாமல் நொந்துபோன பழவகைகளை* (மதி. கள. ii, 49).

நொம்பலம் nompalam, *n.* Pain; நோவு. *Nāṉ.*

நொரநாட்டியம் noranāṭṭiyam, *n.* Fastidiousness; நொறுநாட்டியம். *Tinn.*

நொள்ளை noḷḷai, *n.* Infant, baby; கைக்குழந்தை. *Tinn.*

நொற்பம் norpam, *n.* perh. நொய்ப்பம். Insignificance; எளிமை. *நொற்பவுலகத்தவர் நோய் நீர்த்து* (பஞ்ச. திருமுக. 611).

நொற்பன் norpaṉ, *n.* See நொற்பம். (யாழ். அக.)

நோ

நோ-தல் nō-, *13 v. tr.* To hate; வெறுத்தல். *எதிலரை நோவதெவன்* (நீதிநெறிவி. 25).

நோக்கட்டாமரம் nōkkaṭṭā-maram, *n.* cf. நெய்க்கொட்டான்+. Loquat. See இலகோட்டா. (L.)

நோக்கிமாடை nōkki-māṭai, *n.* perh. நோக்கு-+. A coin; நாணயவகை. *ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கின நோக்கிமாடை ஒன்றும்* (S. I. I. iv, 293).

நோக்கு-தல் nōkku-, *5 v. tr.* To supervise; கண்காணித்தல். *இம்மடம் நோக்கும் திருமேனிக்கு* (S. I. I. iv, 17).

நோட்டம் nōṭṭam, *n.* Account; கணக்கு. *நோட்டத்திற் செல்லெழுதி* (சரவண. பணவிடு. 84).

நோய்க்குணக்குறி nōy-k-kuṇa-k-kuṟi, *n.* <நோய்+குணம்+. See நோய்க்குறி. *Pond.*

நோய்க்குறி nōy-k-kuṟi, *n.* <id.+. Symptom of a disease; நோயின் அடையாளம். *Pond.*

நோய்க்கூறுபாடு nōy-k-kūṟupāṭu, *n.* <id.+. See நோய்க்குறி. *Pond.*

நோயாளிசாலை nōyāḷi-cālai, *n.* <நோயாளி+. See நோவாளிமடம். *Pond.*

நோலாமை nōlāmai, *n.* <நோல்-+ஆ neg. Unrepentance; செய்த பாவத்துக்கு வருந்தாமை. *R. C.*

நோலாவலை nōlāvalai, *n.* A kind of fishing net; மீன் பிடிக்கும் வலைவகை. (அபி. சிந். 1017.)

நோவாளிமடம் nōvāḷi-maṭam, *n.* <நோவாளி+. Hospital; வைத்தியசாலை. *Pond.*

ப்

ப்ரப்ருதி prapruti, *part.* <*prabhṛti.* Suffix meaning 'and others'; முதலானோர் என்னும் பொருளில் வரும் இறுதிநிலை. *ஸ்ரீ மதுரகவிப்ரப்ருதி ஸஜ்ஜனகுலடங்கலும்* (சுடு, 1, 3, 2).

ப்ரயோஜகம் prayōjakam, *n.* <*prayōjaka.* Epitome; சுருக்கம். *இனி ப்ரயோஜகத்திலே சொல்லிவிடுமென்று ப்ரதிபத்திக்கு விஷயமாகாது* (சுடு, 1, 1, 4).

ப

பக்கச்சுருள் pakka-c-curuḷ, *n.* prob. பக்கம்+. *Tinn.* 1. Additional presents made to a bridegroom by the bride's party; மணமகள் வீட்டாரால் மணமகனுக்கு அதிகப்படியாகக் கொடுக்கப்படுஞ் சம்பாவனை. 2. Presents made to bridegroom's relatives at a marriage; கலியாணத்தில் மணமகனின் உற்றருக்குச் செய்யுஞ் சம்பாவனை.

பக்கத்துக்குத்துக்கால் pakkattu-k-kuttu-k-kāl, *n.* <id.+. Queen-post; முகட்டுக் கையைத் தாங்குவதற்கு உத்திரத்தின்மேல் நிறுத்துங் கால். *Madr.*

பக்கநேத்திரம் pakka-nēttiram, *n.* cf. புக்கினேத்திரம். A kind of delirium; சன்னிவகை. (தஞ். சர. iii, 194.)

பக்கப்பத்தி pakka-p-patti, *n.* <பக்கம்+. Pent-house; பிரதானக்கட்டடத்தைச் சாரவைத்துக் கட்டப்படுந் தாழ்வாரம். *Nāñ.*

பக்கப்பழு-த்தல் pakka-p-paḻu-, *v. intr.* Redupl. of பழு-. To become very ripe; மிக முதிர்தல். பக்கப்பழுத்த கிழவன்முன்னே வெட்க மென்னடி (வள்ளி. கதை. Ms.).

பக்கப்பிறந்தநாள் pakka-p-piṟanta-nāḷ, *n.* <பக்கம்+. The day of one's natal star occurring in a month other than the month in which one was born; பிறந்தமாதமல்லாத மாதங்களில் வருஞ் ஜன்ம நட்சத்திரம். *Nāñ.*

பக்கப்பூ pakka-p-pū, *n.* prob. id.+. Decorating flower; ஒப்பனைப்பூ. (குறள், 1316, மணக்.)

பக்கம்வை-த்தல் pakkam-vai-, *v. intr.* <id.+. To put forth shoots from the stem; பக்கத்தில் முடிவெடித்துக் கிளையிடுதல். *Nāñ.*

பக்கமிடு-தல் pakkam-iṭu-, *v. intr.* prob. id.+. To ease; மலங்கழித்தல். *Loc.*

பக்காயம் pakkāyam, *n.* Tub; தொட்டி. *Loc.*

பக்கான் pakkāṉ, *n,* Shepherd koel; சாதகபட்சி. (யாழ். அக.)

பக்கிணம் pakkiṇam, *n.* <*bhakṣaṇa.* Confection; பட்சணம். (T. A. S. v, ii, 158.)

பக்கித்தட்டான் pakki-t-taṭṭāṉ, *n.* <பக்கி+. Dragon-fly; தட்டாரப்பூச்சி. *Nāñ.*

பக்கிழம் pakkiḻam, *n.* <*pakṣa.* Lunar fortnight; பக்ஷம். அபரபக்கிழத்து (T. A. S. v, ii, 158).

பக்தை paktai, *n.* <*bhaktā.* Woman devotee; பக்தியுள்ளவள். (தென். இந். க்ஷேத். பக். 313.)

பக்ரு pakru, *n.* <Arab. *fakhr.* Pride; கருவம். *Muham.*

பகடக்காரன் pakaṭa-k-kāraṉ, *n.* prob. பகடு+. Artful person; தந்திரக்காரன். (யாழ். அக.)

பகர்ச்சை pakarccai, *n.* prob. பெயர்-. Cooked food sent from the temple or palace to the houses of certain dignitaries, as a perquisite; கோயில் அரண்மனை முதலிய இடங்களினின்றும் மரியாதையாக அனுப்பும் எடுப்புச்சாறு. கோயிலிலிருந்து மூத்தபிள்ளை வீட்டுக்குப் பகர்ச்சை போகிறது. *Nāñ.*

பகல் pakal, *n.* <பகு-. 1. Unsociability; பிறரோடு கூடாமை. பகலென்னும் பண்பின்மை (குறள், 851). 2. Party; கட்சி. (தொல். சொல். 165, சேனா.)

பகல்விடுதி pakal-viṭuti, *n.* <பகல்+. Day lodging; பகலில் தங்குமிடம். (W.)

பகலாந்தை pakal-āntai, *n.* prob. id.+. A kind of owl; ஆந்தைவகை. *Pond.*

பகலி pakali, *n.* A disease of horses; குதிரைநோய்வகை. (அசுவசா. 111.)

பகவந்தன் pakavantaṉ, *n.* <*bhagavān.* Lord; பகவான். மூவருள் முதலான பகவந்தனியென்று கண்டும் (தூறறெட்டித். திருப்பு. 97).

பகற்கோயில் pakaṟ-kōyil, *n.* <பகல்+. Hall in the middle of a tank; நீராவிமண்டபம். (சீவக. 2860, உரை.)

பகாப்பிடுகு pakāppiṭuku, *n.* A title of the Pallava kings; பல்லவரது பட்டப்பெயர்களுளொன்று. (Insc.)

பகிர்கமி-த்தல் pakir-kami-, *11 v. intr.* <*bahis+gam.* To ease oneself; வெளிக்குப் போதல். பகிர்கமிக்குங் காலத்து நாய்க்குக் கொடுக்கின்றேமென நினைந்துவிட நல்லதர்மமாமோ (நீல கேசி, 223, உரை).

பகிர்ச்சி pakircci, *n.* <பகிர்-. Division; பகுதி. *Pond.*

பகுதி pakuti, *n.* <பகு-. 1. Administrative sub-division of a Taluq; தாலூகாவின் உட்பிரிவு. *Nāñ.* 2. That which belongs to a person; உரிமைப்பட்டது. தம்முடைய பகுதியல்லாதனவற்றை (குறள், 376, மணக்.).

பகுநாயகம் paku-nāyakam, *n.* <*bahu-nāyaka.* Plutocracy; வெகுநாயகம். பகுநாயகம் ஜகத்து என்கிறதைத் தவிர்த்துக் குறுகவிட்டு வைத்தார்களிறே சிலவேதாந்திகள் (திவ். திருநெடுந். 2, வ்யா. பக். 19).

பகுமதி pakumati, *n.* <*bahumati.* See பகுமானம். பகுமதி நிமித்தமாகப் போர்த்தே னென்னில் (நீலகேசி, 272, உரை).

பகுமானம் pakumāṉam, *n.* <*bahumāna.* High esteem, great respect; honour, dignity; பெருமதிப்பு. பாட்டொன்றே வென்ன பகுமானம் (பஞ்ச. திருமுக. 924).

பகைச்சரக்கு pakai-c-carakku, *n.* <பகை+. Antidote; மாற்றுச்சரக்கு. *Loc.*

பங்கலா paṅkalā, *n.* <E. Bangalow; பங்களா. *Pond.*

பங்காளி paṅkāḷi, *n.* <பங்கு+. An officer whose duty was to prepare a record of all the holdings in a village; ஊரார் நிலஉரிமைகளை வகுத் தெழுதும் உத்தியோகஸ்தன். (கடம்பர். உலா, 50.)

பங்கீடு paṅkīṭu, *n.* <id.+. Account; கணக்கு விவரம். குடிகளுக்குப் பங்கீடு சொல்லப் பயக்கொண்டு (சரவண. பணவிடு. 133).

பங்கு paṅku, *n.* prob. பகு-. 1. District; ஜில்லாப்பகுதி. *Pond.* 2. Turban; தலைப்பாகை. சிவகங்கை யொர்பங்காக (விரிஞ்சை. முருகன்பிள் ளைத். தாலப். 1).

பங்குவழியினாம் paṅku-vaḻi-y-iṉām, *n.* <பங்கு+. Land granted to a body of persons in common, for the encouragement of cultivation; வியவசாய விருத்திக்காக ஒரு கூட்டத்தா ருக்கு இனமாகக் கொடுக்கும் நிலம். (R.T.)

பங்கோற்பயிண்டு paṅkōṟpayiṇṭu, *n.* Imprisonment in a jail; ஜெயிலில் அடைக்கை. பங்கோற்பயிண்டு பருவிலங்குமாட்டி (பஞ்ச. திருமுக. 1732).

பச்சாளை paccāḷai, *n.* A disease of crops; பயிர்கட்டுவரும் நோய்வகை. *Tinn.*

பச்சிமத்தோன் paccimattōṉ, *n.* <*paścima.* Saturn; சனி. (சாதகசிந். 7.)

பச்சை paccai, *n.* 1. See பச்சாளை. (யாழ். அக.) 2. A shrub; பூவேகை. (புட்ப. 5.)

பச்சைக்கல்யாணி paccai-k-kalyāṇi, *n.* <பச்சை+. One of the seven mythical horses of the Sun's chariot; சூரியன் தேர்க்குதிரைகளு ளொன்று.

பச்சைநரம்பு paccai-narampu, *n.* <id.+. Vein; உடலில் அசுத்த இரத்தம் ஓடுங் குழாய். *Loc.*

பச்சைப்பணம் paccai-p-paṇam, *n.* <id.+. A tax; வரிவகை. (Pudu. Insc.)

பச்சைப்பருப்பு paccai-p-paruppu, *n.* <id.+. Split green gram; சிறு பயற்றம்பருப்பு. *Loc.*

பச்சைப்பாக்கு paccai-p-pākku, *n.* <id.+. Unripe or undried areca-nut; உலரவைக்காத பாக்கு. (W.)

பச்சைமிளகாய் paccai-miḷakāy, *n.* <id.+. Green chilli; பழுக்காத மிளகாய். *Colloq.*

